மல்லிகை

அட்டைப்படம் : டொமினிக் ஜீவா

ஒன்பதாவது ஆண்டுமலர் - ஆகஸ்ட், '73 விலை: 1/-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Social, Philosophical, and Political

Books From U. S. S. R.

	Rs. cts.
Society and economic relation—Progress Publishers	4-00
History of realism—Boris Suchkov	6-00
Morality and politics—A. Titarenko	2-00
Politico economic problems of capitalism—Y. Varga	4-00
A short course of political economy—L Leontyev	4-50
Socialism and Capitalism score and prospects —Progress publishers	3-25
The World socialist system and anti - Communism—Progress Publishers	3-50
Marxism—Leninism on proletarian internationalism —Progress Publishers	4-50
Leninism and contemporary problems of the Transition from capitalism to socialism—Progress Publishers	3-75
The third world—Group of authors	3-00
The scientific management of Society —V. G. Afnanasyev	4-00
Socialist Society: scientific principles of development G. Glezerman	3-00
Categories and laws of the political economy of Communism -A. Rumyantsev	4-00
Modern history of the Ar countries V Lutsky	4-50

PEOPLE'S PUBLISHING HOUSE,

174, Kum an Ratnam Road.

COLOMBO - 2

Telephone : 36111

உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோர்.

★ சுவையான
★ சுத்தமான
★ சுகாதாரமான,

கொடுக்கும் பணத்திற்கு மனத்திருப்தியான
சிறந்த உணவு தயாரிப்பவர்கள்

ராதா லாட்ஜ்

151, 5ம் குறுக்குத் தெரு,
கொழும்பு 11.

எத்தனையோ கடைகளில்
நீங்கள் சாப்பிட்டிருக்கலாம்
என்றாலும் 'ராதா' வின் சுவையே சுவை.

RADHA LODGE

151, FIFTH CROSS STREET,

Colombo 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்கா ஒயில்மன் ஸ்ரோர்ஸ்

80, பாங்ஸால் வீதி,

கொழும்பு 11.

★ சாய்ப்புச் சாமான்கள், அழகு சாதனங்கள்,

★ சோப் தினுசுகள், எண்ணெய் வகையருக்கள்,

★ டின்னில் அடைக்கப்பட்ட உணவு வகைகள்,

★ சுவைமிக்க குளிர்பானங்கள், பிஸ்கட் வகைகள்,

★ பழ வர்க்கங்கள்

○ சுருட்டு, பீடி, புகைபிடி சாதனங்கள்.

○ மற்றும் சகலவிதமான நாகரீக பொருட்களுக்கும் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

LANKA OILMAN STORES

80, Bankshall Street,

COLOMBO 11.

★ ஸ்பெஷல் பீடா ★

பிரத்தியோகமாக எம்மால் தயாரிக்கப் படும் ஸ்பெஷல் பீடா கொழும்பு மாநகரி லேயே மிகப் பிரபலம் வாய்ந்தது என் பது இலங்கைப் பிரசித்தம்.

'ஆடுகல் பாடுதல் கித்திரம்-கவி
யாதியி னாய கலைகளில்- உள்ளம்
ஈடுபட் டென்றும் நடப்பவர்-பிறர்
ஈனநி லைகண்டு துள்ளுவர்'

மல்லிகை

ஒன்பதாவது ஆண்டுமலர்

ஆகஸ்ட், '73 ஜூலை: 1/=



அட்டைப் படம்:

வட மாகாணத்திற்கென்றே தனித்துவமாக விளங்கும் இக் காட்சியை இன்று நாம் காணமுடியாது. புதிய தொழில் அமைப் புக்களின் தோற்றத்தினால் இக் கண்கொள்ளாக் காட்சி, மறைந் தொழிந்து போய்விட்டது.

அன்றன்றூட உடல் உழைப்பினால் மெய் வருந்தி, உடல் சோர்ந்து போய்வரும் அன்றூடம் காய்ச்சிகளுக்கு இப் பானம் மதுவல்ல; மாமருந்து பனம் பானம்!

'ச்..... சா! தேவர்கள் பருகும் சோமபானம் எனப் புராணங் களில் சொல்லப்படுகின்றதே அது இப்படித்தான் இருக்குமோ?'

மறைந்து வரும் இக் காட்சியை ஞாபகப்படுத்த அட்டையில் அதைப் பிரசுரிக்கிறோம்.

படம் எடுத்தவர்: எஸ். சிங்கநாயகம்

மணக்கும் 'மல்லிகை'
கதை, பெயர்,
கவிதை, கட்டுரை,
கருத்து
எல்லாம் ஆக்கியோர்
தனித்துவம்;
பொறுப்பும் அவரே!

மல்லிகை
ஆசிரியர் டொமினிக் ஜீவா
234- A கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்
(இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பீரமான எதிர்காலத்திற்காக

நம்மை நாமே தயார்ப்படுத்துகின்றோம்!

எட்டு ஆண்டுகளைக் கடந்து ஒன்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், மல்லிகையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்காக உதவிய, ஒத்துழைத்த, ஆதரவு காட்டிய சகலரையும் ஒரு கணம் எண்ணிப் பார்க்கின்றோம்.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் எமது தனித் தனியான நன்றி.

கஞ்சிகை நடத்துவதென்பதே சிரம சாத்தியமான செயல் எனப் பயந்து, பயங்காட்டிக் கொண்டிருந்த இன்றைய ஈழத்து உலகில் தொடர்ந்து எம்மால் இந்தச் சூழலில் எதிர் நீச்சலடிக்க வைத்த சக்திகள் தான் எவை.

நிச்சயமாகச் சொல்லுகின்றோம் — மக்கள்! — மக்களேதான்!

நல்லெண்ணமும், இலக்கிய ஆர்வமும், நமது தேசத்திலும் தாராளமான கலைஞர்கள், எழுத்தாளர்கள் உள்ளனர். அவர்கள் தக்க மதிப்புப் பெறவேண்டும் என இந்த மண்ணை நேசித்தவர்களின் பக்கபலமே மல்லிகையின் ஜீவத் துடிப்பு — ஆத்ம மூச்சு!

மக்களிடையே வேர்பரப்பிப் பற்றிப் படர்ந்து வருகிறது மல்லிகை.

தொல்லை மிகுந்ததும் சிக்கலானதும் நெருக்கடிக்கு ஆட்பட்டதுமான காலத்தைக் கடந்து சொந்தக் காலில் பலங்கொண்டு நிற்கக்கூடிய தைரியப் பெருமிதத்துடன், கம்பீரமான எதிர் காலத்தை மிக நம்பிக்கைபுடன் அணுகக் காத்திருக்கின்றோம்.

தேன் நிலவு இலக்கியம் படைப்பதல்ல மல்லிகையின் நோக்கம். மாறுக புதிய, சத்துமிக்க, தேசியத்துவமான, சர்வதேசியத்திற்குக் குந்தகமில்லாத, முற்போக்குத் திசைவழியில் எதிர்காலச் சந்ததியினரை வழி நடத்திச் செல்லக்கூடிய வர்க்க தரிசன இலக்கியங்களைப் படைப்பதும், படைப்பவர்களை ஊக்குவிப்பதும், இனங் கண்டு கொள்வதுமே மல்லிகையின் எதிர்காலக் குறிக்கோள்.

அப்படியானால் சென்ற காலங்களில் இப்படியாகச் செயல்படவில்லையா என்றொரு நியாயமான கேள்வி எழக் கூடும்.

இருளால் ஏற்பட்ட அறியாமைக்கும், இருளை வளர்க்கும்— மதிக்கும் — அறியாமைக்கும் எதிராகக் குரல் கொடுத்து ஒரு புதிய இலக்கிய ஜீவ வித்தை இன்றைய தலைமுறையினரின் நெஞ்சங்களில் விதைப்பதையே — என்ன கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் — தனது முதல்தர நோக்கமாகக் கொண்டு இயக்கம் நடத்தி வந்துள்ளது மல்லிகை.

முதற் கட்டம் மாறி, இரண்டாவது கட்டம் முடிந்து மூன்றாவது கட்டத்தின் ஆரம்பப் படிவாயிலுக்குள் மல்லிகை நுழைந்து கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆத்ம சுத்தத்துடன் நம்மை நாமே இனங்காட்டி, சுத்திகரிக்க வேண்டியவைகளைத் தீர்க்க திருஷ்டியுடன் சுத்திகரித்து, வளர்ந்து வரும் உலக இலக்கியத்தில் நமது தகைமைகளையும் அங்கீகரிக்கப் போராடுவதே மூன்றாவது கட்டத்தில் நமது நிலைபாடு.

சூரன் திருவிழாவில், சூர சம்ஹார தினத்தன்று சுப்பிரமணிய சுவாமியின் வேலாயுதம் முன்னே செல்லச் செல்ல, சூரன் பின்னடிக்கிற மாதிரி, முற்போக்கு இலக்கியக் கருத்துக்கள் காத்திரமாகவும், ஆழமாகவும், நடைமுறை பூர்வமாகவும் மக்கள் மத்தியிலே வேர் பாயப் பாய, தத்துவ ரீதியாகவும், நிலப்பிரபுத்துவ கருத்துக்களின் மிச்ச மீதங்களில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளத் திராணியற்ற சிலர் தற்காலிகமாகத் தமது குரலைத் தாழ்த்தித் தாழ்த்திப் பின்னடிக்கிறார்கள்.

இவர்களை - இவர்களது நச்சு இலக்கியக் கருத்துக்களை முறியடிப்பதில் மல்லிகை கடந்த காலங்களில் கணிசமான பங்கு வகித்துள்ளது.

முற்போக்கு எழுத்தாளர்கள் மத்தியில் என்னதான் கருத்து வித்தியாசம் இருந்தாலும், அவர்களின் சென்ற காலச் சாதனைகளுக்கு நாடே இன்று தலை வணங்குகிறது. அம் முற்போக்கு எழுத்தாளர்களின் இதய மூச்சாக - உயிர்க் குரலாக உத்தியோகப் பற்றற்ற முறையில் மல்லிகை தனது கடமையைச் செவ்வனே செய்து வந்துள்ளது.

எட்டாண்டுகளின் கணிப்பீடு எனச் சுருக்கமாக ஒரு மதிப்பீடு செய்தால் நியாய நெஞ்சங்கள் மல்லிகையின் காலத் தேவையையும், அது அக் காலத் தேவையைச் சரியான திசைவழியில் சென்றடைய ஊசலாட்டமற்ற போக்கைக் கடைப்பிடித்து வந்துள்ளது என்பதை ஒப்புக் கொள்ளவே செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல் நுனியில் அழுக்குப் பட்டுவிடுமே எனப் பயந்து, இலக்கியத் துறையில் நேரடியாக இறங்கத் துணிச்சலற்று கிளிச்சொல் இலக்கியம் பண்ண முனையும் உபதேசிமார்களுக்காக அல்ல, களத்தில் இறங்கிப் போராடத் துணிவுடன் முன்வரும் சகலருக்கும் இம் மேடை சரியாகப் பயன்பட்டு வந்துள்ளது. நவீன கருத்துக்களை ஓரளவு மக்கள் மத்தியில் கொண்டு சென்றுள்ளது மல்லிகை.

இதற்கு அடுத்ததாக அடுத்த கட்டத்திற்கு நம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ளுகின்றோம்!

அர்த்தமற்ற பழமையை — பத்தாம் பசலித்தனமான கருத்துக்களை - கட்டிக் காக்குமாறு மக்களுக்குக் குரல் கொடுப்பவர்கள் மக்களுக்கு மக்கள் எதிர்கால வாழ்க்கையை மறுப்பவர்கள் ஆவர்.

நச்சு இலக்கியத்தின் சமூக வேர்கள் எங்கே கிளை விடுகின்றன என்ற போதம் நமக்குத் தெரியாத தொன்றல்ல. அதற்காக அதி சூரத்தனமாகக் குரலெழுப்பிப் பிரச்சினையைக் குட்டை குழப்பத் தெரியாது எமக்கு.

பிரச்சினைகளின் இதய நாளத்தையே தொட்டுக் குடைந்தெடுக்கக் கூடிய இளைய தலைமுறையினர் கடல் கடந்திருந்தும் நமது இக் கருத்துக்களை எதிரொலிக்கின்றனர்.

நமது கருத்துக்களுக்குப் பின்னல் பல இதயங்கள் பேசுகின்றன.

இத்தனை உறவுகளையும், பலத்தையும், தார்மீக ஆதரவுகளையும் நாம் எங்கிருந்து பெற்றுக் கொண்டோம்?

நிச்சயமாக நமக்குத் தெரியும். நமது தேசத்தில் நல்லிலக்கிய இதயங் கொண்டவர்கள் நிறையப் பேர்கள் இருக்கின்றனர், அவர்கள் அத்தனை பேர்களினதும் நெஞ்சக் கதவுகளை நாம் தட்டித் திறந்து விட்டோம் என ஒப்புக் கொள்ளாது போனாலும் கூட, அதில் கணிசமான சுவைஞர்களின் இதயங்களில் நாம் நிரந்தரமாக ஓர் இடத்தைப் பிடித்து விட்டோம் என்பதைப் பூரணமாக இந்தக் கட்டத்தில் ஒப்புக் கொள்ளுகின்றோம்.

எத்தனை எத்தனை தொடர்புகள்!— எத்தனை யெத்தனை ஆதரவுகள்!— நம்மைத் தேடித் தினசரி அலுவலகத்திற்கு வரும் இலக்கிய ஆர்வலர்களின் வகை வகைதான் என்ன!

வேறெவற்றையும் விட, இவைதான் மல்லிகையின் செல்வம்!

ஆரம்பம் தொட்டே நாம் தூக்கிப் பிடித்த கொடி, இலக்கியப் பதாகை இன்று வெற்றிப் பெருமிதத்துடன் பறப்பதைத் துலாம்பரமாகப் பார்க்கின்றோம்.

காலத்திற்குத் தேவையான உயிரும் புஷ்டியும் மனுக்குல ஆரோக்கியமுமுள்ள கருத்துக்களை ஜீவ சக்திமிக்க தமிழில் வெளிக் கொணர வேண்டுமென்பதே நமது பேரவாவாகும்.

அழகுக்கு அழகு செய்யும்
உடை வகைகளுக்கு

உங்கள் தேவைகளைச் சொல்லுங்கள்!
பூர்த்தி செய்வது

ரமணி டெக்ஸ்டைல்ஸ்
166, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

★ நவீன வியாபார உலகில்
கவர்ச்சியும் மிக இன்றியமையாதது

★ அழகான அட்டைப் பெட்டிகள்
★ பாவனைக்கேற்ற கைப்பைகள்

விஜயா இன்டஸ்ட்ரீஸ்
236, பழைய சோனகத் தெரு,
கொழும்பு 12.

நேர்த்தியாய்ப் புத்தகம்
கட்டுவோர் என்று பலரும்
புகழும் ஸ்தாபனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதெல்லாம் நவநாவரீக யுவர்களும், யுவதிகளும் போகும்போது எல்லோரும் அவர் களின் பாதங்களையே பார்க்கிறார்கள். காரணம் அவர்கள் 'சந்திராவில்' வாங்கிய காலணிகளை அணிந்திருக்கிறார்கள்.

சந்திராஸ்

62, 63 நியூ மார்க்கட், ★ யாழ்ப்பாணம்.

நவநாகரீக டிசைன்களில் காலத்திற்கேற்ற காலணிகள் சகாயமான விலைக்குக் கிடைக்கின்றன.

★ டி. எஸ். ஐ, ★ இலஸ்ரோ ★ பாட்டா, ★ சின்வா போன்ற சப்பாத்து, செருப்பு வகைகளுக்கும் மற்றும் உள்ளூர்த் தயாரிப்புகளுக்கும் சிறந்த இடம்

சந்திராஸ்

புகைப்படம் சரித்திரத்தின் சின்னம்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உங்களுருவம் மாறியிருக்கலாம்,

இப்படியே அடுத்தடுத்த ஆண்டுகளிலும் நடந்த வண்ணமே இருக்கும்.

காலத்திற்குக் காலம் உங்களது கவர்ச்சியான உருவத்திற்கு ஏற்ப உங்களைப் பார்க்க விரும்புகின்றீர்களா? அப்படியானால்

எப்பொழுதும் நினைவில் வைத்திருங்கள்.

பாரத் ஸ்டூடியோ

82|1 கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி 252

மல்லிகை—
எட்டாம் ஆண்டுக் கணிப்பீடு

முருகையன்

தமிழ்ச் சஞ்சிகை இறக்கு மதிக் கட்டுப்பாட்டைத் தொட ர்ந்து, 'கிசு கிசு' என்று பல 'கலை இலக்கிய' வெளியீடுகள் ஈழத்திலே தலை யெடுத்தன. அவைகளிற் பல ஓய்வெடுத்துக் கொண்டு விட, 'மல்லிகை' தனது கூட்டாளிகளை இழந்த பின்பும், தனித்துத் தொடர்ந்து பணிபுரியக் காத்திருக்கிறது. 'தமிழமுது', 'அஞ்சலி', 'மலர்' 'கற்பகம்' போன்ற இதழ்கள் ஓய்ந்து விட்டமை எமது எழுத் துலகில் நேர்ந்துவிட்ட துக்ககர மான - துர்ப்பாக்கிய மான - நிகழ்வே ஆகும். அதே சமயத் தில் 'மல்லிகை'யின் தொடர்ச்சி யான இலக்கியப் பணி இடை யீடில்லாமல் நிறைவேறி வருவது கலை—இலக்கியச் சுவைஞர் க ளுக்கு ஆறுதலாகவும், தேறுத லாகவும் உள்ளது; அப்பணியின் பெறுமதியும் வேறு சஞ்சிகைகள் செயலிழந்து போனமையால் ஏற் பட்ட தனிமை காரணமாகப் பன்மடங்கு பெரிதாகித் தோற் றம் தருகிறது. இந்தச் சூழ்நிலை யில், 'மல்லிகையின்' எட்டு வரு டச் சாதனைகளைச் சுருக்கமாக வேனும், மதிப்பீடு செய்வது, நிச்சயமாக இன்றியமையாத ஒரு வேலையே ஆகும்.

'மல்லிகை' ஆசிரியர் டொ மினிக்ஜீவா அடிக்கடி வற்புறுத்தி வந்திருப்பதுபோல, இலக்கிய எழுச்சியினால் உந்தப்படும் வயி ரம் பாய்ந்த ஒரு பண்பாட்டியக் கமே மல்லிகையின் பிரதான பணியாக இருந்து வந்துள்ளது.

பாரதியின் வரிகளைத் தாரக மந்திரமாகக் கொண்டுள்ள மல் லிகை, படைப்பாளியின் முக்கி யத்துவத்தையும் மகோன்னதத் தையும் வற்புறுத்தி வந்துள்ள தோடு, அப்படைப்பாளிகளின் உரிமைகள் மீதும், பிரச்சினைகள் மீதும் மக்கள் கவனத்தைப்படிய வைப்பதில் இடையறாது விழிப் புடன் ஈடுபட்டும் வந்துள்ளது. மல்லிகையில் வெளியாகிய ஆசி ரியத் தலையங்கங்களும், அட்டை முகப்புப் படங்களும், அறிமுகக் கட்டுரைகளும் இந்தத் திசையி லான சிறப்பான முயற்சிகளா கும். நாடக நெறியாளராகிய சுகைர் ஹமீட் பற்றி ஏ. ரகு நாதன் எழுதியிருந்த அறிமுகம், கலை எழில் செறிந்த ஒரு நுட்ப மான ஆக்கமாகவே மிளிர்ந்தது என்று சொல்லவேண்டும். காலம் சென்ற பேராசிரியர் செல்வ நாயகம் பற்றிச் சிவத்தம்பி எழு திய கட்டுரையோ மட்டுப்பாட் டுடன் அளந்தெடுந்த வார்த்தை கோவையினால், மறைந்த ஆசா னுக்கு ஒரு தலை மாணாக்கன் செலுத்தும் காணிக்கையாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளிகள், கலைஞர்கள் ஆகிய மனிதர்களை மையமாகக் கொண்டு எழுந்த எழுத்தோவியங்கள் ஒரு புறமாக, அந்த மனிதர்களின் கைவண்ணங்களாகிய இலக்கியப்படையல்களையும், கலை ஆக்கங்களையும் எடுத்து அலசும் கட்டுரைகளும், அறிமுகங்களும் 'மல்லிகையின்' எட்டாவது ஆண்டுக் காலத்தில் இடம் பெற்றுள்ளன. நம் அண்டை மொழியான சிங்களத்தில் எழுந்த எழுத்தாக்கங்களையும், இலக்கிய இயக்க நெறிகளையும் ஓரளவுக்கு அறிமுகம் செய்து வைப்பன எஸ். எம். ஜே. பைஸ் தீனின் கட்டுரைகள். சிங்களம் முதலான பிறமொழிக் கதை கட்டுரைகளை மொழிபெயர்த்து வழங்கும் பணியும் இந்த எட்டாவது ஆண்டிலே தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. நீள்கரை நம்பி, தம்பி ஐயா தேவதாஸ், சு. மகாலிங்கம், ஏ. ஜெ. கனகரத்னா, கே. எஸ். சிவகுமாரன் போன்றோரின் மொழி பெயர்ப்பு ஈடுபாட்டினால், தமிழ் வாசகர்களின் அனுபவப் புலம் விரிவடைவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஈழத்தின் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்தும், தென்னகத்திலிருந்தும் அவ்வப்போது கிடைத்து 'மல்லிகை'யில் வெளிவரும் செய்திக் கடிதங்களும், புதின அறிக்கை கட்டுரைகளும், விமரிசன மதிப்பீடுகளும் கூட, வாசகனின் எழுத்துலகப் பிரக்ஞையினை விரிவு செய்வதற்குப் பெரிதும் உதவியிருக்கும்.

ஆய்வுகள் என்றும் விமரிசனம் என்றும் பேசும்போது எடுத்த எடுப்பில் நினைவுக்கு ஓடி வருவது க. நா. சு பற்றி க. கைலாசபதி எழுதிவரும் தொடரே ஆகும். இத்தொடர் இப்பொழுது ஆரம்பக் கட்டத்திலேதான் நிற்கிறது: என்றாலும், சில விமரிசன உலகத்து மாயைகளைப் பிட்டுக்காட்டி, முழுமையானதொரு கருத்துத் தெளிவுக்கு வழிகோலப் போகிறது என்பதற்கான அறிகுறிகள் இப்பொழுதே தோன்ற ஆரம்பித்து விட்டன: இத்தொடரின் வளர்ச்சியினை எல்லாரும் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். வானமாமலை பற்றி கா. சிவத்தம்பி எழுதியுள்ள வரலாற்றுப்பாங்கான குறிப்புகளும், எம்: சிறீபதியின் கட்டுரையொன்றும் இவ்வாண்டில் வெளிவந்துள்ளன. தமிழகத்திலே கூடத் தமிழ்மொழி மூலம் கிடைக்காத உயர்தரக் கல்வி இங்கு — நமது இலங்கையிற்—கிடைத்தமையினால் எமது எழுத்துகளுக்குக் கிடைத்த சிறப்பு வாசகர்களின் தன்மையையும், சமதருமப்போக்குடைய ஆட்சியினால் முற்போக்கு எழுத்துக்களுக்குச் சாதகமான சூழலொன்று இங்கு நிலவுவதையும் சிறீபதி தொட்டுக் காட்டியுள்ளார்: விமரிசனப் பாங்குள்ள வேறு கட்டுரைகளை, சபா. ஜெயராசாவும், மு. தளையசிங்கமும் எழுதியிருந்தார்கள். ஜெயராசாவின் கட்டுரையில், தொழிற் பாகுபாடுகளே சிறுகதை யின் தோற்றத்துக்கு அடிப்படை என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இக்கட்டுரையில், போதிய எடுத்துக் காட்டுகளும், உதாரண விளக்கங்களும் தரப்படாமையால், கருத்துத் தெளிவு முழுமையடையாமல் நின்று விட்டது.

சென்ற ஆண்டு மலரில் மு. தளையசிங்கம் எழுதியு கட்டுரை உரையாடல் வடிவில் அமைந்தது. கலை இலக்கியம் புனைவாகவும் கற்பனையாகவும் இது வரை இருந்த நிலை மாறி புதிய அடிப்படையில் இனிப் பிறக்க வேண்டும் என்ற கருத்தொன்று அங்கே கூறப்பட்டது. சமய, தத்துவ சிந்தனைகளில் வயப்பட்டு இலட்சியக் கனவுத் தீர்க்க தரிசன வாக்குகளை அருளும் நவீன சித்தராகத் திகழ்ந்த அவருடைய அக்கட்டுரை திட்ட வட்டமாக, 'இப்போதையஇலக்கிய வடிவங்கள் திருப்திகரமானவையா?' என்ற அடிப்படைக் கேள்வி ஒன்றை எழுப்பியது. அக்கேள்வி எழுந்த நோக்கமும் அது எழுதற்கு ஆதாரமான காரணிகளும், பிரச்சினைக்கு உரியவை. ஆனால் அக்கேள்வி—'இப்போதைய இலக்கிய வடிவங்கள் திருப்திகரமானவையா?' என்ற கேள்வி, வேறொரு விதத்தில் முற்போக்கு இலக்கியத்துக்கு முக்கியமான ஒன்றாகவே தென்படுகிறது.

குறிப்பாக, இக்காலத்துச் சஞ்சிகைகளுக்குரிய சிறப்பான இலக்கிய வடிவமாகிய சிறுகதையைப் பொறுத்தவரையில் இக்கேள்வி பொருண்மை மிக்க ஒன்றாக உள்ளது. மல்லிகையில் வெளிவரும் சிறுகதைகளை அணுகி நோக்கியபோது பொதுப்பண்புகள் சிலவற்றை அவற்றிலே காணக்கூடியதாய் இருந்தது. பல்வேறுபட்ட பொருளியல் அந்தஸ்தை உடைய பல்வேறு தனிப்பட்ட மனிதர்களிடையே தோன்றும் இசைவின்மைகள், முரண்பாடுகள், திருப்தியீனங்களின் சித்திரமாகவே அவை பெரும்பாலும் உள்ளன. அனேகமான சிறுகதைகள் தனிமனிதன் ஒருவனின் அல்லது இரண்டொருவரின் கதைகளாகவே உள்ளன. வேறொரு விதத்திலே சொல்லப் போனால், இவை சமுதாயமேற் பரப்பிலே தோன்றும் சிறுமுரண்களையும் பூசல்களையும் விளக்குவனவாக உள்ளன. பெரு வர்க்கத்தின் உட்பிரிவுகளாக உள்ள உப வர்க்கங்களின் தளம்பல்களே இவற்றிற் கவனிக்கப்பட்டுள்ளன. இது இவ்வாறு நேர்வதற்கு, எங்கள் நாட்டிலும் சமூகத்திலும் உள்ள இன்றைய சிறப்பான சில இயல்புகளே காரணமாக உள்ளன என்று தோன்றுகிறது. எமது சமூக வளர்ச்சியின் இன்றைய கட்டத்தில் ஒடுக்கப்படும் வர்க்கத்தின் எதிரியாகிய ஒடுக்கும் வர்க்கத்தையும், சக்திகளையும் இனங்கண்டு கொள்வது சிக்கலானதொரு பிரச்சினையாகி வருகிறது. மறைமுகமான சூத்திரக் கயிறுகளும், ஏகாதிபத்திய வலைப்பின்னல்களும், மிக நுட்பமாகவும் தந்திரோபாய சாமர்த்தியத்துடனும் செயற்பட்டு வருகின்றன. நவகொலனி வாதம் என்ற மாயப் பிசாசும் தொட்டுப்பிடிக்க இயலாது நழுவிச் செல்வதில் மிகுந்த ஆற்றல் பெற்றதாக உள்ளது. ஆகவே தான், இன்றைய கதாசிரியனுடைய கதாநாயகர்கள் கண்முன்னே நடமாடும் மனிதர்களாக 'உள்ளிருக்கும் உப்புக்கும், ஒரு வேளை வெற்றிலைக்கும், அள்ளிப்பருக அரை வயிற்றுக் கஞ்சிக்கும்' ஆலாய்ப் பறக்கும் சாதாரண மனிதர்களாக ஆகிவிட்ட அதே வேளையில், கதா பாதகர்களாகிய வில்லன்களோ கண்காணாத அருவங்களாக மறைந்து திரிகிறார்கள். இந்த நிலையில், உண்மையான 'வில்லன்களை' அயலிடையிலே திரியும் தனிமனிதர்களாக இறுகச் செய்து அடையாளங்காட்டுவதும், சுட்டியறிவதும் சிரமமான காரியங்களாக உள்ளன.

அதனாலே தான் போலும் நமது சமுதாயக்கோலத்திலுள்ள பிரதான முரண்பாடு கலைஞர்களின் கைக்கு வசமாகாமலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பி நழுவி ஓடிக்கொண்டிருக்கிறது. இவ்வாறான நழுவலுக்கு நம் கலையுருவங்களின் மரபுரீதியான குணம்சங்களும், வரையறுப்புகளும், இலக்கணங்களும் மறைமுக ஏதுக்களாக உள்ளன. தனிமனித உணர்வூற்று வெளிப்பாடாகிய சிறு கதைகள் பல ஆத்ம விசாரங்களாகவும், தனியாட்களின் குரூர வசீகர அகவிசித்திர ஓவியங்களாகவும் இருப்பதை நாம் காண்கிறோம். இதனால் மூடுமந்திர பூடகப் புதிர்களே உயர் இலக்கியங்கள் என்று மயங்கும் போக்கும் நம் ஒரு சிலரிடம் உண்டு. அப்படியான கதைகள் 'மல்லிகை'யில் அதிகம் வெளிவருவதில்லை எனினும், கி. சுதந்திரராஜாவின் 'ஒரு நதியின் புகலிடம்' என்ற கதையின் பகுதிகள் சில அவ்வாறான பிரதிபலிப்பைக் காட்டுகின்றன. இவ்வாறான அகவொடுக்கம் என்ற படுகுழிக்குள்ளே கதாசிரியர்கள் நுழைந்தொழியாமல் தப்புவதற்கு, பரந்த களத்தினைக் கொண்டதான 'நாவல்' என்ற துறையைச் சரணடைவதே தக்க வழி என்பாரும் உளர். ஆனால், நாவல்களின் பருமன் அவற்றின் ஒரு பலவீனம் என்றும் கூறலாம். உதாரணமாக 'மல்லிகை' போன்ற ஒரு சஞ்சிகையில் நாவல்கள் வெளியாவதற்குத் தடையாக உள்ளது, அவற்றின் பருமனே ஆகும். வாசகர்களின் நேரத்தையும், பொறுமையையும் பெருமளவுக்கு வேண்டி நிற்பன நாவல்கள். ஆகவே தான் சிறு கதைகளின் மட்டுப்பாடுகளைக் கடந்து நிற்பதுடன், நாவல்களின் வசதியீனங்களையும் வெட்டிக் குறைத்த புதுவகையான கதைகள் சாத்தியமா என்ற கேள்வி எழுகிறது. நவம்பர் மல்லிகையில் வெளியாகியுள்ள நந்தினியின் கதை ஒரு பலன்மிக்க திசைவழியைச் சுட்டுகிறது என்று தோன்றுகிறது. வழமையான சிறு கதைகளில், பிரதான கதாபாத்திரம் 'நான் நான்' என்று பேசிக்கொள்ளும். இல்லையானால் ஓர் 'அவன்' பற்றியோ, 'அவள்' பற்றியோ தான் அனேகமான சிறுகதைகள் இருக்கும். ஆனால் நந்தினி எழுதிய 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' என்ற கதையில், ஒரு குழுவைச் சேர்ந்த அனைவருமே கதாநாயகர்களாக உள்ளனர். இவ்வாறு, தனியாள் வேறுபாடுகளை மேவி நிற்கும் ஒரு கூட்டுணர்வையே கதைகளின் இயக்க விசைகளாக அமைக்கலாமோ என்று பரிசீலனை செய்து பார்ப்பது நல்லது. நந்தினியின் கதையில் இவ்வாறான கூட்டுணர்வுப்பாத்திர உத்தியினால் கிடைக்கக்கூடிய அதிபட்ச பலன் முழுவதும் பெறப்பட்டுள்ளது என்றோ, அது ஓர் அதி உன்னத கதை என்றோ நாம் சொல்லவில்லை, சரியானதொரு திசையின் தடம் நந்தினியின் காலடிகளிலே தட்டுப்பட்டுள்ளது என்று தோன்றுகிறது. 'மல்லிகையில்' இனி எழுதப் போகிறவர்கள் ஒரு வேளை இந்த வழியில் முன்னேற முயலக்கூடும்.

இனி வருங்காலத்துக் கதையுருவம் பற்றிய எதிர்பார்ப்புகளை ஒரு புறம் வைத்துவிட்டு, ஏற்கனவே உள்ள உருவத்தில் வார்க்கப்பட்டுள்ள சிறுகதைகளைப் பார்ப்போமானால், சென்ற ஆண்டில் திக்குவல்லை கமால் பல கதைகளை எழுதியுள்ளார். மேலே குறிப்பிட்ட உபவர்க்க இசைவின்மைகளை இவர் முற்போக்குக் கண்கொண்டு பார்த்துத் திறம்பட எழுதியுள்ளார் என்றே கூறுதல் வேண்டும். ஆயினும்,

கடிதம்

22-7-73 ல் எழுத்தாளர் நண்பர் சிலர் வல்லிக்கண்ணன், தி. க. சி, கி. ராஜநாராயணன், வண்ணதாசன், (கல்யாணஜி) கலாப்பிரியா, மகாகணபதி, பூமணி, தேவதச்சன் - போன்றோர் எனது இல்லத்திற்கு வந்திருந்தனர்.

ஒரு நாட்பொழுது மிகச் சுவையாக இலக்கிய மணத்துடன் கழிந்தது. மல்லிகையைப் பற்றியும் உங்களைப் பற்றியும் நீண்டநேரம் பேசினோம். பாலதண்டாயுதத்துடன் உங்கள் பேட்டியை எல்லோரும் ரசித்துப் படித்தார்கள்.

ஆ. குருசுவாமி

இவரது கதையில் வரும் உரையாடல்கள், வாசிப்பு ஓட்டத்துக்குத் தடங்கலாகவே உள்ளன. திரிபுகளும், மருவல்களும் மலிந்த இவ்வுரையாடல்கள் யதார்த்தப் பண்புள்ளவை என்பது உண்மை தான். ஆனால் வாசகர்களை வருத்தும் மொழி நடையினால் வாசகர்கள் ஒரு கதாசிரியனைக் கண்டு விலகி ஓட நினைப்பார்களானால், நட்டம் சகலருக்கும் பொதுவானதே.

கமால் தவிர, தெணியானும் நீர்கொழும்பூர் முத்துலிங்கம், சிவா சுப்பிரமணியம். மு. கனகராசன், துரை சுப்பிரமணியன், இ. செ. கந்தசாமி, நவம், இராஜதுரைராஜா முதலான பலரும் எழுதியுள்ளனர். மல்லிகைக் கதைகள் என்று சொல்லுமளவுக்குப் பொதுப்பண்புகள் சில கொண்ட கதைகளை இவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

கவிதையைப் பொறுத்தவரை, புதுக்கவிதை என்பதன் வரிவடிவத் தோற்றம் தந்த துணிவில், பலர் தம் கலையுணர்வைக் கவிதையாக்க முயன்றுள்ளனர். இம்முயற்சிகளுட் பல திருப்திகரமானவையாக இல்லை. குறிப்பிடத்தக்க கருத்து மின்னல்கள் இடையிடையே வெட்டினாலும், ஆற்றல் வாய்ந்த மொழிப் பிரயோகம், பலிதமான சொல் லோசைக் கையாட்சி என்பன குன்றியுள்ளமையால் இவை கலைச்செழுமை அற்றுக் காணப்படுகின்றன. கைப்பழக்கத்தினாலும், விடாமுயற்சியாலும் இக் கவிதை எழுத்தாளர்கள் நல்ல கவிஞர்களாகப் பரிணமிக்க வேண்டும்.

பொழிப்பாகச் சொல்வதானால், எங்கள் கலை இலக்கிய எழுத்துலகத்துக்கென நம் கைவசமுள்ள ஒரு பிரதான சாதனமாக 'மல்லிகை' திகழ்ந்து வந்துள்ளது. தொடர்ந்தும் இத்துறையில் 'மல்லிகை'யின் பங்களிப்பு விரிவடைதல் வேண்டும் என்பதே பண்பாட்டில் அக்கறை உள்ள சகலரதும் விருப்பமாகும்.

''வாழ்க்கை என்பது படைப்பு என்றும். மனிதன் பெருமதிப்புக்குரிய தனிப்பண்புகளைத் தங்குதடையின்றி வளர்ப்பதற்கும், இவ்வுலகை ஒரே குடும்பமாக அவன் ஆக்குவதற்கும் அது துணைபுரிகிறது என்றும் சோஷலிஸ எதார்த்தவாதம் கூறுகிறது.''

கார்க்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செம்பியன் செல்வ'னின்

குறுங்கதை: 5

பயன் 1

அது ஒரு பொங்கு முகம்.

நதியும், கடலும் சங்கமிக்கும், புகார் படுக்கை.

நதியின் நீரினுல், அதன் பின்னணி நிலங்கள் பச்சைப் பயிர்க் கதிரால் எழிற்கோலம் தீட்டின.

கடல் துன்பச் சூழலில் சிந்தை நொந்தது.

'நதியால் மக்களுக்கு வாழ்வுண்டென்றுல் ..பரந்த நீர்ப்பரப்பை யுடைய என்னுல் யாருக்கும் பயனில்லையா... இதுவென்ன சோதனை, மனிதன் இரங்கினுன்.

பாத்தி கட்டி, வரம்புயர்த்தி, கடல் நீரைப் பாய்ச்சினுன்.

சூரியன் அக்கினி வீதைகளைச் சிந்தி விதைத்தான்.

வெண்மணிப் பூக்கள்...

முத்தம் சிந்தின.

உணவுக்கு உயிராயின.

போட்டி 2

'அதோ!... சந்திரோதயம்' - என்றது பூமி.

'பூமியோதயம், அற்புதமே' - என வியந்தது மதி. புவிக்குப் பொறுக்க முடியவில்லை.

'என்னுல் அழகும், ஒளியும், மதிப்பும் பெறும் நீ எனக்குச் சமமாக கேலி பேசி ஏளனமா செய்கிறுய்?...' - சீற்றம் சொற்களாயின.

ஆஹஹ்ஹா... என்னுல் அல்லவா நீ பெருமையடைகிறுய்... அதை விட்டு விட்டு இறுமாப்பு வேறு?...' - மதி எதிர்த்தாக்கலில் கொதித்தெழுந்தது.

இரண்டும் ஒன்றையொன்று நெருங்கி, வழிமறித்து நின்றன. மோதிக் கொண்டன.

கிரகணங்கள் மாறி மாறித் தோன்றலாயின.

'கறுப்புச் சூரியன்' சிரித்துக்கொண்டே யிருந்தான்

பார்வை 3

கழுகு ஒன்று மேலாகப் பறந்து கொண்டிருக்கிறது.

அதன் பார்வைத் தெறிப்பில்—

எங்கும் வர்ணக் காட்சிகள்.

பச்சை வயல்கள் - செங்கனித் தோட்டங்கள்.

நெற்போர்கள் - கரும்புக் குவியல்கள்.

கழனித் தோட்டக் கோலங்கள்.

கழுகு, தாழத் தாழப் பறந்து பார்த்தது. ஏமாற்றம். உதட்டைப்பிதுக்கிற்று.

'பிச்சைக்காரத் தேசம்... சே... ஒரு அழுகிய பிணம் கூட இல்லாமல் ஒரு நாடா...'

கழுகு மீண்டும், உயரப்பறக்கலாயிற்று.

சர்வ தேசியம் 4

அவன் ஒரு நீக்ரோ.

தன் சொந்த நாட்டிலே, — மண், பெண், பொன் அனைத்தையும் சுரண்டிப் போக வந்த வெள்ளையருக்கான திரைப்படம் ஒன்றினைப் பார்க்கப் போயிருந்தான்.

என்ன ஆச்சரியம். படத்தின் கதாநாயகி அவன் காதலியைப் போலவே யிருந்தாள்.

குறைந்த ஆடையுடன் நீச்சலடித்தாள். அதுவுமின்றி படுக்கையில் கதாநாயகனுடன் கட்டிப்புரண்டாள்.

அவன் தன்னை மறந்தான். அவன் கதாநாயகனைக் கற்பித்துக் கொண்டான்.

உடலெங்கும் புல்லரித்தது. அவளைத் தொட்டான். உரையாடினுன். அவள் அங்கங்களெல்லாம் அவன் கைகள் ஊறலெடுத்துப் படர்ந்தன. அந்தச் சில மணித்துளி நேரங்கள். இன்பக் கொள்ளை. ஒரு வெள்ளைக்காரப் பெண்ணுடன் உடலுறவு கொண்ட திருப்தி.

படம் முடிந்து வாசலுக்கு வந்தான்.

'வெள்ளைக்காரப் பெண்ணை காதலித்த குற்றத்திற்காக, கறுப்பர் சுட்டுக்கொலை!'

— மாலைத் தினசரி விற்கும் பையன் கூவிக் கொண்டு போனுன்.

— அவன் மறைந்து, மறைந்து அஞ்சி, வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகள் 5

அவர் ஒரு பொருளியல் பேராசிரியர். விடுமுறைக் காலங்களில் கிராமத்திற்கு வந்துவிடுவார். வீட்டின் முன்னால், கோடையிலும் குளிர்காற்றிறைக்கும் வேப்பமரத்தின் கீழ், சாய்வு நாற்காலியில் படுத்து, உண்டகளைப்பிற்கு ஆயாசமாகப் புகைத்துக் கொண்டிருக்கும் வேளையிலும்—

உச்சி வெயில் மண்டையைப் பிளக்க, வியர்வையில் மேனி பளபளக்க,—

அந்தக் கரடுபாய்ந்த கற்பூமியில் விளைநிலத்தை அணுவணுவாகத் தேடிச் சேமித்துக் கொண்டிருப்பான். அவன் உழைப்பில் வாழைத்தோட்டம் ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது.

உழைப்பு — உற்பத்தி — கேள்வி — விலை.

'ஒரு பொருளின் விலை அதனை உற்பத்தி செய்ய எடுத்த தொழிலின் மதிப்பினாலும், மக்களின் தேவை நிலையினாலும் நிர்ணயிக்கப்படுகிறது' பொருளியல் தத்துவத்தின் அடிப்படைகளில் ஒன்றை அவர்மனம் ஏனோ நினைக்கின்றது.

மறு நாள்—

அவன், அவர் முன் ஒரு வாழைக்குலையுடன் நிற்கிறான்.

...ம் ...கடைசியா என்னவிலை சொல்லுறாய்?...'

'ஐயாவுக்குத் தெரியாதா... பட்டணத்தால வாறனியள்... உங்களுக்குத்தான்... சந்தை நிலபரம் எங்களவிட நல்லாத் தெரியும்... ஐயா... கொடுக்கறதைக் கொடுங்க...'

'இஞ்ச... இந்தக்கதை யொண்டும் வேண்டாம்... நீ உன்ர விலையைச் சொல்... சரி... மூண்டு ரூபா தரட்டே?'

'என்ன! அடாத்து விலை கேக்கிறியள்... கொஞ்சம் சிரமத்தை பாராம சந்தைக்குக் கொண்டு போனா கத்தாழை முள்ளுப்போல பத்து ரூபாவுக்கு விக்கலாம்'

'அப்ப போறதுதானே?...' ரோசம் முகம் சிவக்க வைக்கிறது.

'இல்ல ஐயா... அந்தப் போய்வாற நேரத்தில கொஞ்சம் கல் பிரட்டி, கழனியாக்கலாம் எண்டு தான் யோசிக்கிறன்'

'சரி...சரி ஐஞ்சுரூபா தாறன்... விருப்பமெண்டா வைச்சிட்டுப் போ!...'

— அவன் போகிறான். அவர் மனைவி வருகிறாள்.

'மெத்த மலிவா வேண்டிப் போட்டியள்... கண்டியில ஒரு பழமே இருபத்தைந்து சதமல்லே...'

அவருடன் சேர்ந்து, தத்துவமும் சிரிக்கிறது.

4

தமிழ் இலக்கியத் திறனாய்வில் க. நா. சு.வின் பாத்திரம்

க. கைலாசபதி

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் 'இலக்கிய வாழ்வு' நடாத்தும் இலட்சியக் கனவுகளுடன் க. நா. சு. தஞ்சை மாவட்டத்திலிருந்து தலைப்பட்டணமாகிய சென்னைக்குச் சென்ற வேளையில், தனது இலக்கிய வாழ்வு 'எந்தெந்தத் திசையில் எப்படி எப்படிச் செல்லவேண்டும் என்ற தீர்மானத்துடனேயே போனதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அததீர்மானம் உருவாகுவதற்கு, எஸ்ரா பவுண்ட், ஜேம்ஸ் ஜோய்ஸ் முதலிய மேலைட்டு எழுத்தாளர்களின் அபரிமிதமான செல்வாக்கும் முக்கிய காரணமாய் இருந்தது என்பதை நாமறிவோம்.

தனது அபிமான மேலைட்டு எழுத்தாளரிடமிருந்து க. நா. சு. பெற்றுக் கொண்டவற்றிலொன்று, சமகால இலக்கியம் பற்றிய ஆழ்ந்த அக்கறையாகும். ஆரம்பத்திலேயே க. நா. சு.வுக்கு எமது பழைய இலக்கியங்களிற் சிறிதேனும் பரிச்சயமின்மையால், சமகால - நவீன - இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டிருந்தமை தவிர்க்க இயலாத் தேவையாயிருந்திருத்தல் கூடும். (இன்றுகூட அவருக்குத் தமிழிலக்கிய வரலாறு குறித்துத் தெளிவான விளக்கம் இருப்பதாகக் கூறுவது கடினமே. பழந்தமிழ் நூல்கள் சிலவற்றை ஆங்காங்கே அவர் போகிற போக்கில் குறிப்பிட்டிருப்பினும் அவற்றை அவற்றுக்குரிய வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்கித் தெளிந்திருக்கிறார் என்பதற்கு எதுவித சான்றுகளையும் காணோம். க. நா. சு. வின் விமர்சனப் பார்வையின் அடிப்படைப் பலவீனங்களில் இது ஒன்றாகும்.)

'சமீப காலம் வரையில் வசனமே இலக்கியம் அல்ல என்று பண்டிதர்கள் ஒதுக்கி வைத்துவிட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். வசனமே இலக்கியத்தில் உயர்ந்த கலை என்கிற கட்சியைச் சேர்ந்தவன் நான். ஸ்டெந்தால் என்கிற பிரெஞ்சு நாவலாசிரியர் சொன்னதுபோல, 'இப்போது வெளிவருகிற கவிதையைவிட வசனமே மிகவும் சிறப்பான கலை.' இது தினசரி எனக்குத் தெளிவாகிற உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சரஸ்வதி, ஜூலை, 1958) இவ்வாறு வசனத்தையே தலையாய இலக்கியப் பிரிவாகக் கொள்வது பொருத்தமோ என்பது சிந்தனைக்குரியது. அது போகட்டும். ஆனால் இயலாமையினாலோ அன்றித் தீர்மானத்தினாலோ க. நா. சு. நவீன வசன இலக்கியத்திலேயே முழு அக்கறை கொண்டவராக இருந்து வந்திருப்பது கவனிக்கத்தக்கதாகும். தனது மேஜட்டுக் குருநாதர்களிடமிருந்து அவர் பெற்றுக்கொண்ட நல்லம் சங்களில் இது ஒன்று என்பதில் ஐயமில்லை.

க. நா. சு. இலக்கிய உலகிற் பிரவேசித்தகாலப்பகுதியில் சமகால இலக்கியங்களை மதிப்புடன் நோக்கித் திறனாயும் வழக்கம் இருக்கவில்லை. வ. வே. சு. ஐயரும், சுப்பிரமணிய பாரதியாரும் இலக்கியத் திறனாய்வுக்கு முன்னோடிகளாய் விளங்கினரெனினும், அவர்கள் கூட விதிவிலக்காகவே சமகால இலக்கியங்களைப் பற்றிப் பேசினர். வ. வே. சு. ஐயரின் கவனமெல்லாம் காவியரசனையிலேயே பதிந்திருந்தது. விமர்சனுக்கு வேண்டிய கட்டுப்பாடும், பொறுமையும் பாரதியிடத்துக் குறைவாகவே குடிகொண்டிருந்தன. இதனால் அவர்களிருவரும் நவீன இலக்கியங்களைத் திறனாய்வதில் குறிப்பிடத்தக்க சாதனைகள் எதனையும் நிலை நாட்டவில்லை. தனக்கே உரிய ஜம்பத்துடன் க. நா. சு. இதுபற்றிக் கூறியிருப்பது விஷயத்தைத் தொடுவதாயுள்ளது: 'வ. வே. சு. ஐயர் தொடக்கிவைத்த ஆங்கில அடிப்படையில் தமிழில் இலக்கிய விமர்சனம் செய்வது என்கிற காரியம், அ. ச. ஞான சம்பந்தத்தின் 'இலக்கியக் கலை' என்ற பாடபுஸ்தகம் வரையில் வந்து முடிந்திருக்கிறது.'

வ. வே. சு. ஐயர், பாரதியார் ஆகிய இருவருக்கும் முன்னதாக 1897-ம் ஆண்டளவிலேயே, இ. செல்வக்கேசவராய முதலியார் என்பவர் சங்க நூல்கள் சிலவற்றைப் பற்றியும், கம்பனைப்பற்றியும் ஆங்கிலத்தில் விமர்சனக் கட்டுரைகள் எழுதியிருந்தார். இவையும் பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றியனவே. இத்தகைய திறனாய்வு முயற்சிகளிலிருந்து சிறிது வேறுபட்ட இரசனை முறை யொன்று இந்நூற்றாண்டின் இரண்டாம் காலின் தொடக்கத்திலிருந்து மெல்ல மெல்ல உருவாகியிருந்தது. ரசிகமணி டி. கே. சி. யுடன் தொடங்கிய இந்த ரசனைமுறை தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இன்று வரை கணிசமான செல்வாக்குடன் நிலைபெற்றுள்ளது.

1924-ம் ஆண்டிலே திருநெல்வேலியில் (லக்கில் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு) முழுநேர' இலக்கிய பிரசாரகராக டி. கே. சி. வாழத்தொடங்கினார். அவ்வாண்டிலே தம்முடைய இல்லத்தில் 'இலக்கியச் சங்கம்' என்னும் பெயரில் இலக்கிய இரசனைக்குழு ஒன்றை ஏற்படுத்தினார். அங்கு இடம் பெற்ற கூட்டுக்களை பற்றி வித்துவான் ல. சண்முகசுந்தரம் பின்வருமாறு எக்களிப்புடன் விவரித்துள்ளார்:

'கம்பர், மாணிக்க வாசகர், முத்தொள்ளாயிர ஆசிரியர், ஆழ்வார்கள், அப்பர் சுவாமிகள் போன்ற நாயன்மார்கள், காரைக்காலம்மையார், நந்திக்கலம்பக ஆசிரியர், ஜயங்கொண்டார், பெருந்தேவனார், எண்ணிறந்த தமிழ்ப் பாடல் ஆசிரியர்கள் அவ்வளவு கவிஞர்களும் டி. கே. சி.யின் நாவில் வந்து சதா களிநடம் புரிவார்கள். கவிதை எடுத்து விளக்குவதற்கு டி. கே. சி. முதலில் போடுகிற பீடிகை ஞானபீடமாக இருக்கும். பின்பு, தெய்வீகமான, கனிந்த கர்நாடக (தமிழ்) இசையோடு கவிதையை நிறுத்தி வடித்து வடித்துப் பாடுகிற செயல் ஞான பீடத்தில் நடராஜமூர்த்தி வந்து ஆனந்த நடனம் ஆடுவதாகவே இருக்கும்.

(டி.கே.சி வரலாறு பக்.45)

கவிதையில் உணர்ச்சியும் உருவமுமே பிரதானமானவை - உயிராக அமைந்தவை என்று நம்பிய டி. கே. சி. பரம்பரை - தொன்மைவாய்ந்த தமிழ்க் கவிதைப் பரப்பிலிருந்து சிற்சில பாடல்களைத் தெரிந்தெடுத்து வைத்துக்கொண்டு அவற்றை நண்பருக்கும் மற்றையோருக்கும் வாழ்நாள் முழுவதும் பரவசத்துடன் பாடிக்காட்டி வியாக்கியானஞ் செய்து இன்பத்திலே திளைத்தார். இதனாலேயே ரசிகமணி என்ற பாராட்டுக்கும் உரியவர் ஆனார். டி. கே. சி. யின் 'இரசனை இயக்கத்தில்' சேர்ந்திருந்தவர்களிற் பெரும்பாலானோர் வாழ்க்கையின் முற்பகுதியில் ஆங்கிலம் கற்று அரசாங்க உத்தியோகங்கள் பார்த்துவிட்டு, இளைப்பாறும் காலத்தில் 'தமிழ்த் தொண்டு' செய்யுமுகமாகத் தாம் பெற்ற இலக்கிய இன்பத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள விழைந்தோராவர். புதிதாகக் கண்டறிந்த இன்பத்தின் வேகமும் துடிப்பும், முறையாகப் பயிற்சி பெறுமையினால் ஏற்படும் கட்டுப்பாட்டின்மையும், ஆராய்ச்சிக்குப் பதிலாக ஆர்வமே வழிநடாத்துவதால் உண்டாகும் அசட்டுத்தனமான தன்னம்பிக்கையும், பிறருக்கு அறிவூட்டும் தகுதி தமக்குண்டு என்ற அந்தஸ்து இறுமாப்பும் இவர்களிடத்துக் காணப்பட்ட சிறப்பியல்புகள். இவர்களிற் சிலருக்குச் சமய ஈடுபாடும் இருக்கவே சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்க்க முனைந்த புரவலராயும் சிலர்களாயும் பாராட்டப் பெற்றனர்.

ஆங்கிலம் படித்த காரணத்தினால், 'தமிழில் என்ன இருக்கிறது' என்ற அறியாமையில் மூழ்கிக் கிடந்த மத்தியதர வர்க்கத்தினரிடையே தமிழிலக்கிய விழிப்பையும் ஆர்வத்தையும் உண்டாக்கிய வரலாற்றுப் பாத்திரம் டி. கே. சி. க்கும் அவரைச் சார்ந்திருந்த இரசனை முறைத் திறனாய்வாளரையும் சார்ந்தது என்பது உண்மையே. ஆயினும், விரும்பத்தகாத சில விளைவுகளும் ஏற்பட்டன என்பதையும் நாம் கவனிக்காமல் இருக்க இயலாது. இதுபற்றி அண்மையில் (சிவகங்கை மன்னர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரி ''வெள்ளிவிழா மலர்'' பக்கம், 16 - 22) நான் விரிவாக விவரித்திருக்கிறேன். இவ்விடத்தில், இரசனை முறைத் திறனாய்வில் முனைப்பாய்க் காணப்பட்ட ஓர் அம்சமே எமது உடனடிக் கவனத்துக்கு வேண்டப்படுவதாகும்.

இலக்கண விதிகளைக் கொண்டு ஓர் இலக்கியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பை அணுகாமல், தனது சொந்த அநுபவத்தையும் ஈடுபாடுகளையும் துணையாகக் கொண்டே டி. கே. சி. இலக்கியத்தை (உணர்வோடு) பரிமாறினார். தனிப்பாடலிலிருந்து காவியத் துணுக்குகள் வரை அனைத்தையும், 'அளவை (தருக்க) நோக்கில் முதலில் பார்க்காமல் அநுபவ நோக்கில் முதலில் பார்த்தவர் டி. கே. சி.' என்கிறார், டி. கே. சி' மரபிற்கும் சி. சு. செல்லப்பா குழுவிற்கும் பாலமாகப் பணிபுரியும். சி. கனகசபாபதி. எடுத்துக் கொண்ட பாடல்களுடன் டி. கே. சி. தான் கலந்தார் என்பதை நாம் மறுக்கவேண்டியதில்லை. அது வெளிப்படை. கம்பனை எடுத்து விளக்குமிடத்து, கம்பனைவிட, சிறும் பரநாத முதலியாரையே நாம் அவர் இரசனையிற் காண்கிறோம். இது மனங்கொள்ளத் தக்கது. ஆனால் தன் சொந்த அநுபவத்தையே பிரதான அளவு கோலாய்க் கொண்ட அவர் கவிதையிலே சிறப்புடையதாகக் கண்டு காட்டியது எது என்பதே இவ்விடத்திலே நாம் கூர்ந்து கவனிக்க வேண்டியதாகும்.

இரசனை முறைத் திறனாய்வின் பாதகமான விளைவுகளில் இரண்டினைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

1. கவிதைகளை நுனித்து நோக்கி ஆராய்வதற்குப் பதிலாக அவற்றைப் பற்றிக் கதையளப்பதே வீம்ர சனமாக ஏற்றுக்கொள்ளப் படலாயிற்று. (டி. கே. சி. மரபில் வரும் எஸ். மகாராஜன், பி. ஸ்ரீ. போன்றோரிடத்து இப்போக்கை இன்றும் துலக்கமாகக் காணலாம்)

2. அநுபவமே - சுவாநுபவமே அடிப்படை என்ற கோஷத்தின் பெயரில் ஆய்வறிவு பூர்வமான நோக்கு கைவிடப்பட்டது. திறனாய்வு முற்று முழுதாக அகநிலைப் பட்டது. எந்தவிதமான புறநிலைப்பட்ட அளவைகளுக்கும் இடமின்றிக் கவிதை எடுப்பார் கைப்பிள்ளையாக மாறியது.

டி. கே. சி. யும் அவரைச் சார்ந்தோர் சிலரும் காலப்போக்கிலே பாரதியார், தேசிகவிநாயகம் பிள்ளை ஆகிய இருவரையும் பாராட்டினரெனினும், பெரும்பாலும் பழைய புலவர்கள் புகழ்பாடுவதிலேயே பெரிதும் அக்கறை காட்டினர். 'கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும்' முயற்சிகள் இப் பிரிவைச் சேர்ந்தோரால் மேற் கொள்ளப் பட்டனவேயாகும். டி. கே. சி வளர்த்துவிட்ட இலக்கியக் குழுவினர் குறித்து, 'மணிக்கொடிக் காலம்' என்ற கொடர் கட்டுரையிலே, பி. எ. ராமையா கூறியிருப்பன எனது கூற்றுக்கு மேலும் விளக்கமும் அரணும் அளிப்பனவாயுள்ளன.

'அந்த இலக்கிய வட்டத்தில் வந்து கூடியவர்களில் முக்கியமான சிலர் நமது பழைய தமிழ் இலக்கியங்களில் நல்ல தேர்ச்சி உடையவர்கள். அவற்றில் திளைத்துச்சுவைத்தவர்கள். மற்றவர்கள் ஓரளவு தமிழ் வழி பண்டைய இலக்கியச் சுவையும் பெரிய அளவு ஆங்கிலத்தின் வழி இலக்கியச் சுவையும் பெற்றவர்கள். அவர்கள் கூட்டங்கள் யாவும் தமிழ் இலக்கியச் சுவைக் கூட்டங்கள்தாம். ஆனால், அவர்கள் தமிழ் இலக்கியம் என்று கருதியவை, ஏற்றுக் கொண்டவை யாவும் அன்றைக்குப் பல நூற்றாண்டுக்கு முன்பு படைக்கப்பட்டவை அந்த இலக்கிய வட்டத்தினர் வேதநாயகம்பிள்ளை, ராஜம் ஐயர், மாதவய்யா நூல்களை ரசித்தார்கள். ஆனால் அவற்றை அவர்கள் இலக்கியங்களாக ஏற்றுக் கொள்ளவில்லை, அல்லது கருதவில்லை என்றுதான் தோன்றியது.'

1927-ம் வருடம் டி. கே. சி. சென்னை மேல்சபை உறுப்பினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டதையடுத்தும், 1930-ம் ஆண்டு முதல் 1935-ம் ஆண்டு வரை, அவர் சென்னை மாகாண அரசு நிலையப் பாதுகாப்பு ஆணையாளர் பதவி வகித்து வந்தபொழுதும் சென்னையில் பெரும்பாலும் தங்கியிருந்தார். ஆதலால் திருநெல்வேலியில் நடாத்தப்பட்ட இலக்கிய வட்டம் சென்னைக்கு இடம்பெயர்ந்தது. அந்த வட்டத்தின் சில கூட்டங்களுக்குப் போயிருந்த அநுபவத்தின் அடிப்படையிலேயே பி. எஸ். ராமையா மேற்கண்டவாறு எழுதியுள்ளார். சென்னையில் இயங்கிய வட்டத்திற்கு. ரா. கிருஷ்ணமூர்த்தி (சுஜாதா) அமைப் பாளராய்ச் செயலாற்றினார். பி. எஸ். ராமையா எழுதுகிறார்:

'நான் போயிருந்த ஒரு கூட்டத்திலாவது டி. கே. சி. யோ அல்லது வேறு ஒருவரோ. பாரதி என்ற இலக்கிய கர்த்தா, கவி. என்று சொல்ல நான் கேட்டதேயில்லை. 'மணிக்கொடி' க்கு முன் பாரதியாரைத் தமிழ் நாட்டில் ஓரளவு ஊரறிந்த வராகச் செய்தவர் கல்கிதான். பாரதியாரிடம் ஈடுபாடு கொண்டிருந்த கல்கி, பின்னால் ஒரு நேரம்வரை பாரதியாரை மகாகவி என்று ஒப்புக்கொள்ள மறுத்துக் கட்டுரைகள் எழுதியதற்கு அந்த இலக்கிய வட்டத்தின் செல்வாக்குத் தான் காரணம்..... அன்று அந்த இலக்கிய வட்டத்தில் 'புதிய' இலக்கியம் என்ற கருத்தே தோன்றவில்லை.'

இத்தகைய சூழ்நிலையிலேயே இரசனை முறைத் திறனாய்வுக்கு எதிர்வினையாக, நவீன இலக்கியங்களைப் படைப்பதில் ஈடுபட்டிருந்த இளம் எழுத்தாளர் சிலர் திறனாய்வுத் துறையில் கவனஞ்செலுத்தலாயினர். தாமும் தமது சகாக்களும் அவர் போன்றோரும் படைத்துக் கொண்டிருந்த புதிய இலக்கியப் பிரிவுகள் குறித்தே இவர்கள் பெரும்பாலும் சர்ச்சை செய்தனர். பல்வேறு காரணங்களால் பழைய இலக்கியங்கள் பற்றி இவர்கள் எழுத முற்படவில்லை; அதற்குரிய அறிவையும் பயிற்சியையும் ஆற்றலையும் அவர்கள் பெற்றிருக்கவுமில்லை. அவர்களிற் பலருக்குத் தமிழிலும் பார்க்க, சமஸ்கிருதம் ஆங்கிலம் முதலிய ஏனைய மொழிகளிலும் இலக்கியங்களிலும் பரிச்சயம் இருந்தது, முதல் தமிழ் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நூலிலிருந்தே இவர்கள் தமிழிலக்கிய வரலாற்றைக் கண்டனர்; கணித்தனர்.

கல்கி பாரதியார் மகாகவி அல்லர் எனக் கூறியதை வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையாக மறுத்து, 'பாரதி மகாகவி என்பதை ஸ்தாபிக்கச் செய்யப்பட்ட' சிறு முயற்சியாக 'கண்ணன் - என் கவி' என்னும் நூலை பெ. கோ. சுந்தரராஜனும், கு. ப. ராஜகோபாலனும் 1937-ல் வெளியிட்டனர். இவர்கள் இருவர் மாத்திரமன்றி, இவர்களோடு சமகாலத்தில் புதிய இலக்கியங்கள் படைக்கத் தொடங்கியவர்களான சி. சு. செல்லப்பா, ந. சிதம்பரசுப்ரமணியன், புதுமைப்பித்தன் முதலியோரும் அவர் போன்றோரும் திறனாய்வுத் துறையில் அவ்வப்போது அக்கறை காட்டினர். இவர்களிற்பலர் 'மணிக்கொடி' கோஷ்டியினர் என்று பிற்காலத்தில், வழங்கப்படலாயினர். இக்கோஷ்டியிலே 'இலக்கிய வாழ்வு' நடத்தச் சென்னைக்கு வந்த க. நா. சு. வும் சற்றுப் பிற்பட்ட வேளையில் ஐக்கியப்பட்டுக்கொண்டார். 'அவர்கள் விரும்பினர்களோ இல்லையோ, நானும் அதன் கடைசி நாட்களில் இந்தக் கோஷ்டியில் கலந்துகொண்டேன்' என்று க. நா சு. எழுதியிருக்கிறார். (சரஸ்வதி, 25-10-58)

'முந்தி வந்த செவியை பிந்திவந்த கொம்பு மறைத்த தாம்' என்ற பழமொழியைப் போல, மணிக்கொடிக் கோஷ்டியினரிற் சிலர் கால அடைவைப் பொறுத்தமட்டில் கு. நா. சு. வுக்கு முன்னதாகவே இலக்கிய விமர்சனத்தில் இறங்கியிருந்தபொழுதும்; இன்று க. நா. சு. வே அவர்கள் யாவருக்கும் மிகப் பிரபலியம் பெற்றவராக விளங்குகிறார். எனவேதான் அந்தக் கோஷ்டியினரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் விமர்சகனாக இன்று நாம் க. நா. சு. வை விமர்சிக்கும் தேவையிருக்கிறது.

தமிழில் இரசனைமுறையின் முதல்வரும் முக்கிய பிரசாரகருமான டி. கே. சி. யைப் பற்றி மேலே குறிப்பிட்டபொழுது மூன்று முக்கிய அம்சங்களைப் பார்த்தோம்:

1. கவிதையே தலையாய இலக்கியமாக கருதப்பட்டது.
2. பழைய இலக்கியங்களே பாராட்டப் பெற்றன.
3. திறனாய்வாளனின் சொந்த ரசனையும் விருப்பு வெறுப்பும் மனப்பதிவுமே தர நிர்ணயத்தில் அடிப்படையாய் இருந்தன.

இம் மூன்றில் க. நா. சு. முதல் இரண்டையும் நிராகரித்தார். மேலே பி. எஸ். ராமையா கூறியிருப்பன க. நா. சு. கருத்தையும் சரியாகப் பிரதிபலிக்கிறது என்றுல் தவறிருக்காது. 'வசனமே இலக்கியத்தில் உயர்ந்த கலை' என்று க. நா. சு. கூறுமிடத்திலும் இது புலனாகிறது. இரசனைமுறைக்கு எதிர்வினைவாக எழுந்த க. நா. சு. வின் கருத்தோட்டம், எதிர் நிலையிலேயே நின்றுவிட்டது எனலாம். முந்திய பிரிவினர், அதாவது இரசனைமுறையினர் கவிதையைப் பிரதானப்படுத்தியதற்கு நேர்மாறாக இவர் வசனத்தையே முதன்மைப் படுத்தினர்; அவர்கள் பழைய ஆக்கங்களையே பற்றி நின்றனர். இவரோ சமகாலப் படைப்புக்களைச் 'சுடச் சுட' மதிப்பிடும் மார்க்கத்தைத் தழுவி நின்றார். ஆனால் மூன்றாவது அம்சத்தில் டி. கே. சி. க்கும், க. நா. சு. விற்கும் எத்தகைய வேறுபாடும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. (இவ்விடத்தில் க. நா. சு. தனது தலைமுறை தமிழ் விமர்சகர்களை முற்றுகப் பிரதிபலிக்கவில்லை என்பதையும், அவர்களினின்றும் தனித்து விலகி நிற்கிறார் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெ. கோ. சுந்தரராஜன், சி. சு. செல்லப்பா, கு. ப. ரா. முதலியோர் பொதுவில், இலக்கியத் தொழிலின் நுட்பங்கள், உத்திகள், நடைமுறைகள், இலக்கிய மொழி என்பவற்றில் நிரம்பிய அக்கறை உடையவராய் இருந்தனர்; இருக்கின்றனர். கு. ப. ரா.—சிட்டி எழுதிய 'கண்ணன் என் கவி', சி. சு. செல்லப்பா எழுதிய புதுக்கவிதை பற்றிய கட்டுரைகள் முதலியவற்றில் பகுப்பாய்வுப் பண்புகளை ஐயத்துக்கிடமின்றிக் காணமுடியும். தெளிவற்ற வாக்கிய அமைப்பே சி. சு. செல்லப்பாவின் பெருங் குறைபாடாகும்)

சமகால — வசன இலக்கியங்களைப்பற்றி எழுதுகிறார் என்பதைத் தவிர விமர்சன நோக்கிலும் முறையிலும் டி. கே. சி. க்கும் க. நா. சு. வுக்கும் அத்திபந்த ஆத்மார்த்த உறவு இருக்கிறது என்பதைப் பலர் கண்டிருப்பதாய்த் தெரியவில்லை. அதாவது எடுத்துக்கொண்ட படைப்பை நுணுக்கு நோக்கிப் புறநிலையில் வைத்துப் பகுத்து ஆராயாமல், தனது அலையும் மனத்தில் அகஸ்மாத்தாய்த் தோன்றும் எண்ணங்களை எடுத்து வீசுவதே இருவரினதும் இயல்பாய்க் காணப்படுகிறது. க. நா. சு. வின் பரம பக்தர்களாக இருந்தவர்களிற் சிலர் இப்பொழுதாவது இவ்வுண்மையைத் தட்டித் தடவித் தெரிந்து கொள்கிறார்கள் போலத் தெரிகிறது. உதாரணமாக சமீபத்தில் 'ஞானரதம்' இதழ் ஒன்றிலே (மார்ச் 1973) வெ. சாமிநாதன் கூறுகிறார்: 'க. நா. சு. வின் செல்வாக்கினாலும் முயற்சிகளினாலும் விமரிசனம் என்பது ஒரு தனி நபரின் தனி மனப் போக்கின் வெளிப்பாடாகத் தான் கருதப்பட்டது.' (வழக்கம்போல சாமிநாதன் தமிழிலும் ஆங்கிலத்திலும் கலந்து எழுதியிருப்பதைத் தமிழ்ப்படுத்தியுள்ளேன். - க. கை.)

சுருங்கச் சொன்னால் க. நா. சு. தன்னைத்தானே நவீன விமரிசகன் என்று வாய் ஓயாது விவரித்துக் கொண்டாலும், அடிப்படையில் நவீன இரசனை முறையாளர் என்று நாம் விவரிக்கத்தக்க வகையிலேயே எழுதி வந்திருக்கிறார். அவரே ஒரு சந்தர்ப்பத்தில் எழுதினார்:

'நான் என் வாழ்வில் பெரும்பகுதியைப் படிப்பதிலும் சிறு பகுதியை எழுதுவதிலும் கழித்தவன். எனக்கு வேறெருரு தொழிலும் கிடையாது. நான் படித்ததில் சிறந்ததைப் பற்றி எப்போதும் சொல்லத் தயாராகவே இருந்திருக்கிறேன். இதே போல வேறு ஒருவரை நான் பதினைந்திருபது வருஷங்களுக்கு முன் சந்தித்தபோது எனக்குத் திருப்தியாக இருந்தது. அவர் படித்திருந்த விஷயங்கள் வேறு; நான் படித்திருந்த விஷயங்கள் வேறு. இருந்தாலும் தான் படித்ததைப் பற்றியே தீவிரமான சிந்தனைகளுடையவராக, நாள்தோறும் வேறெருரு விதமான ஞாபகமும் இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமல் இலக்கியத்தொண்டாற்றியவர் என்று காலஞ் சென்ற டி. கே. சி. அவர்களைச் சொல்ல வேண்டும். நல்லதென்று தனக்கு மனசில் பட்டதை எடுத்து, இது அற்புதம் என்று அவர் சொல்ல ஒரு சந்தர்ப்பத்திலும் தயங்கியதில்லை'

இனம் இனத்தை நாடும் என்ற வழக்கிற்கு ஒப்ப, க. நா. சு. நான் நிராகரித்த தலைமுறையிலிருந்து டி. கே. சி. யை வித்தந்து போற்றுவது விமர்சனத்தின் விளைவால் அன்று. மானசீகமான ஒற்றுமை இருக்கிறது என்பதைக் கண்டுகொள்வது கடினமும் அன்று. பழைய புலவர்களின் கவிதைகளிலிருந்து பாவம் நிறைந்தவை என்றுதான் கருதியவற்றுக்கு டி. கே. சி. பட்டியல் தயாரித்ததுபோலவே க. நா. சு. வும் பற்பல வேளைகளில் 'சிறந்த நாவல்கள்', 'சிறந்த சிறுகதையாசிரியர்கள்' என்றெல்லாம் அவ்வப்போதுள்ள தனது மனச்சாய்வுகளுக்கேற்பப் பட்டியல்கள் தயாரித்து 'விருது' கள் வழங்கிவந்திருக்கிறார். வெ. சாமிநாதன் இன்றைய ஞானோதயத்துடன் கூறுவது போல, 'பட்டியல் காரரிடம், அவ்வப்போதைய தேவைகளின் நிர்ப்பந்தமும், ஒரு அலட்சியமும், இடதுகைப் பாவனையும் தென்படும். ஆனால் க. நா. சு; நாம சங்கீர்த்தனக் கோஸ்டிக் காரர்களுக்கு, சித்தாந்தங்களை விட, இப்பட்டியல் தரும் அங்கீகாரப் பட்டயம்தான் தேவையானது. கழுத்தைச் சுற்றி அணிந்து கொள்கிறார்கள்'

(ஞானரதம், டிசம்பர் 1972)

இப்பொழுது குருவை மிஞ்சிய சீடனைக் காட்சியளிக்க விரும்பும் சாமிநாதன், க. நா. சு. வின் பட்டியலிலும் பார்க்க அவரது பார்வையும் தத்துவமுமே தூரநோக்கில் முக்கிய மானவை எனறு சிறிது மாற்றத்துடன் வாதிடுகிறார். சிஷ்ய பரம்பரையில் நடைபெறும் கடுமையான 'குத்துவெட்டையே' சாமிநாதனின் சாதுரியமான தன்னிலை விளக்கும் துலாம்பரப் படுத்துகின்றது.

'துர்ப்பாக்கியமும் வேடிக்கையும் என்னவெனில் இப்புதிய இலக்கியச் சூழலில், இப்புதிய இலக்கியத் தலைமுறையினரால், க. நா. சு. வின இலக்கிய, விமர்சன வேதாந்த அடிப்படைகளும் உணரப்படவில்லை..... அவருடைய விமர்சன ஈடுபாடுகள் விளைவித்த இலக்கியச் சூழலின் மாற்றமும் உணரப்படவில்லை.'

சரியும் பந்தலுக்கு முண்டு கொடுக்க முயல்கிறார் வெ. சாமிநாதன். அவர் தனது நன்றிக் கடனைச் செலுத்தட்டும். அவர் மிக உயர்வாகப் புகழும் 'க. நா. சு. வின் இலக்கிய, விமர்சன வேதாந்த அடிப்படைகளை' இனிமேல் ஆராய்வோம்.

[வளரும்]

ஆளத் துடிக்கிறாள்

'தெணியான்'

சிவகாமி கடந்த ஆறு மாதகால எதிர்பார்ப்பில் அடைந்த ஏமாற்றத்தை மேலும் சகித்துக்கொள்ள இயலாதவளாய், அவள் மைத்துணியின் ஆதரவு தனக்குண்டென்ற நம்பிக்கையில்தான் இன்று வலிய வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அந்த வீட்டில் வசிப்பவர்களுள் அவளைப் பூரணமாக விளங்கி வைத்துக் கொண்டிருப்பவள் அவள் மைத்துணி ஒருத்திதான் என்று நம்பினாள் அவள். சிவகாமியின் மாமன் கிழவனும் 'பிள்ளை..... பிள்ளை' என்று அன்பு சொரிய அழைத்து அவள் மேல் மிகுந்த வாஞ்சை இருப்பதாகக் காட்டிக்கொள்ளத் தவறவில்லை. அவர் அவள்மேல் காட்டுகின்ற அக்கறையின் அந்தரங்கம் சிவகாமிக்குப் புரியாததல்ல. அவள் அந்த வீட்டில் தொடர்ந்திருக்க வேண்டும் என்பதுதான் அவர் மனதிலுள்ள ஒரே ஏக்கம். அவரும் இன்று சிவகாமி வந்திருப்பதை அறிந்தும் அறியாதவர்போல அலட்சியமாக இருக்கிறார். அவருடைய பாராமுகம் சிவகாமியின் உள்ளத்தை உறுத்தவில்லை. ஆனால் யாரை நம்பி அவள் வந்தாளோ அவள் கூடச் சிவகாமியை வரவேற்காததுதான் அவளை வேதனைப் படுத்துகிறது.

அவள் ஏனிப்படி மாறிப் போனாள் என்பதைத்தான் சிவகாமியால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. தனக்கு ஆதரவாக இருந்த ஒரு ஜீவனும் கை நழுவிப் போய்விட்டது போன்ற திகைப்பு அங்கு நிலவி மௌனத்தால் உதயமாக, இனிமேல் என்ன செய்ய வேண்டுமென்பதை உணராதவளாய் மலங்க மலங்க விழித்தாள். இப்படி உதாசீனம் செய்வதை விட எல்லோரும் சேர்ந்து திட்டித் தீர்த்தால்கூடத் தேவையில்லைப்போல அவளுக்குப் பட்டது.

இன்று அவர்கள் முகங்களை ஆவலோடு நோக்கி ஏங்கிக் கொண்டிருக்கும் சிவகாமி இந்த வீட்டுக்கு மணமகளாக வந்த போது நிலைமை வேறுவிதமாக விருந்தது. அவர்கள் எல்லோருந்தான் சிவகாமியின் முகத்தை ஆவலோடு பார்த்தார்கள். அவளுக்கு அந்த முகங்களில் எதையுமே பிடிக்கவில்லை. அவள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளவேண்டிய கணவனால் அவளைக் கவரமுடியாதபோது வேறு யாரைத்தான் அந்த வீட்டில் அவளுக்குப் பிடிக்கும்?

சிவகாமி பிறந்திருந்தது வசதியான ஒரு குடும்பமாக இருந்திருக்குமாதலால் நிச்சயமாக இந்தக் குடும்பத்தில் புகுந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்க மாட்டாள். அடுக்கடுக் காகப் பிறந்த ஆறு பெண்களுக்கு மூத்தவள்தான் அவள். அவளுக் குக் கீழே மூன்று பெண்கள் கும ருகளாக இருந்தார்கள். பெற் ரு ரைப் பொறுத்தவரையில் அவளுக்கொரு மாப்பிள்ளை வேண்டும். அவன் எப்படியான வ ளு க இருந்தாலும் பறவா யில்லை. எவன் வருவான் என்று ஏங்கிக் கொண்டிருந்த அவர்க ளுக்கு சின்னையன் வீட்டாரின் பிரசன்னம் தேவதரிசனமா கவே பட்டது. முன்பின் தெரி யாத அவர்களோடு சம்பந்தம் வைத்துக்கொள்ள அவகாசம் கேட்காமலே சம்மதித்து விட் டார்கள். சிவகாமியின் மன விருப்பத்தைப் பற்றி அவர்கள் நினைத்துப் பார்த்ததாகவே இல்லை.

சிவகாமியும் அவர்கள் குடும்பத்தின் கதியற்ற நிலை மையை உணர்ந்து எப்படிப்பட் டவனுக்கும் கழுத்தை நீட்டத் தயாராக இருந்தாள்.

வாராமல் வந்த வரனை அவளுக்குக் கிடைத்த சின்னைய னைத் திருமணத்தின்போதுதான் சிவகாமிக்குப் பார்க்கமுடிந்தது. சின்னையனைப் பார்த்தபின்னர் தான் தன்னுடைய கணவன் குடிகாரனை, அயோக்கியனை இருந்தாலும் பறவாயில்லையே என்று எண்ணி ஏங்கினாள். இளமை நினைவுகளில் சிறகடித் துச் சஞ்சாரம் செய்து அவள் தன்னுள் வளர்த்து வைத்துக் கொண்டிருந்த ஆசைக் கனவு களையெல்லாம் சின்னையனின் தோற்றம் சிதைத்துச் சின்ன பின்னப் படுத்தியது-

சின்னையன் உயரத்தில் அவள் மார்புக்குக் கீழ்த்தான். மேல்வாய்ப் பற்கள் ஒன்றின் மேல் ஒன்று ஏறி, உதட்டை வீலக்கிக்கொண்டு வெளியே நீட்டிக் கொண்டிருக்கின்றன. வாய் வீணீர் வழிந்து அவன் மார்பை நனைத்துக்கொண்டிருக் கிறது. கண்களில் பேதைமை யின் அலையோட்டம். அதே வேளையில் பெண்ணின் மேலுள்ள வாஞ்சையின் சிதறல்கள்.

அவனைப் பார்க்கும்போது சிவகாமிக்குப் பரிதாபமாக இருந்தது.

அவள் சின்னையனுக்கு எப் போது கழுத்தை நீட்டினாளோ, அந்தக் கணம் முதல் அவனைப் பார்க்கின்ற கண்களெல்லாம் அவனையும் பரிதாபத்தோடு தான் நோக்கின.

ஆனால் சிவகாமியின் பெற் ரோருக்குச் சின்னையன் மாப்பிள் ளையாகக் கிடைத்ததில் பரம திருப்தி. சிவகாமி சீரும் சிறப்பு மாக வாழ்க்கை நடத்துவா ளென்று நம்பினார்கள். நில புலங்களை முதுசமாக உள்ளவ னுக்கு சின்னையன் கிடைத்த போது அவர்கள் அப்படி நினைத் ததில் தவறில்லை.

ஆனால் இரண்டு மாதங்க ளின் பின்னர் அந்த நம்பிக்கை யைப் பொய்யாக்கிவிட்டு, கண வன் வீட்டிலிருந்து பிறந்தகத் துக்கு வந்து சேர்ந்தாள் சிவகாமி.

இறக்கி வைக்கப்பட்ட பார மொன்று திரும்பவும் தலையில் ஏற்றப்பட்டது போன்ற உணர் வுதான் சிவகாமியின் தாய்க் குண்டானது. சிவகாமி கணவ னைப் பிரிந்து வந்திருப்பதற்கான காரணத்தை வினவி நச்சரிக்க ஆரம்பித்தாள்.

சிவகாமி என்ன காரணத் தைச் சொல்லுவாள்! சின்னை யன் நல்ல உழைப்பாளி என்ப தைத் தவிர, அவனைத் தன் கணவனென்று திருப்திப்பட அவனிடத்தில் என்னதான் இருக்கிறது! தன் உழைப்பினால் கிடைக்கிற வருமானத்தை சரி யாக எண்ணிப் பார்த்துக் கணக்கிட்டுக் கொள்ளத் தெரி யாத அப்பாவி அவன். திரும ணத்தின் பின்னும் உழைத்து ழைத்துப் பணத்தை முன்போ லவே தமக்கையிடம் கொடுத்து வந்தான். சிவகாமியிடம் உண வுக்குப் பணம் கொடுக்கிற அதி காரியாக அவள் மைத்துணி தான் இருந்து வந்தாள், தமக் கையோ அல்லது அவன் தந் தையோ ஏவினால்தான் எதனை யும் செய்வானன்றி, சுயமாக எந்தக் காரியத்தையும் அவன் செய்வதில்லை. ஆனால் சிவகாமி என்றால் அவனுக்கொரு பைத் தியம். குட்டிபோட்ட பூனை போல எப்போதும் அவளை வளை ய வளை ய வந்துகொண்டிருப் பான். அவன் வாயைத்திறந்து அசட்டுத்தனமாக 'ஹி...ஹி...' என்று சிரிக்கும்போது அந்தக் கோரத்தைச் சகிக்கவே முடி யாது.

ஆனால் இவைகள் எல்லா வற்றையும் சகித்துக்கொள்ளச் சிவகாமி தன்னைப் பக்குவப் படுத்திக் கொண்டாள். அவன் கணவனென்ற மிடுக்கில் தன்னை அதிகாரம் பண்ணமாட்டானா என்றுதான் அவள் உள்ளம் சதா ஏங்கியது. என்றாவது ஒரு நாள் அவன் கைநீட்டி அவளை அடித்திருந்தால் சிவகாமியின் உள்ளம் ஆனந்தத்தில் சிலிர்த் திருக்கும்.

இந்த ஏக்கங்கள் யாவும் நிரந்தர ஏக்கங்களாகவே அவள் உள்ளத்துள் புதைந்துபோனா லும் சிவகாமி சின்னையனோடு வாழத் தயாராகத்தான் இருந்தாள். ஆனால்.....!?

எப்படித்தான் அதனை வெளியிடுவதென்பதை அறியா மல் அவள் தவித்தாள். தாயின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாதவளாய் மௌனம் சாதித்தாள்.

ஆனால் சிவகாமியின் தாய் விடுவதாக இல்லை. அவளுடைய நெருக்குவாரத்தைப் பொறுக்க இயலாமல், அவள் விளங்கிக் கொள்ளத் தகுந்தவண்ணம் மறைமுகமாகத்தன் மனக் குமச் சலை வெளியிட்டபோது, அவள் தாய் வாயடைத்துக் கல்லாகச் சமைந்துபோனாள். சிவகாமிக்கு என்ன சமாதானம் சொல்லித் திரும்பவும் சின்னையன் வீட்டுக்கு அனுப்பிவைப்பதென்பதை அறி யாதவளாக அவள் திகைத் தாள்.

சிவகாமி தாய்வீடு வந்து ஒருமாதம் கழிந்தபோதும் சின் னையன் அவளைத் தேடவில்லை. அவன் வரவைச் சிவகாமி எதிர் பார்த்திருக்கவுமில்லை.

ஆனால் இருந்தாற்போல் இருந்து அவள் மைத்துணியும் அவள் கணவனும் சிவகாமியை அழைத்துப்போக வந்தார்கள். அவர்களை வரவேற்கும் நிலையில் சிவகாமி இல்லாதபோதும், அவள் தாய் முகம் மலர வர வேற்று உபசரித்தாள். அவர் கள் சிவகாமியை அழைத்துப் போவதில் உள்ளூர அவள் ஏழ்மை மகிழ்ந்து குதூகலித்தது.

சிவகாமியின் முகம் மட்டும் வெறுப்பினால் சுண்டிக் கறுத்தி ருந்தது. அவளுடைய அதிருப் தியை நிதானித்த அவள் மைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணி சொன்னாள்: 'உங்கடை பிள்ளைக்கு நாங்கள் எந்தக் குறையும் வைக்கயில்லை: பிள்ளைதான் சொல்லாமல் கொள்ளாமல் வெளிக்கிட்டு வந்திட்டுது'

'அப்ப... இவ்வளவு நாளாப் போச்சு என்ன ஏதென்டு நீங்கள் வந்து விசாரிக்கயில்லை'

'ஏதோ தாய் வீட்டுச் சோட்டையில்லை வந்த பிள்ளை கொஞ்ச நாளுக்காவது இருக்கட்டுமென்டுதான் விட்டிட்டிருந்தநாங்கள்'

'என்ன அப்பிடிச் சொல்லிப் போட்டியள்! கலியாணம் செய்த புதிசில்லை என்ன தாய் வீட்டுச் சோட்டை? புதிசுகள் பிரிஞ்சிருக்கிறதெண்டால்.....'

'.....'

'என்னெண்டும் பேசிறியளில்லை! ஆசையும் மோகமும் மெண்டு தொண்ணூறு நாளெல்லே கணக்குப் போடுவினம்: அந்தத் தொண்ணூறு நாள்கூட இன்னும் போகயில்லை. அதுக்கிடையில்லை இதுகள் பிரிஞ்சிருக்கிறதெண்டால்.....'

'அப்பிடிச் சொல்லாதையுங்கோ..... நாங்கள் எந்தக் குறையும் வைக்கவில்லை'

'நீங்கள் ஒருகுறையும் வைக்கவில்லைத்தான்: ஆனால் ஒரு பெம்பிளைக்குச் சோறும் சீலையும் மட்டும் ஒரு புரியன் குடுத்தால் போதுமே.....' நாங்கள் முட்டுப்பட்டதுகள் எண்டாலும் உடுக்கத் துணியும் ஒரு நேரக் கஞ்சியும் குடுக்கேலும்'

சொல்லிக்கொண்டு சிவகாமியின் தாய் அர்த்தத்தோடு நோக்கினாள். சிவகாமியின் மைத்துணி அந்த வார்த்தைகளின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டாள். வெட்கத்தில் அவள் தலை கவிழ்ந்து கொண்டது. அவள் கணவன் மோவாயைத் தடவி விட்டுக்கொண்டு முகட்டு வளையை அளந்து கொண்டிருந்தான்.

'சரி..... இப்ப நீங்கள் பிள்ளையை எங்களோடை அனுப்புறியளோ அல்லது.....' என்று தொய்ந்துபோன குரலில் அனுங்கினாள் சிவகாமியின் மைத்துணி.

சிவகாமியை அவள் தாய் தனியே அழைத்துச் சென்றாள். அவளுக்கு அவர்களுடன் போவதில் இம்மியும் இசைவில்லை என்பதை உணர்ந்து, ஆதரவாகவும் கண்டிப்பாகவும் பல புத்திமதிகளை எடுத்துக் கூறினாள்.

சிவகாமியும் தங்கள் குடும்ப நிலைமையை ஒருகணம் மனத்தில் நிறுத்திப் பார்த்துக் கொண்டு, வேண்டா வெறுப்பாக அவர்களுடன் புறப்பட்டு வந்துவிட்டாள்.

மறுபடியும் அவள் வாழ்க்கை பழைய தடத்தில் நகர ஆரம்பித்ததேயன்றி, அவளுடைய ஏக்கங்கள் முன்போலவே விழித்துக் கொண்டிருந்தன. பந்தயக் குதிரைபோன்ற அவளது மதர்த்த உடல்வாகு தாபத்தால் தவண்டை அடித்துக் கொண்டிருந்தது. அவளை மேய்கின்ற வெறிபிடித்த விழிகளின் தொல்லை வேறு.

காலங்கள் தம்பாட்டில் ஓடிக் கொண்டிருந்தன. அவளுக்கு மட்டும் வாழ்வு கானலாக மாயத் தோற்றம் காட்டிச் சாகசம் புரிந்துகொண்டிருந்தது.

உலகபோகங்களைத் துறந்து ஆசாபாசமற்ற வெற்றுச் சடலமாக வாழ்நாளைச் செலவழிக்க சிவகாமி என்ன ஜீவன் முத்தரா?

தாபக்கனல் சிறுகச் சிறுக வளர்ந்து சுவாலித்து, கொழுந்துவிட ஆரம்பித்ததும் சிவகாமி அதில் ஆகுதியாக விழுந்தாள். எப்படியோ அவள் ஏக்கம் தணிந்து சிவகாமி வாழ ஆரம்பித்தபின்னர்.....

ஒருநாள் இரவு சிறுநீர் கழிப்பதற்காகச் சிவகாமியின் மைத்துணி வீட்டுக் கோடிப் புறத்துக்குவந்தபோது, யாரோ இருவருடைய பேச்சுக் குரல் கேட்டுத் திடுக்கிட்டவளாய், கையில் எடுத்துவந்த 'ரோஜ் லற்றில்' ஒளியைப் பாய்ச்சிப் பிடித்தவண்ணம் 'யாரது' என்று அதட்டினாள்.

அவளின் அதட்டலையும் வெளிச்சத்தையும்கண்டு யாரோ ஒரு ஆண் அங்கிருந்து துள்ளிக் குதித்தோடினான்.

சிவகாமி கலைந்திருந்த சேலையைச் சரிசெய்துகொண்டு சர்வாங்கமும் அச்சத்தால் கிடுகிடுத்து நடுங்க, வெட்கித் தலை குனிந்து நின்றாள்.

சிவகாமியின் மைத்துணி 'லற்' ஒளியை நிதானமாக அவள் முகத்தில் ஒரு கணம் பாய்ச்சினாள்.

சிவகாமியின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

சிவகாமியின் மைத்துணி மெல்ல அவளை நெருங்கிவந்து 'அவக்' கென அவளை இழுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

சிவகாமிக்கு உலகமே சுழன்றது. அவள் இப்படி நடந்து கொள்வாளென்று சிவகாமி எதிர்பார்க்கவில்லை. பூகம்பமொன்று வெடிக்கப் போவதை எதிர்பார்த்துக்கொண்டு நின்ற சிவகாமிக்கு மைத்துணியின் மார்பு மலர் மஞ்சமாக இதமளித்தது.

பெண்மையின் ஏக்கத்தை பெண்மையால்தான் புரிந்து கொள்ள முடியும். அவள் சாதாரணமான ஒரு பெண்ணைச் சிவகாமிக்குத் தோன்றவில்லை. தெய்வமென்றுல் அது அவள் தானென்று நம்பினாள்.

மறுநாள் முலர்ந்ததும் சிவகாமியால் அவள் மைத்துணியின் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. ஆனால் அவள் மட்டும் அநுதாபத்தோடு சிவகாமியை நோக்கினாள். அவள் முகத்தில் அருவருப்போ, குரோதமோ அணுவளவும் தோன்றவில்லை.

அந்தத் தெய்வந்தான் இன்று சிவகாமியைப் பார்த்து 'வா' என்று ஒரு வார்த்தை கூறவில்லை.

அவள் மடியில் கிடந்த குழந்தை திடீரென 'வீல் வீல்' என்று கத்த ஆரம்பித்தது. அங்கு உறைந்த மௌனத்தைக் குழந்தையின் குரலாவது கலைத்ததில் சிவகாமிக்குத் திருத்தி. சட்டையின் ஹுக்குகளைக் கழற்றிக் குழந்தைக்குப் பாலூட்டத் தொடங்கினாள் சிவகாமி.

ஆறு மாதங்களுக்கு முன்னர் இந்த மண்ணில் மலர்ந்த அந்தப் புதுமலரை இன்றுதான் தகப்பனென்ற பெயர் சூட்டிக் கொண்ட சின்னையன் வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகாமி. பிரசவத்துக்காகத் தாய்வீடு சென்ற அவளை யாரும் போய் வாவென்றழைக்கவில்லை; சின்னையனும் போகவில்லையென்ருல் அவனுக்கொருவரும் சொல்லிக் கொடுக்கவில்லையென்பது தான் பொருள்.

சிவகாமி சின்னையனின் மனைவி என்பதை உறுதிப்படுத்துவதற்கென்று தோன்றி இருப்பது குழந்தை ஒன்று தான்.

சிவகாமியை வேறுக்காமல் ஆதரித்த அவள் மைத்துணி, இந்தக் குழந்தையை உதாசீனம் செய்யக் கூடியவளாக மாறி இருக்கமாட்டாளே! ஏன் இந்த திடீர் மாற்றம்!? அவளாக வீட்டுக்கழைக்காதது மட்டுமல்ல, வலிய வந்தவளையும் வெறுத்து ஒதுக்குகிருளே!

தன் நிலைமையை எண்ணிச் சிவகாமியின் உள்ளம் வெதும்பியது. கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக வடிந்து கொண்டிருந்தது.

அப்போதுதான் சின்னையன் வாயில் சுருட்டொன்றைப் புகைத்தவண்ணம் வெளியே இருந்து வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டதும் சிவகாமியின் உள்ளம் திடீரென மலர்ந்தது.

ஆறு மாதங்களின் பின்னர் அவனைச் சுருட்டுடன் பார்த்ததில் அவளுக்கு மனநிறைவு. சுருட்டு நாற்றம் அவளுக்குக் கட்டோடு பிடிக்காதபோதும், சின்னையனைச் சுருட்டோடு பார்க்கும்போது அவன் தோற்றத்தில் ஆண்மையின் கம்பீரத்தைக் கண்டு, அவன் எப்போதுமே சுருட்டுப் புகைத்துக் கொண்டிருக்க வேட்டுமென்று சிவகாமி விரும்பினுள்.

சிவகாமியும் குழந்தையும் வீட்டுக்கு வந்திருப்பதைக் கண்டதும் வாயிலிருந்த சுருட்டைக் கையில் எடுத்துக்கொண்டு சுருட்டுக்கும் உதட்டுக்குமிடையே நூலாக இழுபடும் வீணீரையும் கவனிக்காதவனுக 'ஹி..... ஹி.....' எனச் சிரித்த வண்ணம் சிவகாமியை நோக்கி வந்தான்.

சிவகாமி பால் குடித்துக் கொண்டிருந்த குழந்தையைக் கையில் தூக்கி, திடீரென அவனை நோக்கி நீட்டினுள்.

அவன் கரங்களும் ஆவலோடு குழந்தையை நோக்கி நீண்டன.

'எடே தொடாதை பிள்ளையை'

சிவகாமியின் மைத்துணியின் குரல் இடியேறுபோலத் திடீரென்று எழுந்தது.

சின்னையன் வெடுக்கென்று தன் கைகளை இழுத்துக் கொண்டான்.

'பிள்ளையைக் காட்டி உன் பேரிலே உள்ள காணி பூமியளைத் தட்டிக்கொண்டு போகப்பாக்கிறுள். உந்தப் பிள்ளையை அணைச்சால் சொத்துப் பத்து அவமாக ஆருக்கும் போகும். அது நடக்க ஒருபோதும் விடமாட்டேன்'

சிவகாமியின் மைத்துணி ஆக்குரோசத்தோடு தன் மனக் கருத்தைப் போட்டுடைத்தாள்.

சிவகாமிக்கு இப்போது தான் சிறிது சிறிதாக விளங்க ஆரம்பித்தது.

ஆனல் சின்னையன் பாவம்! அவனுக்கு ஒன்றுமே புரியாமல் திகைத்துப்போய் நின்ருன். ★

கீர்த்தனை இலக்கியத்தின் உள்ளடக்கம்

சபா. ஜெயராசா

கீர்த்தனைகள் இசை இலக்கியமாக, இசைக் கட்டுக்கோப்பினுக்குள் நுழைய விடப்பட்ட பாடல்களாக இருப்பது நோக்கத்தக்கது. கீர்த்தனைகள் கடந்த 400 ஆண்டுகளாக வளர்ச்சி பெற்ற வரலாற்றினைக் கொண்டிருப்பதோடு, பொதுமக்களிடத்துப் பரவலான தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

கீர்த்தனைகள் 'தாது', 'மாது' என்னும் இரு உறுப்புக்களைக் கொண்டுள்ளன. 'தாது' என்பது இசையைக் குறிப்பிடுகின்றது. 'மாது' என்ற உட்பொருளைக் கூற தாது என்ற இசை பயன்படுத்தப் படுகின்றது. கீர்த்தனையையும், கிருதியையும் ஒப்பிடும் பொழுது கீர்த்தனையின் உள்ளடக்க முக்கியத்துவம் மேலும் புலனுகின்றது. 'கிருதி' இசையை முதன்மையாகக் கொண்டு கட்டியெழுப்பப் படுவதன்றி கீர்த்தனையைப் போல், கருத்து முதன்மை கொண்டு எழுதப்படுவதல்ல. பச்சையாகக் கூறுவதானுல் சங்கீதம் தெரியாதவர்கள் கீர்த்தனையை எழுதவும் முடியும் இரசிக்கவும் முடியும், ஆனல் சங்கீதம் தெரிந்தவர்கள் மட்டும் கிருதியை எழுதவும் முடியும், முழுமையாக இரசிக்கவும் முடியும்.

அருணுசலக் கவிராயரின் (1711 — 1776) இராம நாடகக் கீர்த்தனைகளுடன் தமிழ்க் கீர்த்தனை வளர்ச்சி முழுமை பெற்ற காலை, தெலுங்கு மொழியிலும் தியாகையரோடு (1768-1847) கீர்த்தனை வளர்ச்சி முழுமை பெறுகின்றது. தமிழ் நாட்டிற் குமட்டுமுரிய ஒரு நிகழ்ச்சி கீர்த்தனை வளர்ச்சியைத் தூண்டி விடவில்லை. பிற மாநிலங்களும், தமிழ் மாநிலம் பெற்ற சமூகத் தாக்கத்தினைப் பெற்றதன் விளைவாக இசைப் பாடல்களில் புதிய வார்ப்புக்கள் ஏற்பட லாயின.

இதே காலகட்டத்தில் (1750 அளவில்) இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளில் புதிய சங்கீதம் வளர்ச்சி பெறத் தொடங்கியதன் நேரடித் தாக்கம் இந்தியாவில் ஏற்பட்டதென்று வலிந்து கொள்ள முடியாது. ஏனெனில் இங்கிலாந்தில் ஏற்படும் சமூக நிகழ்ச்சி, உடனடியாகவும், நேரடியாகவும் தாக்குமளவு ஒட்டுப்பாடு காணப்படவில்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகளிலே கைத்தொழில் வளர்ச்சியினுலேற்பட்ட சமூக மாற்றமும், புதிய இசைக்கருவிகளின் கண்டுபிடிப்புக்களும், ஒன்றுபட்டு இசைத் துறையிலே புதுமையொன்றினைத் தோற்றுவித்தது.

புதுமைகள் முழுதாகத் தனி மனிதனது சிருஷ்டிகளல்ல — திடீரெனத் தோன்றும் அகக் காட்சியுமல்ல. அவை சமூக மாற்றமொன்றின் குழந்தைகளாக இருப்பதை ஐரோப்பாவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் மட்டுமன்றி, இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்களும் காட்டுபவையாக இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலிருந்த சுதேச அரசுகள் நிலைகுலைய, மேற்கத்தேய வல்லரசுகள் தீபோல் உட்புக சமூக, சமய நிறுவனங்களைக் கட்டிக் காப்பாற்றுவதன் மூலம் சுதேச அரசுகளின் குலைவினைத் தடுக்கலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. இதனைச் சாதிப்பதற்குச் சமுதாயத்திலே ஒருவித கட்டுக்கோப்பினை ஏற்படுத்த வேண்டியிருந்தது- சமயம், புராணம், ஆசாரம் ஆகியவற்றை வற்புறுத்தி ஒருவித 'நவநிலமானிய' அமைப்பினை உருவாக்கும் போக்கும் காணப்படுகின்றது.

தமிழ் மொழியிலுள்ள கீர்த்தனைகளில ஒருபகுதி பொது மக்கள் புரிந்து கொள்ளக் கடினமான விடயமொன்றினை இலகுபடுத்தி, இசையூட்டிக் கொடுப்பவைகளாகக் காணப்படுகின்றன. அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனைகள், இராமசாமி சிவனுடைய பெரிய புராணக் கீர்த்தனைகள், கந்தப்புராணக் கீர்த்தனைகள், கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள் முதலியன இவ்வகையைச் சார்ந்தனவே.

மொழியும், இசையும் ஒலியைத் தமது ஊடகமாகக் கொள்கின்றன, இதில் உருவாக்குபவனும் கேட்பவனும் சம்பந்தப்படுகிறார்கள். உருவாக்குபவனது கருத்தை ஒலியென்ற ஊடகம் கேட்பவனிடத்திலே பதிக்குமா, உருவாக்குபவன் வெற்றி பெறுகின்றானா? அல்லது கேட்பவன் வெற்றி பெறுகின்றானா போன்ற கேள்விகள் எழலாம்.

மொழி, ஒலி ஊடகமாக வரும்பொழுது, அளவையியல் அடிப்படையில் தெளிவாகப் பொருளை வெளியிடலாம். அளவையியல் திட்டவட்டமான கருத்து வெளிப்பாட்டினுக்கு மொழிக்குத் துணை செய்கின்றது. மொழி கருத்து முதன்மை கொண்டதால் அளவையியல் பொருந்தும். ஆனால், இசை உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதால் அளவையியல் பொருந்தாதென்று கூறுவதை ஏற்கமுடியாது. உணர்ச்சி சிறுகால அளவினைக் கொண்டதால் அளவையியல் பொருந்தாதென்று கூறுவதையும் ஏற்கமுடியாது. உணர்ச்சி சிறுகால அளவினைக் கொண்ட செயற்பாடாகையினால் இசையின் வலிமையினைச் சிறு பொழுதுக்குரியதாக்கிவிட முடியாது.

இசையினையும், கருத்தினையும், இணைத்த உருவமாகிய கீர்த்தனைகள் இருவித தாக்கத்தினை ஏற்படுத்தவல்ல நிலையில், அதன் பயன்பாடு வலிமை பெறத் தொடங்கியது. நவநிலமானிய அமைப்பு சாதியமைப்பினை இலாவகமாக வற்புறுத்த அதற்கு முரண்பாடான கருத்துக்களின் வளர்ச்சியினையும் கீர்த்தனைகள் காட்டத் தொடங்கின. கீர்த்தனையின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை இது முக்கியமாக அவதானிக்க வேண்டிய பகுதியாகும். கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள். இராமலிங்க அடிகள், வேதநாயகம்பிள்ளை ஆகியோர் சிருஷ்டித்த தேசிய ஒற்றுமைக் கீர்த்தனைகள் இவ்வகையினைச் சார்ந்ததாகும்.

இவை கீர்த்தனையின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை திருப்பு முனையாக அமைந்தாலும், இன்றுவரை ஏனைய இலக்கிய உருவங்கள் சமூகச் சித்திரிப்பில் எடுத்துக் கொண்ட பங்கு வளர்ச்சி பெற்று வருவது போல், கீர்த்தனைகளின் பங்கு வளர்ச்சி பெறவில்லை.

கச்சேரிகளிலும், இசைத் தட்டுக்களிலும், வரும் கீர்த்தனைகளை மக்கள் கேட்டு ஒருவித அழகுணர்ச்சியோ, பக்தியுணர்ச்சியோ, ஒழுக்கவுணர்ச்சியோ, கொண்டாலும், பாடப்படும் கீர்த்தனைகளிலே பெருமளவு சமூக, பொருளாதார நிகழ்பாடுகள் சித்திரிக்கப் படாமையினால், கீர்த்தனைகளின் தன்மை நூதன சாலையிலே பேணப்படும் கலை உருவம் போலாகிவிட்டது. ★



கொழும்பிலிருக்கும் ஒரு நண்பரின் உதவியால், கடந்த சில மாதங்களாக 'மல்லிகை' எனக்குக் கிடைத்து வருகிறது. தனுஷ்கோடி அழிந்தபோதே இலங்கை இந்திய இலக்கியத் தொடர்பும் துண்டிக்கப்பட்டு விட்டது. நண்பர்களிடமிருந்து கடிதங்கள் வருவதே அருகிவிட்டது. புத்தகங்கள் சஞ்சிகைகளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இந்த நிலைமையில் மல்லிகை வரவு ஓரளவு ஆறுதலைத் தருகிறது. எனது மற்றும் சில நண்பர்களும் தங்கள் பத்திரிகையைப் படித்து இலங்கையின் இலக்கிய முயற்சிகளைப் பற்றி அறியக்கூடியதாயிருக்கிறது.

நானும் சென்னையில் குடியேறிப் பதினைந்து வருடங்களாகின்றன. இந்தக் காலவெல்லையில் இலங்கையிலே எத்தனையோ இலக்கியப் பத்திரிகைகள் தோன்றி மறைந்தன என்பதையும், எத்தனையோ இப்போதும் தோன்றிக்கொண்டிருக்கின்றன என்பதையும் கேள்விப்படுகிறேன். தங்கள் மல்லிகையைப் படிக்கும்போது மேலும் பல தகவல்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது. ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டது போல, தனுஷ்கோடிப் பெருவெள்ளம் தமிழ் இலக்கியம் சம்பந்தப்பட்ட மட்டில் ஈழத்தையும் இந்தியாவையும் பிரித்து வைத்துவிட்டது. இலக்கியக் கொள்கைகள், எழுத்து நடை முதலியவனவெல்லாம் தனித்துவிடப் பட்டிருக்கின்றன. இதை உணர்ந்துதானோ என்னவோ மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வரதராசனார் இந்திய சாகித்திய அகாதெமிக்காகத் தாம் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலில் ஆறுமுகநாவலர், தாமோதரம்பிள்ளை, கதிரவேற்பிள்ளை, கனக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம்பிள்ளை முதலானோரும், மற்றும் இன்றையதலைமுறையினரும் செய்துள்ள தமிழ் இலக்கியங்களையெல்லாம் 'வெளிநாட்டுத் தமிழ் இலக்கியம்' என்று புறத்திப் படுத்தியுள்ளார்.

சமீபத்தில் வெளிவந்த மல்லிகை இதழ்கள் இரண்டில், ஈழத்துச் சஞ்சிகைகள் சொந்த நாட்டில் ஏன் அதிகமாக விற்பனையாவதில்லை என்ற பிரச்சினை எழுப்பப்பட்டிருந்தது. பதிலாக இந்தியாவிலிருந்து உபயோகமற்ற பத்திரிகைகளெல்லாம் கொண்டுவந்திறக்கப்படுகின்றன என்றும் குறைசொல்லப் படுகிறது. இந்திய இதழ்களைத் தருவிக்கப் பாடுபடும் இலங்கை ஏஜண்டுகள் ஏன் இலங்கைப் பிரசுரங்களையும் இந்தியாவுக்கு அனுப்புவதற்கு முயற்சி எடுக்கவில்லை என்று சென்னையிலுள்ள பல இலக்கிய நண்பர்கள் கேட்கிறார்கள். இலங்கை எழுத்தாளர்களும் பேச்சுவழக்குத் தமிழிலல்லாது எல்லார்க்கும் பொதுவான தமிழில் கதைகளும் கட்டுரைகளும் இந்தியப் பத்திரிகைகளில் எழுதி வெளியிட்டால், இலக்கியப் பரிமாற்றம் வலுவடையும் என்பது எனது அபிப்பிராயம். சென்னையிலுள்ள பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்களுக்கு இலங்கையில் தமிழ் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பதோ இலக்கிய முயற்சிகள் தமிழ்நாட்டைவிட மிக அக்கறையாகவும் சிறப்பாகவும் நடைபெறுகின்றன என்பதோ தெரியாது. யாழ்ப்பாணத்துக் கதாப்பிரசங்கிகளும், யாழ்ப்பாணத்துத் தவுல்காரரும் இன்றைய தமிழ்நாட்டில் மிகச் சிறந்த வரவேற்பைப் பெறுகின்றனர். ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் ஏன் இந்திய மார்க்கட்டைப் பிடிக்கக் கூடாது என்று கேட்கத் தோன்றுகிறது. நல்ல சரக்கும் நயமான வரவேற்பும் இருக்கும்போது ஈழத்து எழுத்தாளர்கள் இலக்கிய மார்க்கட்டைக் கைப்பற்றுமளவிருப்பது ஆச்சரியம்தான். தமிழ் இலக்கியத்தில் இன்றைய எழுத்தாளர்களிடமுள்ள விழிப்புணர்ச்சியும் ஈடுபாடும் பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் இருக்கவில்லை. இந்த நிலையில் இலங்கையிலுள்ள தமிழ் இலக்கியச் சிந்தனையாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் வறிதே போயிருக்கும் 'செந்தமிழ்' நாட்டுக்கு வழிகாட்ட வாய்ப்பிருக்கிறதென்று நம்புகிறேன்.

சென்னை - 20

சோ. சிவபாதசுந்தரம்

மல்லிகை

புதிய சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா	7-00
தனிப்பிரதி	-50
இந்தியா, மலேசியா	10-00

முரண்பாட்டின்

பின்னணியில்....

திக்குவல்லை கமால்

காலையில் எழுந்து முகம் கழுவிக் கொண்டால் எனக்கு அடுத்துள்ள முதல் வேலை அப்பம் வாங்கச் செல்வதுதானே? பேஸனைத் தூக்கிக் கொண்டு சமையலறைப் பக்கத்தால் வெளிக்கிட்டு ஆசிதாத்தா வீட்டை நெருங்குகையில்..... வீட்டிலிருக்கும்போதே ஏதோ விளங்காமல் பெரிய சத்தமாகக் கேட்டது. இங்கே இரண்டு வீட்டார் வாய்ச்சண்டை பிடிப்பது தானென விளங்கிவிட்டது.

சண்டை பிடிப்பதையெல்லாம் பார்த்துக்கொண்டிருப்பதென்றால் எனக்குத் தனிவிருப்பம். அப்பக்கார வீட்டுக்குப் போய் காசைக் கொடுத்து பேஸனையும் வைத்துவிட்டு, உடனே திரும்பி அங்கே நிறைந்திருந்த சனத்துக்கிடையில் நானும் புகுந்து கொண்டேன்.

'அடியே! ஒனக்கு எப்பசரி கஷ்டப்பட்டு சம்பரிசித் தின்டு பழக்கமீக்காடி? ஊடோக்கின்ட எறப்பாணிப் பழக்கம் தான்டீ இது..... பரவேச. செய்த வேலயச் செஞ்சிட்டு பேசேம் வந்திட்டாள்' ஸபரா உம்மா கீச்சுக் குரலில் கைகளை ஆட்டியாட்டித் தனிக்கவர்ச்சியுடன் குமுறி ஓய்ந்தாள். அவள் குடிசை சற்று மேட்டில் அமைந்திருந்ததால், கீழிருந்து பார்ப்போருக்கு நிச்சயமாக ஏதோ நாடகமொன்று பார்ப்பது போன்ற உணர்வு தான் ஏற்பட்டிருக்கும்!

'அடி நாசமாப்போறவள்... நீ நல்லமனிசியாடீ... நீ கொம்ருக் காலத்திலை கூத்தடின கூத்தும், ஆடின ஆட்டமும் ஏங்களுக்குத் தெரியாண்டு நெனச்சீக்கியா? வெக்கம் கூச்சமில்லாம நாலுபேரட முன்னுக்கு மொகத்தத் தூக்கிக்கொண்டு வந்திட்டா' பாத்துஞ்சியாவும் குறைந்தவளல்ல என்பதை நிரூபிக்குமாப்போல் இப்படியொரு வெட்டுப் பேச்சு.

'ஒங்குளுக்குக் கத்தம் பொறக்க நான் எத்தின பைனமன் சென்னிப்ப? அவள் வேண்டியத்தச் செல்லட்டு. ரெண்டு கையேம் தட்டினுத்தானே சத்தம். ஒரு கையத் தட்டினுச் சத்தமா?...ஃ. மனிசர் மான்சாதீட முன்னுக்கு வந்திட்டாங்க' வீட்டினுள்ளிருந்து வெறும் மேலுடன் ஓடிவந்த பாகிர்நானு தனது மனைவி, பாத்துஞ்சியாவைக் கண்டித்து உள்ளே அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டான்.

இந்தப் பெண்கள் சண்டை பிடிக்கத் துவங்கினால் யார், எவர்வந்து எப்படிக் கட்டுப்படுத்தினாலும், குறைந்தது மூன்று நாளாவது இழுத்தடித்த பின்பு தான் அக்கம் பக்கத்தவர்களுக்கு அமைதியாகத் தூங்கமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸொபஹுக்கு பாங்கு செல்லச் செல்லே தொடங்கின சண்டதான் இது. இப்ப எட்டுமணியாகீம் முடிஞ்ச பாடில்ல' பார்வையாளர்களில் ஒருவர் அலுத்துக்கொண்டார்.

இச் சண்டைக்காரர்களின் களம் — மலேவளவுக்கும் பள்ளிவாசலுக்கும் இடைப்பட்ட..... பிரதான வீதியிலிருந்து நூறு யார்போல் தள்ளி அமைந்துள்ள பகுதிதான். ஒழுங்கற்ற மேடு பள்ளங்கள். மிக நெருக்கமாகவும் அலங்கோலமாகவும் அமைக்கப்பட்ட ஓலைக்குடிசைகள்..... இடைக்கிடை களிமண் வரிச்சுவீடுகள்.

அவர்களுக்குப் பிரதான வீதிக்குவர பாதைகள் கூட இல்லே. இடுக்கு முடுக்குகளால் புகுந்து நெளிந்துதான் போக்கு வரத்துக்களேக்கூட வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தீர்க்கப்பட வேண்டிய பொதுப்பிரச்சினைகள்தான் அப் பகுதியில் அடிக்கடி நிகழும் சண்டை சச்சரவுகளுக்கெல்லாம் காரணமென்பதை எவரும் இலகுவில் புரித்து கொள்ளலாம். இதற்கு மழைபெய்து அடுத்த நாள் எழும்.....' உங்கட வெள்ளம் இங்கல போகுது. இங்கால வெட்டவாண. அங்கால காண் வெட்டுங்க.....' போன்ற சச்சரவுகளே போதாதா?

சொற்பநேர அமைதியைக் கிழித்துக்கொண்டு மீண்டும் ஸபராஉம்மா ஓடிவந்ததும் சண்டை இனியும் தொடரும் என்றுதான் நினைத்தேன். ஆனால் அவளின் முறைப்பாடு அங்கே கூடி நின்றவர்களிடம்தான்!

'பாருங்க மக்களே! எங்குஞ்ஞிங்க இரிக்க வழில்லயே. அவங்க செய்த குத்தமெல்லாம் செய்யோணும்..... நாங்க பாத்துக் கொண்டீக்கோணும். கொஞ்சம் சரி இதெனத்தியன் எண்டு கேட்டாப்போதும். ஊரழிக்கச் சத்தம்போடத் தொடங்குவாள்'

'மழபேத்சா அவள்ட ஊட்டுத் தண்ணியெல்லாம் பொக இங்கல திருப்புட்டீக்கி. எந்த நாளும் ஊத்த சீத்தயெல்லாம் எங்கட முத்தத்திலதான் போடிய. எல்லம் பொறுத்துப் பொறுத்தீந்தத்துக்கு, மூக்கேம் வெச்சிக் கொண்டீற்டொம இன்ட ஸொபஹில செஞ்சிவெச்சீக்கிய வேல..... ...'

இவ்வளவு நேரமாக நானும் எல்லாம் மறந்து கேட்டுக் கொண்டிருந்தபோதிலும், என்ன காரணத்துக்காக இவர்கள் சண்டை பிடிக்கிறார்களென்று என்னல் விளங்கிக்கொள்ள முடியவேயில்லே.

'நானு... உம்ம சீக்கரம் வரச்சென்ன' தம்பி வந்து என்னேத் தொட்டுச் சொன்ன போதுதான் வெகுவாக இங்கே நின்றுவிட்ட உண்மை எனக்குப் புரிந்தது.

அடுத்த கணம் 'ஆப்பை அடுப்படி'க்கு எடுத்தேன் ஓட்டம்.

'வா மகன் இது ஒனக்குத் தான் சுடுகிய. அந்தக் குத்தித் துண்டில கொஞ்சநேரம் இருந்துக்கோ' ஆசிதாத்தா என்னே வரவேற்று அமரவைத்தாள்.

இரண்டு அடுப்புகளில் அப்பச் சட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. பக்கத்திலே மாக்கரைத்த முட்டி. அகப்பையால் அள்ளி ஊற்றுவதும், தணல் சட்டிகளே எடுத்துவைப்பதும், நெருப்புப் போடுவதுமாக..... இயங்கிக் கொண்டிருந்த காட்சிகள் எல்லாம் ஒவ்வொரு நாளும் காண்பவைதான்.

என்னேப்போல் இன்னும் எத்தனேயோபேர் அப்பம் வாங்கக் காத்திருந்தார்கள். என்னேப் பெறுத்தமட்டில் எவ்வளவு நேரம் அங்கிருந்தாலும் அலுப்புத் தட்டுவதில்லே; ஏனென்றால் இடைவிடாது அங்கு பல கதைகளும் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டேயிருக்கும்.

'எனத்தியன் ஆசிதாத்தா ஒசக்க வெலனேவீந்து சண்டையாக்கி... ..' ஒரு கிழவி கேள்வியொன்றைப் போட்டு இக்கதையைத் துவங்கியபோது எங்கோ பார்த்துக்கொண்டிருந்த நான் சட்டென்று ஆசிதாத்தாவை நோக்கினேன். அந்த நொடிப் பொழுதுக்குள்.....

'சூஸ்' ஸென்று சட்டியில் மாவை ஊற்றி அகப்பையால் தேய்த்து, கைக் குறுந்தடிகளால் தணல் சட்டியைத் தூக்கிவைத்து பிடவைத் தொங்கலால் முகத்தைத் துடைத்தபடி விளக்கம் சொல்லத் தயாராகிவிட்டாள்.

'அநியாயந்தானே! மொகத்திலடிச்சாப்போல அதுகளட நேர்முத்தம்..... ஊத்த சீத்தயெல்லாம் கொட்டியது போதாத்துக்கு..... இன்டக்கி பாத்துஞ்சியட பொடியன் பேண்டு வெச்சீக்கெலியன்.....'

'ஓ.. ஓ... இன்டக்கி ஆறு மணீப்போல அவன் சடுஸ் புடுஸ்ஸென்டு களிசன் துண்டைப் போட்டுக்கொண்டு எங்கியோ போறதுகண்ட.....'

'எனத்தியோ கோமேட் சோதினயாம். ஒரு அவசரத்துக்கு இருட்டில..... அப்பிடிச் செஞ்சாலும் பொறகு அள்ளிப் போட்டா முடிஞ்சேன். இத்தின சண்டேம் வாரா?'

ஆசிதாத்தாவின் கதையில் நியாயம் இருப்பதாகப் பட்டதோடு சண்டைக்கான காரணமும் எனக்குப் புரிந்துவிட்டது. அதே நேரத்தில் இன்றைக்குத்தான் நவோதய புலமைப் பரீட்சையும் நடைபெறும் ஞாபகமும் வந்தது.

'இந்தா மகன் ஆப்பயக் கொணுபோ' ஆசிதாத்தா தூக்கித்தந்த பேஸ்ஸை எடுத்துக் கொண்டு வெளிக்கிட்டதோடு சாடையாக மேற்பக்கமாகவும் நோட்டம் விட்டேன்.

'பகலக்கி மட்டுமா..... ராவக்கிம் எத்தினயிரம் பேர் இங்கல போறவார. தாரன் செஞ்சென்டு இவள் கண்வெச்சிப் பார்த்துக்கொண்டு நின்டா'

,நான் கண்டடி... தண்ணிக்குப் பொகக் கதவத் தொறக்கச்செல்ல..... ஒன்ட பொடியன் ஒழும்பி ஓடியந்த'

காதில் விழுந்ததைக் கேட்டுக்கொண்டு நானும் ஓடினேன்.

வீட்டில் சாப்பிட்டு முடிவடைகையில் 'அன்னதானஹிம் மெம்பர் ஒசக்கப்போற' என்ற செய்தியோடு வாப்பா வீட்டுக்குள் வந்தார்.

போதாதா இனி எனக்கு! அந்த நிமிடமே வீட்டாருக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு வெளியேறினேன்.

இப்பகுதியில் சண்டை — குழப்பங்களேத் தீர்த்துவைக்கும் வலிமை கிராம சேவகருக்கோ, போலிஸாருக்கோ இல்லே. சம்பளமற்ற உத்தியோக, சமாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத் தூதராக இருப்பவர் மெம் பர்தான். எதற்கும், எந்த முறைப்பாட்டுக்கும் அவரிடம் தான் ஓடுவார்கள். பெரும்பா லும் அவராகவே வந்து இரு பக்கத்தினரையும் சமாதானப் படுத்தி, சனங்கள் மத்தியில் தனக்குள்ள மதிப்பையும் நம்பிக் கையையும் நிலைநாட்டிக் கொள் வதுண்டு.

தாஸிம் மூன்றும் முறை யாக ஏழாம் வட்டாரக் கிராம சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர். அவருக்கு முன் ஒவ்வொரு முறையும் அவரின் தகப்பன்தான் அதுவும் போட்டியின்றித் தெரிவு செய் யப்படுவாராம்.

நான் அங்கு செல்லும் போது எல்லோரும் மெம்பரைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்பகுதிப் பெண்களின் கூட் டமே அதிகமென்று சொல்ல வேண்டிய நிலை!

'இதெல்லாம் சின்னப் பிரச் சின. நான் முனியாண்டிய அனுப்பினு ஒரு நிமிஷத்தில எல்லாம் வெளிசாக்கிப் போடு வான்' தாஸிம் மெம்பர் நைஸா கச் சொன்னர்.

'அப்பிடி எல்லாம் கிளீனுக் கிப்போட்டா இன்டக்கி சண்ட முடியும். மறுபேணம் இனு மொரு நாளக்கிம் இதப்போல சண்ட வருந்தானே?' — இது ஒரு கேள்வி.

தன்னை அவமதிக்கும் பாணி யில் இப்படியொரு கேள்வியா என்ற மனப்பாங்குடன் கண்க ளைச் சுழற்றினர் மெம்பர்!

'இந்த ஏழ பலாயியலுக் கெடேல சண்டவந்த இவங்க ளுக்கு கக்குஸ இல்லாத்தில தானே..... நாலஞ்சி கக்குஸ கெட்டிக் குடுத்தா அது பெரிய தொரு ஒபகாரமாயீக்கும்' தள தளத்த குரலில் ஒரு கிழவனர் இப்படிச் சொன்னர்.

'அதுக்குத்தானே நானும் தெண்டிச்சிக்கொண்டு நிக்கியன். போனமாஸமும் கம்ஸபா (கிரா மசபை) வில கேட்டன். சீக்கரம் பாஸ்பண்ணுவாங்க' முன் பு பேசியதைவிட ஓரளவு இறங்கி வந்து, சிரித்த பாணியில் இத மாகச் சொன்ன காரணம், சும்மா 'வோட்' டுக்காக மாத் திரம் பாவித்து. வந்த எளிய சனங்களும் கொஞ்சம் சிந்தித்து வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்ததாலோ என்னவோ!

'மகன் கோச்சிக்கொள்ள வாண. அல்லாவுக்காக நீங்க இந்தச் செய்தியமட்டும் செல்ல வாண. நீங்க மொதலாம் பைணம் இலக்ஷன் கேக்கச் செல்லே ஒரு மாஸத்தில..... கெட்டித்தாரென்டது நெனவில் லயா?' அவர் இங்கு வருவ தற்கே காரணமாயிருந்த சண் டை பிடித்த பாத்னுனுச்சியா தான் இப்படி முகமூடியைச் சந் தர்ப்ப வசமாக மெல்ல க் கிழித்தாள்.

'இவரட வாப்பா எனத்தி யன்சென்ன. அந்தாபாருங்கொ மேலீக்கிய 'பதலமல' அவரட தானே. அதில சொந்தச் சல் லீல கெட்டித்தாரென்டெலியா சென்ன. எனத்தியன் நடந்த? இன்டவரக்கிம் கண்டதொன்டு மில்ல'- ஆமோதித்துப் பேசி, வரலாற்று விளக்கம்கூடத் தந் தவள் வேறுயாருமல்ல; ஸபரா உம்மாதான்.

தாஸிம் மெம்பர் நாலுபுற மும் மிரள மிரளப் பார்த்தார். யார் யாரைச் சமாதானம் செய்துவைக்க வந்தாரோ, அவர் கள் தானுகவே சமாதானமாகித் தனக்கு எதிராக வந்துவிட்டது போன்றதவிப்பு! இடையிடையே எழுந்த சிரிப்புக்கள் அவரைத் தலை குனிய வைத்தது.

'நீங்களியல் யோசிக்காம இப்பிடிப் பேசவாண. நான் சீக் கரமா கெட்டித்தாரத்துக்கு தெண்டிக்கியன்' என்றவாறு மெதுவாகத் திரும்பி நடக்கத் தொடங்கினர்.

'இவ்வளவு காலமும் கக் குஸ கெட்டித்தார..... கெட்டித் தாரென்டு எங்கள ஏமாத்தின இதுக்குப் பொறகு பத்துருவத் தாள்கள எடுத்துக்கொண்டு வோட் கேக்கமட்டும் இந்தப் பொக்கத்துக்கும் வரவாணம்' வெகு சத்தமிட்டுக் கத்தினுன் அப்பகுதி இளைஞனெருவன்.

'இதுதானே நாங்க எல் லாப் பைணமும் கேக்கிய..... செஞ்சி தந்தீந்தா ஒரு கொழப் பமுமில்லியே' பெண்கள் தமக் கிடையில் குசுகுசுத்துக் கொண் டனர்.

இவ்வளவு காலமும் மெம் பராகவும் அதே நேரத்தில் பெரிய முதலாளியாகவும் இருக் கும் தாஸிம் மெம்பர், அவர்க ளுடைய கக்கூஸ் பிரச்சினை உட் பட மற்றும் தேவைகளை எந்த ரீதியிலாவது தீர்த்துவைத்திருந் தால் இன்று இப்படியொரு சண்டை நடந்திருக்கத் தேவை யில்லையே என்பதை நினைத்துப் பார்க்கும்பொழுது எனக்கும் அவர்மீது கோபம் கோபமாக வந்தது.

தனது வோட்டுக் கோட் டையின் ஒரு பக்கம் சரிந்து கொண்டிருக்கிறதேயென்ற வேத னையில்தான் போலும் வெகு தூரத்தில் மிக வேகமாக நடந்து கொண்டிருந்தார் தாஸீம் மெம்பர்! ★

உண்மை இலக்கிய ரசி கர்களுக்கு சில பொறுப்பான கடமை கள் உண்டு. ஈழத்து தேசிய இலக்கியம் தனக் குகந்த தகுந்த கௌர வத்தைப் பெற வேண் டும். இதைச் சாதனை யாக்க முனைந்து செய லாற்றி வெற்றி பெறும் நோக்கத்துடனேயே மல்லிகை ஆரம்பிக்கப் பட்டது. இதைச் சாதிக்க விருப்பமுள்ளவர்கள் தொடர்ந்து மல்லிகை யைப் படிக்கவும்.

ஆண்டுச்சந்தா 7-00
தனிப்பிரதி 50 சதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விமர்சனம்

கே. எஸ். சிவகுமாரன்

கலை இலக்கிய உலகங்களில் விமர்சனம் இன்றியமையாத தொன்று. கலையும் விமர்சனமும் பிரிக்க முடியாத நிலையில் ஒன்றோடொன்று பிணைந்து இருக்கின்றன. ஒரு நல்ல கலை ஞன் ஒரு நல்ல விமர்சகனுமாவான். ஒரு நல்ல விமர்சகன் கலை உணர்வு கொண்டவனுமாக இருப்பான். கவிதை, புனைகதை நாடகம், திரைப்படம், இசை, நாட்டியம், ஓவியம் போன்ற கலை இலக்கியத் துறைகளில் விமர்சனம் பெரும் பங்கு எடுக்கிறது.

விமர்சனம் என்பது முடிந்த முடிபல்ல. கலை இலக்கிய முயற்சிகள் பற்றிய விமர்சகன் ஒருவனின் தனிப்பட்ட கருத்தே விமர்சனமாகும். தனிப்பட்ட கருத்தை அவன் தனது கல்வி, கேள்வி, அறிவு, அனுபவம் ஆகியவற்றிற்கு ஏற்ப தெரிவிக்கின்றான். உண்மையில் நாம் ஒவ்வொருவரும் விமர்சகரே. விரல் சூப்பும் சிறு குழந்தைகூட தனக்கு மகிழ்ச்சி ஏற்படும் போதும், அதனை வெளிக்காட்டிச் சிரிக்கும்போதும் அது தனது விமர்சனத்தையே அங்கு செய்கிறது. அதாவது எதிரொலியின் வெளிப்பாடே விமர்சனமாகும்.

விமர்சனம் என்றால் குற்றம் குறை கண்டுபிடிப்பது மாத்திரமல்ல. அல்லது செஞ்சோற்றுக் கடனுக உபசார வார்த்தைகளால் பன்னீர் - மல்லிகைப்பந்தல் போடுவதுமல்ல. நாம் ஒவ்வொருவருமே விமர்சகர்தான் என்றாலும் சில பிரத்தியேக பயிற்சிகளால் எம்மில் சிலர் ஒரு கலைப் படைப்பை நுட்பமாக அணுக முடிகிறது. தீர்க்கமாக அல்லது ஊடுருவிப் பார்க்க முடிகிறது. இந்தப் பயிற்சி அடிப்படைக் கல்வி கொண்டு உருவாகி, பின்னர் பல்முனைக் கலை இலக்கியப் பரிச்சியத்தினால் கூர்மை பெறுகிறது. விமர்சகன் தனது பார்வையை விருத்தி செய்து கொள்கிறான்.

விமர்சனத்தில் எல்லாவற்றையுமே விமர்சித்துவிடலாம் என்றில்லை. ஒரு விமர்சகர் ஆய்வறிவு ரீதியாகப் பார்த்தால் இன்னொருவர் உணர்ச்சி மயமாகவே பார்ப்பார். மற்றொருவர் வரலாற்று ரீதியாகப் பார்த்தால் பிறிதொருவர் சமூகக் கண்ணோட்டத்தில் பார்ப்பார். ஒருவர் 'கலை என்பதே மாயத்தோற்றம்' என்ற நிலை பிறழ்ந்த அடிப்படையில் விமர்சித்தால் வேறு ஒருவர் நிதர்சன உலகில் காலூன்றிக் கொண்டு பார்ப்பார். ஒருவர் வேண்டியவர் என்றபடியால் தாராளமாக விமர்சிப்பார். மற்றவர் வேண்டாதவர் என்ற காரணத்தால் காரசாரமாகத் திட்டுவார். இன்னொருவர் பத்திரிகை ரக விமர்சனம் எழுதுவார். ஒருவர் விரிவாக நுணுக்கமாக எழுதுவார். ஏனையவர் பத்திரிகைகளில் எழுதும்போது மொட்டையாக அபிப்பிராயம் தெரிவிப்பார். இப்படி விமர்சனம் பல வகை. விமர்சகர்களும் பலவகையினர். கலைகளும் பலவகை. உலகமே பலவிதம். அதற்காக ஒருவர் கூறியது சரியென்றோ பிழையென்றோ விவாதிக்கும் கேள்வியே இல்லை. அது அது அவரவர் அபிப்பிராயம் என்று எடுப்பது தான் சரி. ஆனால் எல்லாவித அபிப்பிராயங்களிலும் உண்மை ஒளிந்துகொண்டிருக்கும் என்பதுதான் உண்மை. உண்மையைத் தேடுவதுதானே நூற்றாண்டுகளாக மனிதன் எடுக்கும் முயற்சி. ஒருகாலத்தில் பிறக்கும் தத்துவம் வருங்காலத்தில் வலுவிழப்பது சகஜம்தானே. காலம் மாறினால் கருத்தும் மாறுவது இயற்கை. மாற்றமே இயற்கையின் நியதி.

கண்ணியம், நேர்மை, தரிசனம், சத்தியம் ஆகியன இல்லாவிட்டால் கலைஞர்கள், விமர்சகர்கள் என்று நாம் கூறிக் கொள்வதில் எள்ளளவும் பயன் இல்லை. விமர்சனம் மருந்து போல. உயிரைப் பறிப்பதோ கொடுப்பதோ விமர்சனம் அல்ல. காலம்.

தமிழில் விமர்சனக் கலை பற்றி நாம் அறியும் முன்னர் மேற்கு நாடுகளில் நிகழ்கால விமர்சனப் போக்குப் பற்றி சிறிது பார்ப்போம். லெஜிஸ்லற்றின் கிறிற்றினிஸம், தியறற்றிக்கல் கிறிற்றினிஸம், டிஸ்சிசிறிற்ப்றில் அல்லது அனலற்றிக்கல் கிறிற்றினிஸம் என்று மூன்று வகையாக ஆங்கில இலக்கிய விமர்சன முறையை வகுக்கலாம் என்பார் ஜோர்ஜ் வொட்ஸன் என்ற விமர்சகர். இப்படித்தான் கலைகள் அமையவேண்டும் என்று சட்டதிட்டம் செலுத்துதல்; அழகியல் ரீதியாக கலைகளை அணுகுதல்; பகுப்பாராய்வு என்று இவற்றை விளக்கலாம்.

1920-ஆம் ஆண்டளவில் அமெரிக்காவில் நியூ கிறிற்றினிஸம் என்றொரு புதிய இலக்கிய விமர்சன இயக்கம் ஆரம்பமாகியது. இதில் நாட்டம் கொண்டவர்கள் ஒரு படைப்பை வெவ்வேறு பகுதிகளின் இணைப்பைக் கொண்டும், படைப்பில் உள்ள சிக்கலான விஷயங்களை மனதில் கொண்டு, படைப்புக் கொடுக்கும் முழு அனுபவத்தைக் கிரகிக்கும் விதத்திலும், விமர்சனம் அமையவேண்டுமேயன்றி, தார்மீக வரலாற்று சமூகப் பார்வைகளைக் கொண்டு மதிப்பிடுவது தவறு எனக் கூறுகிறார்கள். எல்லா விதமான பார்வைகளும் அதனதன் அளவில் விரும்பத் தக்கதாயினும் சமூகப் பணிப் பண்பை முதல் நோக்கமாகக் கொண்டு விமர்சிப்பதே என்ன ளவில் சிறப்பாகத் தெரிகிறது.

புத்தக மதிப்புரை, ஆய்வு, ரசனை, இலக்கிய சர்ச்சைகள், விவாதங்கள், கண்டனம், அறிமுகம், மற்றும் வரலாற்றுச் சமூக தத்துவார்த்த உளவியல் சார்ந்த மதிப்பீடுகள், மொழிச் சிறப்பு ஆய்வு போன்ற பல்வேறு விஷயங்களும் இலக்கிய விமர்சனத்தில் உட்படத் தக்கவை என்பதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் கண்டதையும் செப்புவது விமர்சனமாகாது. அதற்கென்று ஒரு நெறி வேண்டும். இலக்கிய விமர்சனம் என்பது கற்கவேண்டிய உத்தியே அன்றி அறிவுக் குவியலை ஆளும் சக்தி பெற பயிலும் பாடல் அல்ல. வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் போன்று விமர்சனத்தின் எல்லைக் கோடுகளும் விரிந்தவை. கலை என்பது எவ்விதம் தூய்மையானது அல்லவோ அதுபோன்றே விமர்சனம் என்பதும் தூய விவகாரம் அல்ல.

இலக்கிய விமர்சனத்தில் தூய அழகியல் மூல அளவோ, பரிமானமோ இல்லை. அழகியல் உள்ளடக்கமும், அகவய வெளிப்பாடும் மாத்திரம் அல்லாது, முதிர்ந்த ஆழமான, நுண்ணிய விசாரணையும் முக்கியமாகச் சேர்ந்தே அழகியல் முறையான விமர்சனம் உருவாகின்றது. ஓர் ஆசிரியனின் அல்லது கலைஞனின் அடிப்படைக் கோட்பாடுகள், உத்தேசங்கள், பயன் மதிப்புகள் ஆகியவற்றையும், அவன் வாழும் காலத்தையும் எடைபோட்டே ஒப்பியல் ரீதியில் அவனின் படைப்புகள் பற்றிய மதிப்பீடும் எழுகின்றது.

ஒரு படைப்பு தன்னை எப்படிக் கவர்கின்றது என்பதை விமர்சகன் பலவிதங்களில் விளக்குகின்றான். தத்துவார்த்தமாக, செயல்முறையாக உறுப்பார்த்தமாக, உளவியல் சார்ந்ததாக மதிப்பீட்டைச் செய்வதுடன் ரசனை வெளிப்பாடாகவும், விளக்க அறிமுகமாகவும், பல விதங்களில் விமர்சகன் விரிவாகச் செயற்படலாம். இவை ஒவ்வொன்றும் தனித்தனியே பயனுடைத்தானவை.

செய்யுளுக்கு அணி இலக்கணம் செய்தல், உரை எழுதுதல், அரங்கேற்றம் செய்தல் முதலியன அன்று திறனாய்வுக் கலையாகக் கருதப்பட்டன. புது வெள்ளம் எனப் பாய்ந்து வந்த மேலைத் தேயச் செல்வாக்கினால் உருமாறிய அல்லது புதுப்பாதைகளில் சென்ற தமிழ் இலக்கியக் கடல் மொத்தத்தில் பயனையே பெற்றது. பண்டைய தமிழ் மொழி நவீன உலக மொழிகளில் ஒன்றுகவும் கருதப்படுவதற்கான காரணம் அது காலத்தின் போக்கிற்கு ஏற்றவாறு நெளிந்து வளைந்துகொடுப்பதனால்தான். ஆங்கிலம்போன்ற பிறமொழிகளைக் கற்ற தமிழர்கள் சிறுகதை, நாவல், நாடகம், இலக்கிய விமர்சனம் போன்ற புது இலக்கியத் துறைகளில் அக்கறை காட்டினர்.

தமிழ் சிறுகதையின் தந்தை எனக் கருதப்படும் வ. வே. சு. ஐயரே தற்காலத் தமிழ் இலக்கிய விமர்சனத் தந்தை என்று கூறலாம். அவர் எழுதிய கம்ப ராமாயண ரசனை, ஆங்கில இலக்கிய விமர்சன அடிப்படையில் எழுதப்பட்டது. கம்பனை ஹோமர், வால்மீகி போன்ற பிற மொழிக் கவிஞர்களுடன் ஒப்பிட்டு ஆராய்ச்சி பூர்வமான முறையில் அவர் எழுதியிருந்தார். தற்கால விமர்சனத்தின் போக்கிற்கு அடிகோலியவராகவும் வ. வே. சு. ஐயரைக் கருதுவதில் தவறில்லை.

டி. கே. சி. ஓர் இரசிகர். 'இதய ஒலி' யில் விமர்சனச் சாயல் சிறிது உண்டு. முத்து சிவன், கலாநிதி மு. வரதராஜன், சிதம்பர ரகுநாதன், அ. ச. ஞானசம்பந்தன், ஏ. வி. சுப்பிரமணிய ஐயர், மு. அருணாசலம், ப. கோதண்டராமன், க. நா. சுப்பிரமணியம், எழில் முதல்வன், கலாநிதி கைலாசபதி, கலாநிதி சிவத்தம்பி, முருகையன், சில்லையூர் செல்வராஜன், சாலை இளந்திரையன் போன்றோர் பல விமர்சனச் சாயல் படிந்த நூல்களையும் விமர்சனம் பற்றிய நூல்களையும் எழுதி இருக்கிறார்கள்.

தமிழில் விமர்சனக் கலை பற்றி அதிகாரபூர்வமாக அறிந்துகொள்ள கலாநிதி கைலாசபதியின் நூல்கள் பெரிதும் உதவும் என்பது எனது அபிப்பிராயம். அவருடைய நூல்கள் அனைத்தும் ஏதோ ஒரு விதத்தில் ஆராய்ச்சி பூர்வமான விமர்சன நூல்களாக - விமர்சனம் பற்றிய வையாக இருக்கின்றன.

'இலக்கியமும் திறனாய்வும்' என்ற அவருடைய நூல் குறிப்பாக பயிலப்பட வேண்டிய தொன்று. இந்த நூல்கள் தவிர 'கலைச்செல்வி' என்ற மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை வெளியீடான 1971-ஆம் ஆண்டிற்குரிய ஏட்டில் எழுதப்பட்ட 'தற்காலத் தமிழ் இலக்கியத் திறனாய்வுப் போக்குகள்' என்ற கட்டுரையும், இலங்கை கலாசாரப் பேரவையின் தமிழ் இலக்கிய ஆலோசனைக் குழு வெளியிட்ட ஏட்டில் 'ஈழத்து விமர்சனத்துறை' பற்றி எழுதப்பட்ட கட்டுரையும் இவற்றுடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியவை.

தமிழில் மூன்று விதமான விமர்சனப் போக்குகள் இருக்கின்றன என்று கலாநிதி கைலாசபதி தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றார். அவர் கூறுகிறார்: 'சங்க இலக்கியங்கள் என்று வழங்கப்படும் சான்றோர் செய்யுட்களைத் தொகுத்தளித்த ஆசிரியர்களில் இருந்து, பழந்தமிழ் இலக்கியத்திற்கு விளக்கம் செய்த இடைக்கால ஆசிரியர்கள்வரை, நூல்களின் தரத்தையும் நயத்தையும் மனம் கொண்டு இலக்கியப்பணி புரிந்தவர்கள் எல்லோரும், ஏதாவது ஒரு வகையில், திறனாய்வு நோக்கமுடையோராய் இருந்தனர் என்பதில் ஐயமில்லை. மொழியியல், உளவியல், மானிடவியல், சமூகவியல், வரலாறு, அறிவியல் போன்ற துறைகளின் தாக்கத்தை இன்றைய இலக்கியத் திறனாய்விலே காணலாம் எனினும், அது தன்னளவில் முழுமையான இலக்கியப் பிரிவாக வளர்ந்திருக்கிறது'

அதேவேளையில், நவீன தமிழ் இலக்கிய விமர்சனம் முற்று முழுதாக பிறநாட்டுத் திறனாய்வின் எதிரொலியே என்று தவறுதலாகக் கருதப்படக் கூடாது என கலாநிதி கைலாசபதி வலியுறுத்துகிறார். இதற்குக் காரணம் காட்டும் அவர், 'மேற்கு நாடுகளில் நவீன திறனாய்வுக் கொள்கைகளும் நடைமுறைகளும் தோன்ற ஏதுவாக இருந்த அதே காரணிகள், தமிழ்ச் சமுதாயத்திலும் கடந்த சில தசாப்தங்களாக உருவாகி வந்திருக்கின்றன. அதாவது புதிய திறனாய்வு தோன்றி வளர்வதற்கு இன்றியமையாக் கூறுகள் எமது மொழியில் இருக்கின்றன. பழைய அளவைக் கட்டளைகளில் இருந்து விடுபட்டு, திறனாய்வாளர் தமது கவனத்தைச் செலுத்தத்தக்க, தகுதிபெற்ற, புத்தம் புதிய ஆக்கங்கள், எதிர்கால இலக்கியத்தைப் பற்றிய நம்பிக்கையையும், உள்ளக்கிளர்ச்சியையும் நவீன திறனாய்வு தோன்றுவதற்குரிய முன்னீடுகளாக இருந்தன.'

திறனாய்வுத் துறையில் ஈடுபட்டவர்களை மூன்று பெரும் பிரிவினராக வகுக்கலாம். வ. வே. சு. ஐயர் முதல் மார்க்க பந்து வரை ஆராய்ச்சி சம்பந்தமான திறனாய்வுகளை ஒரு சிலர் செய்தனர். ஆனால், அவை 'நவீன திறனாய்வு முலாம் பூசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்ட புதிய விருத்தியுரைகளாகவே அமைந்திருப்பது உறுதிப் படுத்தப்படும். என்று விமர்சகர் கைலாசபதி கூறுதின்றார். டி. கே. சி. போன்றவர்கள் இரண்டாவது பிரிவினர். மூன்றுவது பிரிவினராக கு. ப. ராஜகோபாலன், சிட்டி, புதுமைப்பித்தன், க. நா. சு., சி. சு. செல்லப்பா, கனகசபாபதி, வெ. சாமிநாதன், சித்திரபாரதி, எழில் முதல்வன், பிச்சமூர்த்தி, நீ. கெ. துரைசாமி போன்றவர்களைக் குறிப்பிடலாம். எழுத்து, நடை, கணையாழி, கசடதபற, ஞானரதம், தீபம் போன்ற பத்திரிகைகளில் இவர்களுடைய விமர்சனங்கள் வெளிவந்திருக்கின்றன. சமகால விமர்சகர்களில் ஈழத்து விமர்சகர்களே தமிழ் நாட்டிலும் கௌரவிக்கப் படுகிறார்கள். தமிழ் நாட்டு விமர்சகர்களில் வையாபுரிப் பிள்ளை, பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை, சிதம்பர ரகுநாதன், வல்லிக்கண்ணன், ஆர். கே. கண்ணன், தி. க. சிவசங்கரன், நா. வானமாமலை, ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் போன்றோரும் ஈழத்தில் கலாநிதி கைலாசபதி, கலாநிதி சிவத்தம்பி, இ. முருகையன், இ. இரத்தினம் போன்றோரும் ஆழமான முறையில் விமர்சனம் செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் பல புதிய விமர்சகர்கள் தோன்றிவருகிறார்கள்.

வரலாற்றுப் பார்வை, சமூக நோக்கு, அழகியல் அக்கறை ஆகிய மூன்றையும் ஒன்றுக்கொன்று அனுசரணையாகவும், ஒன்றையொன்று பின்னிச் சார்ந்தவையாகவும் கொண்டு கலை இலக்கியங்களை ஆராய்வதே மேல். தமிழில் விமர்சனக் கலை பற்றி தற்போதைக்கு இவ்வாறே தொகுத்துக் கூறமுடியும். ★

ஒரு மலைமகனின் கேள்வி

கூதற் காற்றில், குளிரில், மழையில்
குன்றுகள் தோறும் குடும்பத்தோடு
மாட்டுத் தொழுவ 'லய'ங்களில்கிடந்து
மாடாய் உழைத்து பாடாய்பட்டு
நின்று, நடந்து, நிமிர்ந்து, வளைந்து,
நித்தம் உழைத்தும் மிச்சம் இல்லை

எனினும் எங்கள்
உழைப்பில் உண்டு
கொழுக்கும் துரைமார்
உதிரம் உறுஞ்சி
உண்ணும் அட்டைகள்
எத்தனை பேர்கள்?
எத்தனைவகைகள்? — ஆமாம்;

பொயிலைச் சாறு
அட்டையைக்கொல்லும்,
துரைமார் கொழுப்பை
எதுதான் கொல்லும்?

'ராதேயன்'

உக்கல்கள்



சாந்தன்

நண்பர்கள் இருவரும், கால்சுடுக்கப் பேருந்திற்காகக் காத்துக்கொண்டு நின்றபோது, அங்கே பிச்சை கேட்டு வந்த குருட்டுக் கிழவன் ஒருவனைப் பார்த்து இரங்கி, காற்சட்டைப் பைக்குள் கையைவிட்ட 'அவன்' 'பிச்சைக்காரன் ஒரு சிங்களவன்' என அறிந்து வெறுங் கையை வெளியே எடுத்ததும்; அதே வேளையில் கீழே விழுந்த கிழவனை 'இவன்' தூக்கிவிட்டதற்கு முகத்தைச் சுளித்ததும்; இவனுக்கு ஏமாற்றமாய்ப் போனபடியால்,

'ஏன் அப்படிச் செய்தாய்?' என்று கேட்டதற்கு,

'உவங்கள் எங்களை அமத்துறவன்கள்' என்று அவன் பதில் வரவே, இவன் சிரித்தான்.

'என்னதானிருந்தாலும், இன உணர்வுகள் தங்களை இனங்காட்டிக் கொள்ளத் தவறுவதேயில்லை — இருந்துவிட்டு ஒரு தரமாவது.....'

சுய சமாதானமோ, இவனைத் திருப்திப்படுத்தச் சொன்னானே?

'.....பாத்தியா, இண்டைக்கு? இனத்துக்கு அபாயம் எண்டவுடனை எல்லாரும் ஒண்டாச் சேர்ந்தாச்சு..... என்னதானிருந்தாலும் இன உணர்வு மழுங்காது.....'

'அது சரி; என்ன ஒண்டாச் சேர்ந்த கதை?'

'.....ஆளுக்கொரு திசையாய்ப் பிரிஞ்சு நின்ட தமிழர்கள் எல்லாம், தமிழினத்தை ஒன்றுக்க இண்டைக்கு ஒண்டானதைத்தான் சொல்றன்'

'தமிழினத்தை இரண்டாக்கத்தன்னும் அல்ல: மூன்றுக்க—நாலாக்கப் பார்த்தவர்களெல்லாம் இண்டைக்குத்தானே ஒண்டாக்கப் பாக்கினம்!.....'

'எதைச் சொல்லுறாய்?'

'.....இல்லை; சாதியைக் காட்டி இனத்தைப் பிரிச்சதலைவர்களும் இதிலை இருக்கினமெல்லே?.....'

'அதை விடு..... பாதகமில்லை - ஆனை, இந்த அணியிலை தோட்டக்காட்டாரைச் சேர்த்ததுதான் பேய் வேலை.....'

- இவனுக்குள் ஏதோ விம்மியது; 'ஏன்?'

'.....அவங்களை நம்பேலாது மச்சான்'

'மற்றெல்லாரையும் நம்புவியோ?'

'ஏன், எங்கட பகுதி வழியை இருக்கிற மற்றப்படியான்களையும் நம்பேலாது!'

'ஏன்?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமக்காரர்களுக்கு

விவசாய இரசாயனப்
பொருட்கள், உரம்
மற்றும்
கமத்தொழில் அபிவிருத்திக்குத்
தேவையான பொருட்களின்
விற்பனை நிலையம்

அக்ரோ விலாஸ்

இடைக்காடு அச்சுவேலி

'..... அவன்கள் சும்மா இப்ப தலையாட்டுவான்கள் - ஊரிலை உள்ள மற்றவைக்காக... பிறகு, சிவப்புக் கொடியெண்டிட்டு, பின்னலை போவாங்கள்! பிறவிப் புத்தி போகுமோ?'

-இவனுக்குள் விம்மிக் கொண்டிருந்தது வெடித்தே விட்டது!

ஓங்கி ஒரு இடி விட்டான்.

'டேய், உனக்கிருக்கிறது' தமிழுணர்ச்சி இல்லை- 'யாழ்ப்பாணத்து வெள்ளாள' உணர்ச்சி! தமிழினத்தை, தமிழினமாப் பார்க்கமுடியாத உனக்கு - தோட்டக்காட்டான் எண்டா என்ன, மட்டக்களப்பான் எண்டா என்ன, நளவர் பள்ளர் எண்டா என்ன. அவனுந் தமிழன்தான்' எண்டு மதிக்கத் தெரியாத உனக்கு - அந்த அபிமானமும் பாசமுமில்லாமல் எப்படித் தமிழுணர்ச்சிதானும் வரும்? தமிழன் எண்டா, தென்னம்பிரிக்காவிலை இருந்தாலென்ன, பிஜித் தீவிலை இருந்தாலென்ன, 'அவனும் என்ர ஆள்' எண்ட உணர்ச்சி எதோ அதுதான் தமிழுணர்ச்சி! இது கேவலம் - வெறும் 'யாழ்ப்பாணத்து வெள்ளாள உணர்ச்சி!.....'

மேலே பேசமுடியவில்லை. வந்துவிட்டான்.

தனியே நடக்கும்போது தான் பட்டது:

'நான், அவனுக்கு ஆத்திரத்தால் அடிக்கவில்லை'

'இந்தக்காலத்துப் பெடியளிலை, -இந்தத் தலைமுறையிலை சாதி உணர்வே இல்லை. அதைப் பற்றி இப்பவும் சிலபேர் பேசுறதும் எழுதுறதும் வீண்வேலை' என்று நம்பியும், அதை மற்றவர்களுடன் விவாதித்துங் கொண்டிருந்த இவனுக்கு, அவன் ஒரு சவாலாகத் தெரிந்தான் .....

'என்னைப் போலும் ஒரு கூட்டம்; எனக்கும் பின்னல் ஒரு கூட்டம்' என்று ஒரு உக்கின பகுதியை அவன் பிரதிநிதித்துவப் படுத்தியதை இவனால் சகிக்க முடியவில்லை!

அடித்ததில் பிழையில்லை என்றுதான் பட்டது. ★

காலம்

மின்வெட்டு
மாடிகள் இருள்கவிய
குடிசைகள் எங்கும்
குப்பி விளக்குகள்
சிவந்து சிரித்தன!

'செந்திரன்'

சிங்களப் புனைவிலக்கியம் பற்றி ஒரு பார்வை

'நீள்கரை நம்பி'

சிங்கள இலக்கியம், கோஷ்டி இலக்கியமாகி, கலங்கிய நீர்க்குட்டையாய் நாற்றமெடுக்கும் பரிதாப நிலைக்கு மாறிவிட்டது.

நாவல், சிறுகதைப் புனைவுகளுக்கு இலக்கண வரம்பை அமைத்துவிட்டு, அதற்குள் தம் பார்வையை ஓடவிடும் 'புனிதத்தை' செய்பவர்கள் மெத்தப் படித்த பல்கலைக்கழக சித்தாந்தர்கள் சிலர் எனல் என்ன தவறு? நல்ல நாவல் இது; நல்ல சிறுகதை இது என்று தமக்குள் வரையறுத்துக் கொண்டு, அவற்றைத் தேசிய பத்திரிகைகளில் ஜனரஞ்சனப் படுத்தி, வாசகர் மத்தியில் பரவலாக்க முனைவதாலும் சிங்கள இலக்கிய வளர்ச்சி தடைப்பட்டு விடுகிறது.

'சிங்கள நாவல்' எனும் திறனாய்வு நூல் திரு. எதிரிவீர சரத்சந்திராவினால் எழுதப்பட்டு இன்று வருடங்கள் பல தாண்டிவிட்டன. இதில் தொட்டுக் காட்டிய எழுத்தாளர்கள் மட்டும் பகிரங்கப்படுத்தி மேற்கோளாகக் கொள்கின்றனர். இந்நூல் வெளியிடப்பட்டதன் பின், சிங்கள இலக்கிய ஆரோக்கிய வாழ்வுக்குப் போஷாக்கூட்டும் எழுத்தாளர்களைப்பற்றி விமர்சிக்க இன்று சிலர் துணிவிழந்து நிற்கின்றனர்.

'சிங்கள நாவல்' விமர்சன நூல் வாயிலாக சரத்சந்திரா முன்வைத்த எழுத்தாளர்களின் அதே வழியில் சில எழுத்தாளர்களும் அணிதிரள்கின்றனர். 'இன்றைய சிங்கள இலக்கியக் காவலர்கள்' என்று தமுக்கடிப்பவர்கள்கூட சரத்சந்திராவின் 'தேடல்களே'! உண்மையில் இவர்கள் சிங்கள இலக்கியத்தை 'அப்பன் விட்டுச் சென்ற சிதனச் சொத்' தெனக் கருதுகின்றனர் போலும்.

ரஷிய, பிரெஞ்சு இலக்கிய மரபுகள் அதனதன் உயர் இலக்கிய நிர்மாணிப்புக்கு வழிவிட்டதெனில் நிதர்சன நிரூபண உண்மை. ஆனால், நல்லதோர் இலக்கியக் கட்டிட உதவிக்காக மரபுகளுக்கு அடிமைப்பட்டு நாசமாக வேண்டியதில்லை. நவமான மரபை ஏற்படுத்தி பிற இலக்கியங்களுக்கு, சிங்கள எழுத்தாளர்களால் அறிமுகப்படுத்திவைக்க முடியவில்லை ஏன்?

ஆர். ஆர். சமரகோனின் 'வீட்டுக் குருவி' எனும் நாவலை அறிமுகப்படுத்திவைத்த பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமல் திஸாநாயக்கா மேல் வருமாறு குறிப்பிடுகிறார்.

'மார்ட்டின் விக்ரமசிங்கா, குணதாஸ அமரசேகரா, கே. ஜயதிலக்கா, சரத்சந்திரா, சிறீகுணசிங்கா எனும் பஞ்ச மகா எழுத்தாளர்களைத் தவிர, இன்று ஆற்றல் மிக்க 'நாவல் சிருஷ்டி இளைஞர்கள் இருக்கின்றனர். அவர்களுள் தலைசிறந்தவர் ஆர். ஆர். சமரக்கோன்.'

இவரது இப்பார்வைக்குள் இரண்டு கேள்விகள் எழுந்து நிற்கின்றன.

விமல் திஸாநாயக்கா தொட்டுக்காட்டும் அவ்வைந்து எழுத்தாளர்கள் மாத்திரமா நாவல் துறையில் தம் பங்கைச் செலுத்தியுள்ளனர்? இரண்டாவது கேள்வி இதுதான்: ஒரு முன்னணி எழுத்தாளரை அறிமுகப்படுத்தும் போது திறனாய்வாளர் மனதில் அடிநாதமாக பிரஸ்தாப ஐந்து எழுத்தாளர்களது போக்கும் நோக்கும் எழாமல் இருக்குமா? 'நல்ல ஆற்றல்மிக்க எழுத்தாளர்' பலர்' எனக் குறிப்பிடும் திஸநாயக்கா அவர்களுள் முதல்வர் சமரகோன் என்கிறார். அந்த 'ஆற்றல் மிக்க எழுத்தாளர்கள் யார்? என்பது தொடர்பான கேள்வி. அவர் குறிப்பிடும் ஐந்து எழுத்தாளர்களின் வரிசைக்குப்பின், ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர்களுள் சமரகோனைத் தலைமைப் படுத்திக் 'கோஷ்டி' சேர்த்துப் பார்ப்பது நல்லதாய்ப் படவில்லை.

ஆனால், சரத்சந்திரா எழுத்தாளர் பலரை சாகித்திய வானில் வீடிவெள்ளிகளாக மாற்றிவிட மேற்கொண்ட முயற்சி ஒரு 'உயர் இலக்கிய நிர்மானச் சேவை லட்சணம்' எனல் ஏற்புடைத்து. அதையும் சிலர் ஒரு பிரேமுக்குள் நோக்குவது 'வேதாளப் பகிடி' யல்லவா!

செகோவ், மாப்பசான் போன்றோர்களின் உத்திகளை ஏற்றுக்கொள்ளாது தனக்கென ஒரு 'தனிவழி' அமைத்துக் கொண்டு சொல்லும் முயற்சியை திஸ்ஸ அமரசேகராவின் 'இபனெல்ல' எனும் சிறுகதைத் தொகுதியில் காணலாம். இதை அவரே மேற்கண்ட தொகுப்பில் குறிப்பிடுகிறார்.

'அன்டனன் அல்லது ஹேமிங்வே ஆகியோர்களின் படைப்பிலக்கியங்களை படிக்கும் வாசகர்கள் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னுள்ள பண்பைக் காண்பர்,

இலக்கிய அரங்குகளில் 'நரி நாட்டியம்' போடும் சில விமர்சகர்களது கருத்துக்களை கடுகளவேனும் கொள்ளாது தனித்துவம் கொண்ட கருணசேன ஜயலத்தின் பக்கம் வாசகர்களது கவனம் திரும்பியுள்ளது. விமல் திஸாநாயக்காவின் ஐந்து மகா எழுத்தாளருள் குணதாஸ அமரசேகராவின் காதல் கதைகளைவிட ஜயலத்தின் காதல் கதைகள் சிறப்பானதொரு ஸ்தானம் வகிக்கின்றன. அவர் கதை நடத்தும் யுக்தியில் காணும் துல்லிதமும், தெளிவும், தத்துவார்த்த லட்சணமும் அமரசேகராவின் கதைகளில் காணவே முடியாது. அமரசேகராவின் சோக வெளிப்பாட்டைத் துலாம்பரப்படுத்தும் இடங்களில் 'ஐயோ!' 'அம்மா' என்ற பம்மாத்து செயற்கைக் கூப்பாட்டுத் தன்மைகளை ஜயலத்தின் துயரக் கதைகளில் இல்லை. சோகத்தை வெளிக்காட்டும்போது அவர் வாசகர்களை கண்ணீரில் மல்க வைக்கிறார். ★

விடுதலை

எம்.எச். எம். சம்ஸ்

மழை தொடங்கி சுமார் மூன்றுமணிநேரம் இருக்கும். இன்னும் விட்டபாடில்லை. மழையிருட்டா, இரவிருட்டா என்று அறியமுடியாத நிலை.

அந்த ஓலைக் குடிசையின் உள்ளே உயிர்வாழும் ஆறு ஜீவன்களினதும் பொறுப்புக்களைச் சுமந்துகொண்ட இல்லத் தரசியான ஐஸம் சட்டிபானை, கோப்பை, படிக்கம் எல்லாவற்றையும் வைத்து மழை நீரிலிருந்து வீட்டைக் காப்பாற்றும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள்.

அந்த முயற்சியில் அவளால் பூரணமாக வெற்றிபெற முடியவில்லை.

'உம்மா..... உம்மா..... ஓடியாங்கோ சுருக்கா வாங்கோ!' இளையவன் ஹனீபாவின் குரல் மழையின் 'சோ' வென்ற இரைச்சலைக் கிழித்துக்கொண்டு ஒலித்தது.

ஐஸம் நனைந்த ஸாயா சரசரக்க புழைக்கடையை நோக்கி ஓடினாள். புழைக்கடை நிறைந்து குளமாட்டம் காட்சியளித்தது.

கடந்த ஒரு வருஷமாக கொல்லை நிறைவதும், தண்ணீர் வீட்டுக்குத் தட்டுமோ என்று பயந்து பயந்து துஆ கேட்பதும் அந்த வீட்டு வழக்கமாய் விட்டது.

இன்று சின்னவன் பெரிய தொரு அதிசயத்தைக் கண்ட வாக்கில் சத்தமிட்ட காரணத்தைச் சில கணத்தில் அறிந்தாள் அவள். அதைக் கண்டதுமே நெஞ்சுக்குள் தீவைத்ததுபோல சூடுபாய, திடுக்கிட்டு, கண்கள் பிதுங்க ஸ்தம்பித்து நின்றாள்.

வீட்டின் பின்கட்டுத் தூணொன்று இறங்கியிருந்தது! வலையின் பொருத்துக் கழன்று கூரை ஒருபுறமாகச் சரிந்திருந்தது. நாலைந்து ஓடுபள்ள நீருக்குள் விழுந்திருக்க வேண்டும்.

அன்ரூட வயிற்றுப்பாட்டுக்கே போராட்டம் நடத்தும் அவள், வீட்டைத் திருத்துவது என்பது கனவிலும் நடவாதது.

திகில் நிறைந்த பார்வையுடன் தூணைப் பார்த்தாள். அதன் பின்னணியில் குளம் போல் நிறைந்திருந்த மழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பரப்பு. அந்த நீரைத் தடுத்துக் கட்டப்பட்ட தாப்பை கோட்டை போல நிமிர்ந்து நின்று அவளது எரிச்சலை மூட்டி விட்டது.

அந்தச் சுவருக்கு மேலால் தெரிவது ஷழக் ஹாஜியாரின் வீட்டு ஓட்டுக் கூரை.

ஹாஜியார் ஐஸத்துக்குத் தூரத்து உறவு. ஆனால் பணம் என்ற தாப்பை அவர்களைப் பிரித்துவைத்தது.

ஐஸத்தின் வீட்டுத் தண்ணீரெல்லாம் தங்கள் வீட்டிக்குள் வந்து நிறைவதாக புறுபுறுப்பதும், தர்க்கம் பண்ணுவதும் படிப்படியாக பொலிஸ் ஸ்டேசன்வரை வளர்ந்து, பெருஞ் சண்டையாக முற்றி, பகையாக மாறிய நிலை!

அப்பா காலத்திலிருந்தே ஐஸத்தின் வீட்டு வளவு நீர் ஹாஜியார் வீட்டின் அருகால் ஓடி பாதைப் பெரிய காணுடன் இணைவது வழக்கம்.

கிராமச்சங்க இலக்ஷனின் போது ஹாஜியாரின் கொள்கைக்கு முரணான கட்சியை ஐஸம் வீட்டார் ஆதரித்த சாட்டை வைத்து தண்ணீரைத் தடுத்து தாப்பை கட்டும் முயற்சியில் இறங்கினர் அவர்.

பொது சௌக்கியப் பரிசோதகர், பொலிஸ் இன்ஸ்பெக்டர் இன்னும் எத்தனையோ உத்தியோகத்தர்கள் எல்லாம் வந்து சென்றனர்.

ஐயத்தின் மாப்பிள்ளை ஸுபைர் மேல்லை நோகப் பாடுபட்டு உழைத்த காசும், ஐஸம் நெருப்புத் தின்று சம்பாதித்த பணமும் இந்தத் தாப்பை போராட்டத்தினுல் கரைந்தது மட்டும்தான் மிச்சம்.

வந்த உத்தியோகத்தர்களின் காதுகளில் ஹாஜியார் எதை வைத்துத்தான் அடைத்தாரோ. ஐஸம் குடும்பத்தாரின் நியாயங்கள் ஒன்றுமே ஏறவில்லை.

சென்ற வருடம் வெஸாக் பெரஹரா கழிந்து இரண்டு கிழமையில் அந்தச் சம்பவம் நடந்தது, அவளுக்கு நன்முக ஞாபகம்.

அன்று காலை 'பாஸ்' மாருடன் ஹாஜியார் எல்லையில் நின்றிருந்தார் தாப்பை போடுவதற்கு மணல் சீமெந்து எல்லாம் தயாராயிருந்தது.

பொலிஸ், சுகாதார இலாகா எல்லாரையும் தன் பொக்கெட்டில் அமத்திவிட்டு, பணத்தின் உஷாரினுல் அவர் செய்யப்போகிற 'ஏண்மத்தவத்தை'க் கண்டதும் எல்லையை நோக்கி நடந்தான் ஸுபைர்.

'ஹாஜியார்..... நீங்க இந்த தாப்பை போடப் போறது நாயமார் அந்தக் காலத்திலிருந்தே தண்ணி ஓடிய காணி அடக்கப் போறீங்களே?' அமைதியாகத்தான் கேட்டான்.

'ஒண்ட ஊட்டு பீத்தண்ணி, மூத்திரத் தண்ணி எல்லாம் எங்கட ஊட்டிக்குள்ள வருது பெடிய ஞாயம் பேச வந்திட்டாரு..... போடா!'

ஸுபைர் கொஞ்சமும் எதிர்பார்க்காத பதில் அது. அவன் சற்றே நிதானிஞன் 'அதில்ல ஹாஜியார்..... மழை காலம் வந்தா பணிச்ச இடத்தால வெள்ளம் போறது வழக்கம்தானே..... நீங்க இதக் கெட்டினு தண்ணியெல்லாம் நின்டு எங்கட ஊடு விழுந்திடுமே..... நீங்க ஒதிப்படிச்ச மனுஷனுயிந்தும்.....'

'பொத்துடா வாய்..... இவ்வளவு நாளும் பொறுத்துப் பொறுத்துத்தான் ஈந்த..... ஒண்ட வாப்ப கபுரிலீந்து வந்தாலும் நான் இந்தத் தாப்பயக் கட்டாம உடுதல்ல..... ஏலுமண்டா வழக்குப் போட்டுத் தீத்துக்கோ!'

உரத்த தொனியில் கடுகடுப்புடன் பேசிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்ட ஹாஜியார் 'ஆ..... பாஸ் உன்னஹே..... பந்தின்ன' என்று வேலையை ஊக்குவித்தார்.

ஸுபைரின் மான உணர்ச்சிக்கும், ஏழ்மையின் அப்பாவித்தனத்துக்கும் இடையில் போராட்டம்..... மான உணர்ச்சி பீறிட உடலின் நரம்புகள் எல்லாம் முறுக்கேறிவிட்டன.

அடுத்த கணம் கால்களால் இரண்டு மூன்று உதை! நாலு அட்டி ஏறியிருந்த கடோல் தாப்பை தடதடவென்று கீழே சரிந்தது. கட்டட பாஸ் எழும்பிப் பின்வாங்கி நகர்ந்தான். ஹாஜியாரின் முகம் சிவந்து இரத்தம் அப்பியது. 'அடே கிழசாதி நாய்! நீ பெடிய ஆளாடா.....?' என்று கத்திய வண்ணம் அருகேயிருந்த அலவாங்கைத் தூக்கி முன்னே பாய்ந்து வந்தார்.

கடோல் கட்டியொன்றை ஒங்கி ஹாஜியாரின் தலைக்குக் குறிவைத்த ஸுபைரின் கையை அப்போதுதான் ஓடிவந்த ஐஸம் இறுக்கப் பிடித்துக் கொண்டான். கண்மூடித் திறப்பதற்கிடையில் ஹாஜியாரின் அலவாங்கு ஸுபைரின் தலையில் படார், என்று விழுந்தது. 'ஏண்ட அல்லாஹ்.....' என்ற மரண ஓலத்துடன் ஸுபைர் கீழே சாய்ந்தான். இரத்தச் சேற்றிலே துவண்டுகிடந்த அவனது உடல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சட்டம், நீதி, நியாயம் எல்லாம் தூங்கிக்கிடக்க, இரண்டு கிழமையில் மௌனத்துத் தந்தி வந்தது! ஸுபைரைப் புதைத்த கபுருக்கு மேலால் ஹாஜியாரின் தாப்பை வெற்றி கரமாக வளர்ந்தது.

ஜே. பி. மத்திச்சம் இன்னும் சமுதாயத்தின் கௌரவப் பிரஜைக்குரிய அத்தனை பட்டங்களையும் சுமந்துகொண்டிருக்கும் ஷபூக் ஹாஜியாரோடு ஆப்பை சுட்டு வயிறுகழுவும் ஐஸம் எப்படி எதிர்த்து நிற்கமுடியும்?

இப்போதெல்லாம் புழைக்கடையில் மழைநீர் நிறைவதும், மாதக்கணக்கில் வற்றுமல் இருப்பதும் ஐஸத்துக்கு கண்டு கண்டு பழகிவிட்டது.

ஆனால் இன்று நடந்திருப்பது உயிருக்கே ஆபத்தான காரியமல்லவா? நாளை விடிவதற்கிடையில் வீடு சரிந்துவிடுமோ என்ற பயங்கரமான நிலைமை.....

'பொலீஸுக்குப் பெய்த்து சே! சட்டமும், ஞாயமும் பணத்துக்கு வாசகத்தான் இரிக்கும். பொலீஸ நம்பிப் பொரோசனம் இல்ல! ஊரில பாராவது ஆகுமா மனுஷர் கிட்ட செல்லிப்பாத்தா என்னு? சீ! சதையுள்ள பக்கத்துக்குத் தானே கத்தி நாடும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தனும் வாயத் தொறக்க மாட்டானுவள்'

ஐஸம் சிந்தனைச் சுழற்சியில் சிக்கி மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டாள். ஒரு முடிவுமே இல்லாத நிலை.....

புழைக்கடைப் பக்கத்திலிருந்து மற மறவென்ற சத்தம் மறுபடி கேட்டது. அதைத் தொடர்ந்து தண்ணீருக்குள் ஓடுகள் விழும் சத்தம்.

பற்றி எரியும் உள்ளத்திலிருந்து கிளம்பிய பெருமூச்சுகள் அனலாக வெளிவந்தன.

'ஹாஜியார்..... ஊருக்குப் பெரிய மனுஷன்! ஏழைகள்ட ரத்தத்த உறிஞ்சிக் குடிக்கி பிசாசு!' இனந் தெரியாத வெறி அவளுடலில் மின்சாரமாகப் பாய்ந்தது.

அடுத்தகணம் குசினிக்குள் இருந்த பெரிய அலவாங்கைத் தூக்கி எடுத்தாள். புழைக்கடையில் முழங்காலளவு தண்ணீர். ஐஸத்தின் கையிலிருந்த அலவாங்கு ஹாஜியாரின் தாப்பையைப் பதம்பார்த்தது. அடிக்கு மேல் அடி! நீர் தேங்கி நின்ற தால் ஊறியிருந்த தாப்பை தடதடவென்று கீழே சரிந்தது. சிறைப்பட்டிருந்த மழை நீர் விடுதலைக் கீதம் இசைப்பது போல இரைச்சலுடன் பாய்ந்து சென்றது.

வெற்றிப் புன்னகையுடன் திரும்பினாள் ஐஸம். தண்ணீர்ப் பிரச்சினை தீர்ந்தது! ஆனால் பெரியதொரு ஆபத்தான பிரச்சினை விடிவதற்கிடையில் தன்னை எதிர்நோக்கி இருப்பதை அவள் அறிவாள். இருந்தாலும் அவளுக்குக் கவலையில்லை.

சாகத் துணிந்தவளுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு தானே!

★

கணக்குப் பிழைக்கும்!

மேலே இருக்கும் நீங்கள்
எங்களைப் பார்த்து,
காலால் இட்டதை, தலையால்
செய்தோம்! ஆனால்
கீழே கிடக்கும் நாங்கள்,
தலையால் சுமந்ததை
காலால் ஒத்தி, ஒதுக்கித்
தள்ளி விட்டீர்கள்!!
குப்பையில் கிடக்கும் எங்களை,
குறைத்து மதித்துத்
தப்புக் கணக்குப் போட்டீர்!
கணக்குப் பிழைக்கும்!!

மருதூர்க் கனி

பறவைகளுக்குப் பாதக்கொலுசு

பறவைகளில் பல நீண்ட நெடுந்தூரம் பயணம் செய்கின்றன. அவை பயணம் செய்யும் மார்க்கத்தையும், அவை செல்லுமிடத்தையும் கண்டுகொள்வதற்காக, பறவையியல் விஞ்ஞானிகள் அவற்றின் கால்களில் சிறு வளையங்களை மாட்டிவிடுகின்றனர். இந்த ''கொலுசு''களைக் கண்டெடுப்பவர்கள், அவற்றை அந்த வளையங்களிலுள்ள விலாசதாரர்களுக்கு அனுப்பி வைப்பர். இவ்வகையில் பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

அண்மையில் துருக்கியிலிருந்து ஒருவர் 'மாஸ்கோ' என்று பொறிக்கப்பட்ட (அத்துடன் ஒரு குறியீட்டு எண்ணும் பொறிக்கப்பட்டிருக்கும்) வளையம் ஒன்றை அனுப்பி வைத்தார். அது அவரால் சுடப்பட்ட ஒரு நீர்க்கோழியின் காலில் இருந்தது. பல ஆண்டுகளாக, அந்த நீர்க்கோழி அந்த வளையத்துடனேயே உலகின் பல பகுதிகளுக்கும் சென்று வந்திருப்பதாகத் தெரிய வந்துள்ளது!

பிராணிகளின் சுற்றுச் சார்பு குறித்து ஆராயும் சோவியத் 'பறவை வளைய கேந்திரத்தில்' இதுகாறும் 70,000 வளையங்கள் சேமித்து வெக்கப்பட்டுள்ளன. சென்ற 50 ஆண்டு காலத்தில் சோவியத் யூனியனிலிருந்து மொத்தம் 30 லட்சம் பறவைகளின் கால்களில் வளையங்களிடப்பட்டுள்ளன.

இக்கேந்திரத்தின் தலைவியான மார்கரிதா லெபதேவாவின் அறையிலுள்ள பெரிய உலகப்படத்தில், பல பறவைகள் செல்லும் பாதை கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. மாஸ்கோ வளையங்களுடன் கூடிய பறவைகள், அண்டார்க்டிக் உள்பட, எல்லாக் கண்டங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு ஒரே விதிவிலக்கு தென் அமெரிக்காதான்.

இந்த வளையங்களைக் கொண்டு, சில பறவைகள் 24,000 கிலோ மீட்டர் தூரம் பறக்க வல்லவை என்பதும் தெரிய வந்துள்ளது. துருவ மண்டலத்தைச் சேர்ந்த ஒரு பறவை, ஐரோப்பா, ஆப்பிரிக்காவின் மேலைய கரையோரமாகப் பறந்து, இறுதியில் ஆஸ்திரேலியாவின் மேலைய கடற்கரையில் பிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் நாட்டிலுள்ள ஒரு குருவி ஒரே மாதத்தில் 12,500 கிலோ மீட்டர்கள் பறந்துள்ளது என்ற விவரமும் தெரிய வந்துள்ளது. சைபீரியாவைச் சேர்ந்த குருவிகள் பனிக்காலத்தில் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று விடுகின்றன. பின்னர் இளவேனிற் காலத்தில் அவை மீண்டும், அரேபியா, கருங்கடல் மார்க்கமாக சைபீரியாவுக்கு வந்து விடுகின்றன.

பல ஆண்டுகளாக, பறவைகளைப் பற்றிச் சேகரித்து வைக்கப் பட்டுள்ள குறிப்புகள் ஒரு பெரிய நாவலைப்போன்று சுவாரஸ்ய மாக உள்ளது. சோவியத் நாட்டில், சுகோட்கா கரையோரமாக வசிக்கும் அழகிய வெள்ளை நிற வாத்து ஒன்று, அண்மையில் கன்டாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

ராங்கல் தீவுகளில் வசிக்கும் வாத்துக்களைப் பிடித்து, அவை கெர்ஸான் பகுதியிலுள்ள ஒரு விசேஷ பண்ணையில் வளர்க்கப்பட்டன. அந்த வாத்துக்களின் குஞ்சுகளை எடுத்து, அவற்றின் கால்களில் வளையமிட்டு, தன்னிச்சையாகத் திரியுமாறு விட்டனர். அவை விரைவில் பின்லந்துக்கும், நார்வேக்கும் சென்றுவிட்டன.

உலக நாடுகள் அனைத்திலுமுள்ள பறவை வாழ்க்கை ஆய்வாளர்கள் இந்தப் பரிசோதனைகளைச் செய்து வருகின்றனர். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, இந்தியா, ஜப்பான் உட்பட 50 நாடுகளைச் சேர்ந்த வளையங்களுடன் கூடிய பறவைகள் சோவியத் யூனியனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



மூன்றுகள்

மூன்று நாவல்கள் — அவரின்
இமாலய இலக்கிய சிருஷ்டிகள்
'உயர்தர வர்க்கம் — சுரண்டிக் கொழுத்தது,
இன்னும் தன் நலன்களைக்காக்க
மீண்டும் சுரண்டும், ஏமாற
நாங்களா சோணகிரிகள்? — பார்!
போர்க்குணம் நம்மிடம் உண்டு!' — அவர்
இலக்கியப் பொருளினைப் பலரறிவர்
அன்னார் சி ஏ எஸ் இல் மூன்றுமுறை
மண்தின்றதைச் சிலரே அறிவர்!

ராஜ. சரவணமுத்து

புழுதிகளும் இனிப் பிரளயங்களாகும்

கல்மூனைப் பூபால்

இந்து மா சமுத்திரம்போல் எழும்பினர்.
இந்த மண்ணைத் தம் கையால் அரித்து
தூசைத் தட்டிடத் திரண்டு நின்றார்!

ஊதினால் பறக்கும்;
இந்தத் தூசெல்லாம் திரண்டு.....
இங்கோர்
பிரளயம் சமைக்கும்;
இனிய புதுயுகம் அமைத்து ஓயும்.

வானிலுள்ள வெண்மதியை
வளைத்துப் பிடித்து.....
நிலச் சேற்றுள் புதைக்க
இளைஞர் திரண்டுள்ளார்.

எட்ட முடியாத தூரத் திருக்கின்ற
வட்டக் கதிரவனை
பூமிக்குக் கொணர்ந்திடுவார்!

நெஞ்சில் கவிந்த இருள் நீங்கி,
நெருப்பழிந்து
எங்கும் சுகந்தமெனும்
இனிமை ஒளிவிரியும்.

ஒட்டடையால் வீங்கி
உயர்ந்துள்ள கோபுரங்கள்
நிச்சயமாய்
இந்த நிலத்திற் குணவாகும்.

வறுமையெனும் சுடுநெருப்பால்
வாடி.. வதங்கி .. அழிந்து
உருமாறிப் போன
உடல்கள் தலைநிமிரும்!

ஆலையெலாம்
சோலையாகிப் பரிணமிக்கும்.

ஏலவே,
இந்து மா சமுத்திரம் போல் எழும்பினர்
இந்த மண்ணைத்
தம்கையால் அரிக்க
இதோ
நவ யுகம் நம்முன்னே துலங்குதிப்போ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகேசு சிவத்தம்பி

புதுக்கவிதை அதன் தோற்றம், நிலைபாடுபற்றிய ஒரு குறிப்பு

இந்நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தில் 'வசன கவிதை' என வழங்கப்பெற்ற இலக்கிய வடிவம் இன்று (ஆறாம், ஏழாம் தசாப்தங்களில்) 'புதுக்கவிதை' என வழங்கி வருகின்றது. பெயர் மாற்றமும், எண்ணிக்கைத் தொகையும் இவ்வடிவத்தின் ஏற்புடைமையை ஓரளவு காட்டி நிற்கின்றன எனலாம். புதுக்கவிதைப் பயில்வாளர்கள், தாம் கையாளும் இலக்கிய வடிவம் பற்றிய, ஏன் எதற்கு என்ற வினா விளக்க நிலைகளைக் கடந்து அதன் இலக்கியப் பொருள் பற்றியும், வடிவம் எப்படி அமையவேண்டுமெனபது பற்றியும் எழுதவும் சிந்திக்கவும் தொடங்கியுள்ளனர். இத்துறையில் வானம்பாடி, கசடதபற, முதலியன வற்றின் முதன்மையையும், அக்கினிபுத்திரன, ஞானக்கூத்தன், மேத்தா, கவிஜோதி முதலியோரின் முக்கியத்துவத்தையும் 'மல்லிகை', 'தீபம்' போன்ற சஞ்சிகைகள் ஏற்றுக் கொண்டுள்ளன. தாமரை படிப்படியாக, சமூகக் கடப்பாடுடைய புதுக்கவிதையின் உலைக்களமாக இயங்கி வருகிறது.

புதுக்கவிதையின் ஏற்புடைமை தவிர்க்கப்பட முடியாதது என்பதை உணர்த்துவதாக அமைகின்றது. நீபத்தில் வரும் வல்லிக்கண்ணனது 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் கட்டுரைத் தொடர் வளரும் சக்திகள் புறநோக்காகப் பார்க்கத்தக்க அளவுக்கு முனைப்புப் பெறும் பொழுதுதான் அவற்றின் வரலாறு பற்றிச் சிந்திப்பது இயல்பு.

இத்துணை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதன் பின்னரும், இவ்விலக்கிய வடிவத்தின் உண்மையான பயன்பாடு, அதன் இலக்கிய அத்தியாவசியம் பற்றிய வினாக்கள் எழுப்பப்படாது விடப்படவில்லை. தமிழில் உள்ள புதுக்கவிதைகளைப் புதிய ஒரு கவிதை வடிவமாகவோ, கவிதைக் கோட்பாடாகவோ, தக்க காரணங்களுக்காக ஏற்றுக் கொள்ளாத பலர் உளர்.

இன்றைய கவிதை இலக்கிய வளர்ச்சி நிலையில், கவிதை என்னும் கலையின் வரலாற்றை மிகச் சுருக்கமாக அறிந்து கொள்வது நலமாகும்.

பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சன், 'பண்டைய கிரேக்க சமுதாய ஆய்வு' என்னும் நூலில் இப்பிரச்சினையை நன்கு விளக்கியுள்ளார். குறிப்பிட்ட அப்பகுதி 'மார்க்சிசமும் கவிதையும்' என்னும் சிறு நூலாகவெளியிடப்பட்டுள்ளது.

நடனம், இசை, கவிதை ஆகிய மூன்று கலைகளும் ஒன்றுகவே தோன்றின. கூட்டுத் தொழிலில் ஈடுபட்டிருந்த மனிதர்கள் — மனித உடல்களின் — ஒத்திசைவான இயக்கத்திலேயே இக்கூட்டுக் கலை தோன்றிற்று. இவ்வியக்கம் இரு அமிசங்களைக் கொண்டதாக இருந்தது. ஒன்று உடல் அசைவு, மற்றது வாய் மொழிக் கூற்று. முதலாவது நடனத்தின் கருவாகவும் இரண்டாவது மொழியின் கருவாகவும் அமைந்தன. ஒத்திசைவை எடுத்துக் காட்டும் கருத்தற்ற ஒலிகள் என்ற தோற்ற நிலையிலிருந்து மொழி பின்னர் கவிதைப் பேச்சாகவும், சாதாரண பேச்சாகவும் கிளைத்தது. முன்னர் பயன் படுத்தப்பட்ட ஒத்திசையொலிகள், மனிதக்குரலால் பயிலப்படாது விடப்பட்டு (இசைக்) கருவிகளால் மீட்டும் தோற்றுவிக்கப்பட்ட பொழுது அவை வாத்திய இசையின் கருவாயின.

கவிதை என்னும் வடிவத்தின் தோற்றத்தின் முதற்படியாக அமைவது நடனம் விலக்கப்பட்டமையாகும். இதனால் 'பாடல்' தோன்றிற்று. பாடலில் கவிதை இசையின் உள்ளடக்கமாகவும், இசை பாடலின் உருவமாகவும் அமைந்தது. பின்னர் இவை மீண்டும் கிளைத்தன. கவிதையின் உருவம் யாப்பு என்பது அதன் ஒத்திசை உருவமாகும். கவிதையின் உள்ளடக்கத்துக்கு முனைப்புத்தரும் முறையில் இது இலகுபடுத்தப் பட்டது. கவிதையுள் இசைக்குப் புறம்பான அகப் பூரணத்துவமுள்ள ஒரு கதை அல்லது பொருள் உண்டு. இதனால் கவிதையிலிருந்து வசனகாவியம் என்று கொள்ளப்படத்தக்க நாவல் தோன்றிற்று.

இவ்வேளையில் இசையிலும் முற்றிலும் வாத்தியங்களாலேயே இசைக்கப்படும் ஓர் இசைவகை தோன்றிற்று. இவ்விசைவகை வெறும் நாத வடிவமாகவே உள்ளது. பல்லிய ஒத்திசை (சிம்ஃபனி) என்பது பேச்சற்ற ஒத்திசையாகும். சிம்ஃபனி என்பது நாவலின் எதிர் உருவமாகும்.

நாவல் என்பது ஒத்திசையற்ற 'பேச்சு' மொழியெனில் 'சிம்ஃபனி' பேச்சற்ற ஒத்திசையாகும். இவ்வாறு சொல்லும் பொழுது நாவல் உருவமற்றதோ, சிம்ஃபனி பொருளற்றதோ என்றாகிவிடாது. நாவலின் உருவம் அதன் சம்பவ ஓட்டத்தில், ஓட்ட இயைபில் தங்கியுள்ளது; சிம்ஃபனியின் உள்ளடக்கம் அதன் நிலைத்தள மாகவுள்ள பாடல்கள் நடனங்களை அடியாகவுடையது.

பேராசிரியர் தொம்சன் கூறும் இக்கலைவடிவ, உள்ளடக்க வரலாறு மிக நீண்டதொன்றாகும். மிகப் புராதானமான காலந்தொட்டு இன்றைய நிலைவரையுள்ள வளர்ச்சியினை எடுத்துக் காட்டுவதாகும்.

தருக்கவியல் முரணுவாதக் கோட்பாட்டு முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டப்பட்டுள்ள இந்த அடிப்படை வரலாற்றுண்மையை மனதில் வைத்துக் கொண்டு யாப்பு எனப்படும் கவிதையின் ஓசை வடிவத்தின் வரலாற்றுக்கு வருவோம்.

யாப்பு எனப்படுவது கவிதையின் இசை வடிவம். இயற்றப்படுவனவெல்லாம் இசை சார்ந்த வடிவமுடையனவாக இருக்கவேண்டுமென்ற இந்திய சம்பிரதாய வழக்கினை நாம் அறிந்து கொண்டால், செய்யுள் என்பதன் சொல்லொடு பொருட் கருத்தினை நாம் விளங்கிக் கொள்ளலாம். செய்யுள் என்பதற்கு இன்றைய உரைநடையில் ஆக்கம் (கொம்பசிஷன்) என்றே கூறல் வேண்டும். வசன இலக்கியம் தோன்றுவதன் முன்னர் செய்யுள்கள் யாப்பு எனப்படும் இசைசார்ந்த உருவ அமைதி பெற்றன. யாப்பு என்பது ஆக்கப்படும் (யாக்கப்படும்) உருவ அமைப்புத்தான், அதாவது சட்டகம் தான்.

யாப்புக்கும் இசைக்கும் - அதாவது ஓசை வடிவத்துக்குமுள்ள தொடர்பினைத் தொல்காப்பியர் நன்கு காட்டியுள்ளார். தம் காலத்திருந்த பாவகைகளின் ஓசைகளைக் குறித்துள்ளார்.

யாட்பு — ஓசை.

ஆசிரியம்

அகவுதல் (அழைத்தல், கூவுதல்) இது அகவல் என்றே வழங்குகின்றது.

வஞ்சி

தூங்கல் (ஆடுதல்) ஊஞ்சற் பாடல்களை நோக்குக.

வெண்பா

செப்பல் — எருத்தோதல். உரையாடும் தொனியில் அமைவது.

கலிப்பா

துள்ளல் (நடனம், கூத்து முதலியவற்றுக்குரியது)

தமிழில் வழங்கி வந்துள்ள யாப்புக்களின் வரலாற்றை நோக்கும்பொழுது வெவ்வேறு காலப்பிரிவில் வெவ்வேறு பாவகைகள் அவற்றுக்குரிய விகற்பங்களுடன் (பாவினங்கள்) முக்கியத்துவம் பெற்றுள்ளமையைக் காணலாம்.

பிற்காலத்தில் விருத்தம் வளர்ந்தது. அதன் பின்னர் சிந்து முக்கியத்துவம் பெற்றது. தமிழ்ச் செய்யுளின் வளர்ச்சியை இக்கண்ணோட்டத்தில் ஆராய்வது அவசியமாகும். இவ்வாறு ஆராயும்பொழுது, ஒவ்வோர் ஓசைவடிவம் ஒவ்வோர் நாகரிக நிலையுடன் இணைந்து நிற்பதை நாம் காணலாம். இந்த ஓசையமைதி உயர்மட்ட நாகரிகத்தின் சின்னமே. இலக்கியத்தின் ஓசையமைதி ஒருபுறமிருக்க இசையும் தனது வடிவத்தை தன்னுள் தான் இயங்கும் முறையினை வளர்த்துள்ளது. இதனால் தனிப்பட்ட இசைவடிவங்கள் தோன்றலாயின. இவை ஒன்றுக்கொன்று பரஸ்பரத் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

யாப்பு வரலாற்றினை எடுத்து நோக்கும் பொழுது சொல், இசையினிருந்து இசைக்குரிய அபரிமிதமான கட்டுப்பாடுகளிலிருந்து விலகிச் செல்வதைக் காணலாம்.

வாழ்க்கை ஒத்திசையி அடிப்படையான மாற்றத்தினையே யாப்புகளின் வரலாறு எடுத்துக்காட்டி நிற்கும். இவ்வுண்மை எல்லா மொழிகளுக்கும் பொருந்தும்.

அச்சுயந்திரத்தின் வருகையும் அச்சிடப்பட்ட சொல்லின் பெருக்கமும் சொல்லுக்கும் இசைக்குமுள்ள தொடர்பினை அகற்ற உதவிற்று. பாரம்பரியக் கவிதையின் வடிவம் அல்லது யாப்பு செவிப்புல விளக்கத்துக்கு அல்லது நுகர்வுக்குரிய வடிவமேயாகும். அச்சிட்ட சொல்லின் வளர்ச்சியின் வியாப்தியும் கட்புல விளக்கத்துக்குரிய ஒரு வடிவமேயாகும்.

அச்சுயந்திர வளர்ச்சியின் சமூகத்தாக்கம் பற்றி மக்லூகன் என்பவர் தாம் எழுதிய 'குற்றன்பேக் கலக்ஸி' எனும் ஆங்கில நூலிற் குறிப்பிடுவதை அறிந்து கொள்ளல் நலம். அச்சுயந்திர முறைமை மனித நடவடிக்கை ஒவ்வொன்றிலும் கட்புல அறிவு முறைமையின் முதன்மையையும் மேன்மையையும் நிறுவியுள்ளது. அச்சிட்ட சொல்லின் வளர்ச்சி கருத்து நிலைபாட்டினை ஏற்படுத்தியுள்ளது அது மனிதனின், அவன் சூழ்நிலையிலிருந்து. கூட்டு வாழ்க்கை நிலையிலிருந்து விடுபட்ட தனி மனித நிலைக்கு வளரும் தன்மையை வேகப்படுத்தியுள்ளது என்று அவர் கூறிச் செல்வர். இதன் காரணமாக இறுதியில், மனதுக்கும் சித்தத்துக்கும், பணத்துக்கும் அறக்கோட்பாடுகளுக்கும், அதிகாரத்துக்கும், அறத்துக்கும், விஞ்ஞானத்துக்கும், கலைக்குமிடையே வேறுபாடும் இடைவெளியும் தோன்றியுள்ளது என்று வாதிக்கின்றார் மக்லூகன்.

அச்சுயந்திர நாகரிக வளர்ச்சி கைத்தொழில் வளர்ச்சி, இயந்திரங்களின் வளர்ச்சி என்பனவற்றுடன் தொடர்புபட்டுள்ளது.

மேலைட்டில் கவிதையின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் ஏற்பட்ட மாற்றம் அல்லது புரட்சி இந்த நாகரிக வளர்ச்சியின் பின்னணியிலேயே ஏற்பட்டுள்ளது. இதனாலேயே கவிதைக்கும் பாரம்பரிய சமூதாயத்திற்குமிருந்த லய இயைபு அழிந்துபோகலாயிற்று. இந்த லய இயைபு அழிந்து போகின்ற காலத்திலே தத்துவ சிந்தனையிலும் உளநூற் சிந்தனையிலும் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. அடிமன நிலைபற்றிய ஆய்வு ('சப் கொன்ஷியஸ் மைன்ட்') இக்காலத்திலேயே முனைப்புப் பெற்றது. கலைத்துறையில் இதன் முனைப்பு அதிகரித்த பொழுது 'சறலியசிம்' என்ற கோட்பாடு வளர்ந்தது. சறலியசிம் எனும் தத்துவவாதம் ஓவியத்திலும் படிமக்கலையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது போன்று இலக்கியத்திலும் மாற்றங்களை ஏற்படுத்திற்று. சிம்போலிசம், இமேஜிசம் எனும் கோட்பாடுகள் இம் மாற்றங்கள் காரணமாகவே தோன்றின.

இச்சூழ்நிலையில் கவிதை பாரம்பரிய உருவ, உள்ளடக்கங்களை விடுவித்து புதிய உருவம்பெறத் தொடங்கிற்று.

அச்சுயந்திர நாகரிகத்தின் வளர்ச்சி நியதிகள் புதுக் கவிதையின் தோற்றம் வளர்ச்சியைத் தவிர்க்க முடியாதவை யாக்கின. அனால் இவ்வளர்ச்சி, அத்தகைய நாகரிக வளர்ச்சியினைப் பூரணமாக அனுபவித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்கள், பண்பாடுகளுக்கே உரியதாகும்.

கிழக்கு நாடுகளைப் பொறுத்தவரையில், சிறப்பாக இந்தியாவினைப் பொறுத்தமட்டில், மேற்கூறியன மேனாட்டுத் தாக்கங்கள் என்ற முறையிலேயே முதன் முதலில் வந்தடைந்தன. நாவல் என்னும் இலக்கியவகை தோன்றுவதற்கான சமூகச் சூழ்நிலை தோன்றுவதற்கு முன்னரே நாவல் என்ற இலக்கிய வகை இந்திய மண்ணை வந்தடைந்தது போன்று, இன்று புதுக்கவிதை என்னும் இலக்கிய வடிவமும் வந்து சேர்ந்துள்ளது.

புதுக்கவிதை தோன்றுவதற்கான சமூகப் பின்னணி இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் தோன்றியுள்ளதா என்று பார்ப்போம்.

தமிழ்நாட்டில் எழுத்தறிவு வீதம் என்னவென்பது எனக்குத் திட்டவட்டமாகத் தெரியாது. ஆனால் அது அறுபது வீதத்துக்கு மேல் இருக்குமோ வென ஐயுறுகின்றேன். அப்படிக் கொண்டாலும் முப்பத்தைந்து நாற்பது விகிதத்தினர் தன்னும் கட்புல நாகரிக நிலைக்கு இன்னும் வரவில்லை யென்றே கொள்ள வேண்டும். மேலும் இயந்திரப் புரட்சியோ, கைத்தொழிற் புரட்சியோ தமிழ் நாட்டின் பாரம்பரியச் சமூக பொருளாதார அமைப்புக்களை முற்றிலும் மாற்றிப் புதிய ஒரு யந்திரமயமான நாகரீகத்தை ஏற்படுத்தவில்லை என்பதும் உறுதி. இயந்திரமய நாகரிகத்தின் ஒரு முக்கிய அம்சமான நகர நாகரிக வளர்ச்சி சென்னையைத் தவிர (கோயாம் புத்தூரும் உட்படலாம்) மற்றைய தமிழ் நாட்டுப் பேரூர்களைப் பெரிதும் தாக்கியிருப்பதாகக் கூறமுடியாது. அங்குள்ள முதலாளித்துவ வளர்ச்சி நிலவுடைமையை அன்றேல் நிலவுடைமையுறவுகளைப் பயன்படுத்தும் நிலையிலேயே இன்றும் உள்ளது.

மேற்கூறிய நிலைமையைப் பொதுப்பண்பாக எடுத்துக் கூறினாலும் இதனுள் ஒரு சிறிய புறநடைத் தன்மையை நாம் அவதானிக்கலாம். அது தான் சென்னையின் நகர நாகரிக வளர்ச்சியாகும். நகர வளர்ச்சியின் (அர்பனேசேஷன்) தவிர்க்க முடியா அமிசங்களான தனி மனிதப் பராதீனம், விற்பனை நுகர்வாளர் உறவு முதலியன சென்னை நகர வட்டத்துட் காணப்படுவது உண்மையோ. மேலும் சென்னை நகர நிலையில் மேனிலையடைந்த மக்களும், அவர்கள் வழியை நகர வாழ்க்கை அளிக்கும் வாய்ப்பினால் பின்பற்றக் கூடியவர்களும் பம்பாய், தில்லி, கல்கத்தா முதலிய நகரங்களுக்குச் சென்று அங்கும் நகர வாசிகளாகவே வாழுகின்ற தன்மையினைக் காணலாம். அத்தகைய சமூகத்தினரும் பிறநகர வாசிகளும் பாரம்பரியத்திலிருந்து பராதீனப்படுத்தப்பட்டவர்களாகவே வாழவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அண்மைக்காலத்தில் தமிழகத்து இலக்கிய வளர்ச்சி நெறிகளில் தில்லியின் தாக்கத்தினை நாம் காண்கின்றோம். கணையாழி தமிழகத்துக்குப் புறம்பான நகர நாகரிக வாசனையை ஏற்படுத்துகின்றது. (இந்திர பார்த்தசாரதியின் சில கதைகளிலும் இப்பண்பைக் காணலாம்: இவர் தில்லிப் பல்கலைக்கழக விரிவுரையாளர்

தமிழகத்தின் புதுக்கவிதைப் பயில்வாளர்களைத் தனி மனிதர்களாக எடுத்து அவர்களது சமூக, பொருளாதாரப் பின்னணிகளை ஆராய்வது ஒரு சிகரமான ஒரு முயற்சியாக அமையுமென்றே நம்புகிறேன்.

இத்தகைய சூழ்நிலையில், இயந்திர நாகரிகத்தின், நகர நாகரிகத்தின் ஆதிக்கத்துக்குட்பட்டவர்கள் புதுக்கவிதைப் பயிற்சியில் இறங்குவது தவிர்க்க முடியாப் பண்பே. நகர நாகரிகம் இன்று 'எலீற்றிசிம்' எனும் மேன்மக்கள் வாதத்தையும் ஏற்படுத்தியுள்ளது. புதுக்கவிதைப் பயில்வு எலீற்றிசத் தொழிற்பாடே எனலாம்.

எலீற்றிசத்தைப் பின்பற்ற முனைவது இன்றைய பண்பாட்டமிசங்களில் ஒன்று. மேற்குறிப்பிட்ட சமூக, பொருளாதாரப் பின்னணியின் வராதவர்கள் புதுக்கவிதையைப் பயிலும் பொழுது அது மேனிலைத்தழுவல் என்றே கூறல்வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, தமிழ் நாட்டில் செவிப்புல நுகர்வின் நிலைபற்றியும் நாம் சிறிது நோக்குதல் வேண்டும். கிராமியக் கலைகளின் வளர்ச்சி, கிராமியப் பாடல்களின் பயில்வு பாரம்பரிய நிலையின் ஸ்திரப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றது. கட்புலச் சாதனமாகிய சினிமாவின் செவிப்புல அமிசமாகிய 'வசனமும்' 'பாடலும்' தமிழக சினிமாவில் பெறும் முக்கியத்துவத்தினையும் இங்கு நோக்கல் அவசியம். கவிதையைப் பொறுத்தமட்டில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன் ஆகியோரின் திறமை காரணமாகச் செவிப்புல நுகர்வுக்கே பயன்படும் திரைப்படப் பாடல்

எதிர்பாருங்கள்

வெளியீடு- 2

பூ

திக்வெல்லை எழுத்தாளர் சங்கம் வெளியிடும் இலக்கியத் தரமான ஆக்கபூர்வமான புதிய முயற்சி.

கள் இன்று கவிதைகளாகியுள்ளதையும் சனரஞ்சகக் கவிதைகளாக விளங்குவதையும் நாம் காண்கின்றோம். கிராமியப் பாடல்களின் மறுமலர்ச்சியும், சினிமாப் பாடலின் முக்கியத்துவமும், புதுக்கவிதை வளர்ச்சிக்கான சூழ்நிலையை அடிநிலை மக்கள் நிலையில் அகற்றிவிடுகின்றது.

இவ்வேளையில் புதுக்கவிதையாளர்களின் கருத்துக்களையும் மனோபாவங்களையும் ஆராயும் பொழுது இப்பயில்வாளர் நகர நாகரிகத்தின் சாயல்களைப் பிரதிபலிப்பதையும் நாம் காணலாம்.

இக்கட்டத்தில், முற்போக்கு இலக்கியக் கடப்பாடுடைய 'தாமரை' புதுக்கவிதைக்குத் தரும் முதலிடம் ஆராயப்பட வேண்டியதொன்றாகும். தமிழ் நாட்டின் கிராமியக்கலை ஆய்வுக்கு நவீன இலக்கியத்தில் தளம் அமைத்துக்கொடுத்த தாமரை இன்று புதுக்கவிதைப் பயில்வுக்கு முக்கிய இடம் கொடுக்கின்றது. இது மேனிலை தழுவலா அன்றேல் அடிநிலை மக்களை ஆற்றுப்படுத்தலா என்பது பற்றிய கருத்துத் தெளிவு எனக்கு இன்னும் ஏற்படவில்லை.

(இது பற்றி வரின் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதி



'எழிலமுதன்'

சண்முகத்துக்கு தகப்பன் செய்து கொண்டிருக்கும் காரியங்களெல்லாம் அநாவசியமானதாகவும் பொருத்தமற்றதாகவுமே பட்டது. அவனுக்காக மட்டுமல்ல குடும்பத்துக்கே அவசியமான ஒன்றைத்தான் செய்துகொண்டிருக்கிறார் என்பதை ஒருபக்கத்தில் அவன் அறிவும் இடைக்கிடை குத்திக் காட்டிக்கொண்டிருந்தது. இந்த இரண்டு வாரங்களாக வீட்டிலே கொஞ்ச நேரங்கூடத் தங்காமல் பெரிய கணக்கப்பிள்ளை வீட்டையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பதும் அவருக்கு 'ஓடும் பிள்ளை' யாக அங்குமிங்கும் போய்வீட்டு வருவதுமாக அவன் அப்பா இருந்தது அவனுக்குப் பெரிய தருமசங்கடமாக இருந்தது.

ஒரு சந்தர்ப்பத்தில் அவன் நேரடியாகவே கேட்டான். 'என்ன அப்பா, நீங்க இந்த விசயத்துக்காக இவ்வளவுதூரம் கஸ்டப்படுறீங்க? மத்தவனுக கண்டா என்ன நெனைப்பானுக போனு போயிட்டுப் போவதுன்னுருக்காம.....'

'ஒனக்கென்னடா, நீ சொல்லிருவ: ஒரு நேரத்த கடத்துறதுக்கே எவ்வளவு கஸ்டப்படுறோம். ஒங்க ஆத்தாவும் அடிக்கடி நோய் நொம்பலமா படுத்துக்கிறா. நானும் ஒன் அக்காவும் ஒழைச்சி இந்த ஆறுபேரும் வவுத்தக் கழுவுறது எவ்வளவு கரச்சலாயிருக்குது. ஒருமாதிரி இந்த வேலையப் புடிச்சி ஒனக்குக் குடுத்திட்டா கொஞ்சம் ஒருமாதிரியா இருக்குமில்ல'

எவ்வளவு உண்மையான வார்த்தைகள். சண்முகத்துக்கு அது புரியாத ஒன்றல்ல. இருந்தும் நம்பிக்கைகள் சாத்தியமாதல் கூடுமா? சண்முகம் ஜீ. சி. ஈ. 'ஓ' லெவலே பாஸ்செய்து ஆறு வருடங்களாகி விட்டது. ஐந்து திறமைச் சித்திகளுடன் அவன் பாஸ் பண்ணியிருந்தபோது எவ்வளவு சந்தோஷப் பட்டான். தொடர்ந்து படித்திருந்தால் அவன் ஒரு 'கிரஜுவெட்டா' கக் கூட ஆகியிருக்கலாம். ஆனால் குடும்பநிலை தொடர்ந்து படிக்க முடியாமலாக்கிவிட்டது. என்ன செய்வது. இனி வேலை ஏதாவது செய்யவேண்டும் என்ற நினைப்பில் வேலை தேடும் முயற்சியில் இறங்கியபோதுதான் படிக்கும் உலகுக்கு அப்பால் வேலை இல்லாதோர் என்ற விரக்தி ஆத்மாக்கள் நிறைந்த ஒரு உலகினை அவன் பரிபூரணமாக அறிந்து கொண்டான். எத்தனை அப்ளிகேஷன்? எத்தனை இண்டர்வியூக்கள்? ம்ஹூம்..... பலன் பூச்சியந்தான்.

சண்முகம் போயிருந்த இண்டர்வியூக்களிலுங்கூட அவனிடமிருந்த தராதரங்களையும் தகுதிகளையும் விட்டுவிட்டு அவனிடம் இல்லாத தகுதிகளைப் பற்றிய தேடல்தான் நடந்தது. ஒருவர் கேட்டார், கேட்கவேண்டியவைகளையெல்லாம் கேட்டுவிட்டு 'ஹேவ் யூ கொட்த இட்டிஸன்ஷிப்?' 'நோ சேர்' பரிதாபமாகக் கூறினான் சண்முகம். இன்னொரு இண்டர்வியூவின் போது இப்படியொரு கேள்வி கேட்கப்பட்டது. 'உமது தகப்பனின் தொழிலென்ன?' அவனுடைய தகப்பன் சாதாரண ஒரு தோட்டக்கூலிதான். ஏதோ ஒருவித நப்பாசையில் 'அவர் எஸ்டேட்டில் கே. ஜீ.' என்றான். தகப்பனது திறமையை அனுசரித்து மகனுக்கு வேலை தரும் 'சைக்காலஜி' படித்தவர் மேலும் அந்தக் கேள்வி கேட்ட ஆபீசர் வெறுப்புக்குரிய வகையில் உதடுகளை வெட்டி முன்தள்ளி 'எ டேட் பீப்பள்' என்று அவர் முனகியதை சண்முகம் அரைகுறையாகக் கண்டான். 'யூ கேன் கோ' என்று அவர் கூறியபொழுதே உமக்கு இப்படியான இடங்களில் வேலை செய்யும் தகுதியில்லை என்று கூறியதுபோல் அவனுக்குப் பட்டது.

எத்தனை இடங்களில் எத்தனைவகை ஏமாற்றங்கள், எத்தனை முகச்சுளிப்புகள்! அந்தக் கட்டங்களில் நரகத்தின் கோரமாக்சை அவன் உள்ளுணர்வு உணர்ந்தது. அவனுடைய நம்பிக்கைகள் சிதைந்து இப்பொழுது சூனியமொன்றுதான் நம்பிக்கையாக இருக்கிறது. 'நான் செய்துகொண்ட முட்டாள் தனம் படித்ததுதான். படிக்காமலிருந்தால் ஒரு கூலி என்றளவில் உழைத்து உலகத்தை உணராத ஒரு ஜீவிதத்தில் இருந்திருப்பேன். இப்படி அவன் எத்தனையோ சமயங்களில் கூறிக் கொள்வான். காலங்கடந்த ஒரு சிந்தனைதான் அது. தோட்டத்தில் வேலைசெய்யும் இளைஞர்களை ஒருவகைப் பொறுமை உணர்வில் பார்த்து நெடுமூச் செறிவதுண்டு.

'ஓ! எவ்வளவு நிம்மதியாக அவர்கள் வாழ்கிறார்கள். நாளாந்தம் அவர்கள் கஷ்டப்படுகின்றார்கள் என்பது உண்மைதான். இருந்தாலும் அவர்கள் அதைப்பற்றிய எவ்வித பிரக்ஞையுமில்லாது எவ்வளவு உற்சாகமாய் இருக்கிறார்கள். பகலில் வேலைக்குப் போவதும் அந்தியானதும் ஒன்று சேர்ந்து கொண்டு 'பொலிபோல்' தட்டுவது. இல்லாவிட்டால் 'டோலக்' ஒன்றை தட்டிக்கொண்டு பைலா போடுவது. என்னைப் பொறுத்தவரை..... சே நரகத்திலுங் கேடு'

அவனிருக்கும் தோட்டத்தின் ஸ்கூலில் படிப்பித்துக் கொண்டிருந்த மாஸ்ரருக்கு 'இங்கிலிஷ் டீச்சிங் எனிஸ்டண்ட் போஸ்ட்' கிடைத்துவிட்டது. வேலையைப் பொறுப்பேற்க அவர் போய்விட்டார். ஸ்கூலில் காலியிடம் இருப்பதாகக் கேள்வி. அதற்கு புதிதாக ஒருவரை எடுக்கப்போகிறார்களாம்? அந்தஇடத்துக்குச் சண்முகத்தை அமர்த்தத்தான் அவன் அப்பா இந்தப் பாடுபட்டுக் கொண்டிருந்தார்.

'பெரிய கணக்கப்புள்ள ஐயாவுக்கு முடியாத விசயம் இந்தத் தோட்டத்துல ஒன்றுமில்ல. மண்ணெடுத்து இது தங்கம்னாலும் பெரிய தொரை அவர் பேச்சைக் கேட்டுக்கிடுவார். எப்பிடியாவது இத செஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித் தர்ரதா சொன்னு' அன் றொருநாள் சண்முகத்திடம் அவன் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். இருந்தாலும் அவனுக்கு அதில் நம்பிக்கை யில்லை. தன்னைப் போன்றவர் களுக்கு அப்படியான ஒரு உத் தியோகத்தைக் எடுத்துக் கொடுக்க நிர்வாகத்தினருக்கு உத்தேசமிருக்காது. ஏனெனில் அது பெரிய 'இது' காரர் விஷ யமல்லவா? தகப்பன் சொல் லிக்கொண்டிருந்தது அசுவாரசி யமாக இருந்தாலும் ஒப்புக்கு அதைக் கேட்டுக்கொண்டிருந் தான்.

'நீ ஒரு அப்ளிக்கேசன் எழு தித் தா. நா கணக்கப்புள்ள ஐயாகிட்ட குடுத்து ஆபிஸ்ல குடுக்கச் செய்றேன்'

சண்முகம் சொன்னமாதி ரியே விண்ணப்பப் பத்திர மொன்றை எழுதிக் கொடுத் தான். இரண்டு நாட்களுக்குப் பிறகு சண்முகம் அவனுடைய அக்காளின் காதுகளைப் பார்த்த பொழுது அது வெறுமையாக இருந்தது. காரணத்தைக் கேட் டறிந்தபொழுது மனத்தளவில் மட்டுமல்ல, வெளியளவிலும் தான் செயலற்று சிறுமைப்பட் டுப் போயிருப்பதாக அவனு ணர்ந்தான். எங்காவது ஒரு மூலைக்கு ஓடவேண்டும் போலி ருந்தது. முக்காற் பவுணில் செய்யப்பட்ட அந்தத் தோடு கண் கணக்கப்பிள்ளையினை 'சந் தோஷம்' செய்ய ஈட்டுக் கடைக்கு சரண்கொடுக்கப் பட்டது.

காலையில் எழும்பி உடைந்த ஒரு துண்டு நீலக்கண்ணுடியை மதிலிற் சாற்றி தனது ரேஸ ரால் 'ஷேவ்' எடுத்துக் கொண் டிருந்தான் சண்முகம். பிரட்டுக் களத்துக்குப் போய்விட்டு வந்த அவன் அப்பா 'ஒன்பது மணிக் கெல்லாம் போயிரு. பெரிய தொர வார நேரத்துக்கு முன் னுக்கு நிக்காத, அவரு கூப்பி டுற நேரத்துக்குப்போ. கேக்கு றதுக்கு பதில் சொல்லு. சரியா..... நா மலைக்குப் போறன்' சொல்லிக்கொண்டே அவர் போய்விட்டார். மௌன மாகத் தலையாட்டிக் கொண் டான் சண்முகம். நேற்றிரவு கணக்கப்பிள்ளை அவன் அப்பா விடம் சொன்னராம் 'ஒம் மகன் நாளைக்கு ஒப்பீசுக்குப் போகச் சொல்லு. நா அவனப் பத்தி பெரியதொரைகிட்டயும் கிளாக் கர் ஐயாகிட்டயும் சொல்லி யிருக்கேன். பெரிய தொர கிட்ட நாந்தான் அனுப்பி வெச்சேன்னு சொல்ல வேணு மின்று சண்முகத்துக்கிட்ட சொல்லிடு' நேற்று இரவு அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது அவன் அப்பா சொல் லிக்கொண்டிருந்தார். இதைக் கேட்டதுமே அவன் ஆத்தாள் சாமி படத்துக்குக் காணிக்கை எடுத்துவைத்துவிட்டாள்.

உபயோகத்துக்குள்ளே அந்த ஒரேயொரு வெள்ளை ஷேர்ட்டையும் மாட்டிக் கொண்டான் சண்முகம். முழங் கையை மறைக்கும்படியாக அதனை மடித்துவிட்டு, சாரத்தை சிறிது பணித்துக் கட்டினான். வழக்கமாகப் போட்டுக்கொள் ளும் அந்த தேய்ந்த செருப்புக் களைக் கழற்றி ஒரு ஒதுக்கில் போட்டான். இதை மாட்டிக் கொண்டு போனால் அவர்கள் வேறுவிதமாக நினைக்கக்கூடும். மெதுவாக வண்டிப்பாதைக்கி றங்கி நடக்கத் தொடங்கினான். 'முழுத்திறமையையும் காட்டி கஷ்டப்பட்டு பரீட்சையை பாஸ் செய்தாலும் ஒரு உத்தியோகம்

கதவடைப்பு!

ஆயிரக் கணக்கில்
பணத்தைக் கொட்டி
வேள்விகள்— விழாக்கள்
இன்னும் எத்தனையோ
விதவித அலங்காரங்கள்
நீங்கள் செய்யலாம்.- ஆனால்
ஆலயக் கதவுகளை
எங்களுக்கு மூடி வைத்த
உங்களுக்காகச்
சொர்க்கத்தின் கதவுகள்
நிச்சயமாகத்
திறந்திருக்க மாட்டா.

'—லக்ஷ்மி'

பெற எவ்வளவு தூரம் சுய கௌரவத்தையும் தன்மானத் தையும் இழந்து நிற்கவேண்டிய தாயிருக்கிறது. எண்ணங்களு டன் மோதிக்கொண்டே சென் றான்.

பெரியதுரை தனது புத்தம் புதிய 'கோல்ட் இலவன்' காரி லிருந்து இறங்கி ஒப்பீசுக்குள் போய்விட்டார். தான் ஒரு 'சுப்ரின்டெண்ட்' என்ற கர்வத் துடன் நடக்கும் அந்த அகங் கார நடை. ஒரு ஓரத்தில் கையைக் கட்டிக்கொண்டு (பெரியதுரையின் கண்ணில் படாமல்) சாய்ந்தவாறு பார்த் துக்கொண்டிருந்தான் சண்முகம். சிறிது நேரம் பொறுத்திருந்து விட்டு பெரிய கிளார்க்கரை அணுகினான்.

'என்ன வேணும்?' சிடுசிடுப் புடன் மூக்குக் கண்ணுடியைச் சரிசெய்தவாறு கேட்டார் கிளாக்கர். எதிரே நிற்பவன் சண்முகம் என்று தெரிந்ததும் குரலை நன்றாகக் கடுமையாக் கிக் கொண்டார். 'தோட்டங் களில் படித்துவிட்டிருக்கும் வாலிபர்கள் அபாயமானவர் கள், ஸ்டாவ்சை மதிக்காதவர் கள்' என்ற அனுபவ சித்தாந் தமுடையவர் அவர்.

எச்சிலை கூட்டி விழுங்கிக் கொண்டே மெதுவான குரலில் சொன்னான். 'நான் பெரிய துரைய சந்திக்கணும்' 'என்ன வெசயம்?' 'தோட்டத்திலுள்ள டீச்சிங் போஸ்ட் விசயமாக'

'ஓ.....' கிளாக்கரின் குரலில் அலட்சியம் தொனித் தது.

பெரிய கிளாக்கரின் முகத் தைப் பார்க்க எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது அவனுக்கு. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டே துரையின் அறைக் குள் நுழைந்தான். 'குட்மோ னிங் சேர்'

'யேஸ்' தலையாட்டிக் கொண்டே பெரியதுரை நிமிர்ந் தார். 'என்ன விசயம்?'

தயங்கியவாறு நின்றவன் துணிவை வரவழைத்துக் கொண்டு 'தோட்டத்து ஸ்கூல மாஸ்டர் வேலையொண்ணுக்கு வேகென்சி இருக்குது. நான் ஜீ. சி. ஈ. மெஸ்ட்டில் ஐந்து "கிரட்டிக்ஸ்" யோட பாஸ் பண் ணியிரு.....'

அவன் சொல்லி முடியு முன்பே துரை பதிலளித்து விட் டார். 'நான் ஹெட்கிளார்க் ருடைய சிஸ்டர்ட் டோட்ட ருக்கு எப்பொயின்மண்ட் குடுத் தாச்சே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்த்துக் கொண்டிருந்த வலியொன்று நெஞ்சில் கிளம்புவதைப் போல உணர்ந்தான் சண்முகம். கணக்கப் பிள்ளையும் கிளாக்கும் நாடக மாடியிருப்பதை நிதர்சனமாகத் தெரிந்துகொண்டான். ஜீ. சீ. ஈ. பரீட்சையை மூன்றுதரம் எடுத்து கம்பிளிட் சர்ட்டிபிகட் வைத்திருக்கும் அந்தப் பெண் பிள்ளையின் அதிர்ஷ்டம் அவன் மனதில்நிழலாடியது. கொதித்த மனம் அதே வேகத்திலேயே அடங்கிவிட்டது. ஏமாற்றங்கள் அவனைப் பொறுத்தவரை தான் சகஜமாகி விட்டதே. இருந்தும் ஒரேயொரு கேள்வியை மட்டும் அவன் கேட்டான்.

'இந்தத் தோட்டத்துல பிறந்து வளர்ந்தவன்னுங்கிற முறையில் எனக்குத்தானே சேர் அது கெடைச்சிருக்கணும்'

'வாட்?' நாய்மாதிரி இரைந்தான் துரை. 'நீயெல்லாங் கொஞ்சம் படிச்சிகிட்டேன்னு சொல்லி நம்மகிட்ட கேள்வி கேட்க வந்துட்டியா? ஒனக்கு என்ன தகுதியிருக்கு இங்க ஸ்டாப்பா வேலசெய்ய? நீ ஒரு கூலியாளுடைய மகேன். உனக்கெல்லாம் இங்க வேல குடுத்தா நம்ம மதிப்பு என்ன கிறது?' படபடவென்று பொரிந்து தள்ளினான் பெரியதுரை.

ஒப்பீசில் வேலை செய்யும் அத்தனை பேருடைய கண்களும் தன்னை ஊடுருவுவதை சண்முகம் உணர்ந்தான். எதுவித பதிலையும் அவன் சொல்ல விரும்பவில்லை. பதில் சொன்னால் அதன் பிரதிபலிப்புகள் குடும்பத்தைப் பாதிக்குமென்பதை அவன் தெரிந்திருந்தான்.

நியாயமான ஒரு கேள்வியைக் கேட்ட திருப்தியில் அமைதியாக - கைகளைப் பின்னுக்குக் கட்டிக்கொண்டு வெளியேறினான் சண்முகம். ★

கனைப்பு

வேல் விழா நகர் வீதியில்,
விளங்கொளி மினுங்க
நீல வான்வரை நிமிர்ந்தது,
நிறை மணி நெடுந்தேர்.

கீழ் நுகத்திலே பூட்டிய காளைகள்
கிழட்டுத் தோள் கொடுத்தன—
வாய் நுரை தள்ளின, துவண்டு.

எருதிழுப்பதால் இரதமும் நகர்வதே.

எனினும்,
மரவுருப்படிக் குதிரை வாகனங்களோ
வடிவாய்
இரத மேல் நிரை மீதிலே
மிளிர்ந்தன, எடுப்பாய்.
கருதினர் இலர், பலர்—
கிழக் காளை தம் கனைப்பை!

முருகையன்

கடல் கடந்து நாடகம் கொண்டு சென்றோம்

அருள்
திரு. நீ. மரிய சேவியர்

மதுரையில் படித்துக் கொண்டிருந்த நான் விடுதலைக்காக யாழ்ப்பாணம் வந்து நின்றபொழுது, கிறிஸ்து பெருமானின் திருப்பாடுகளின் காட்சிகளை, 'பலிக்களம்' என்ற பெயரில், முற்றிலும் புதிதான வகையில் தயாரித்து, தென்னகத்தில் திருச்சி, சென்னை, பெங்களூர் போன்ற இடங்களில் கிறீஸ்தவ நோன்பு காலத்தில் மேடை ஏற்றப்படுதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டேன்.

'பலிக்களத்' துடன் சம்பந்தப்பட்ட எல்லோரும் இந்தியா செல்வது சாத்தியமாகத்தெரியவில்லை. எனவே எமது பாடல்களை ஒலிப்பதிவுசெய்துகொண்டு செல்லவும், நாடகத்திற்கான செட்டிங்ஸ், ஆடை, அலங்காரம், ஒலி, ஒளி முதலியவைகளை தென்னகத்திலேயே ஒழுங்கு செய்பவும் தீர்மானித்தோம். 'எமது நாடகத்தின் தராதரத்தைக் காட்டுவதற்கு, எமது சாதனங்கள் அனைத்தையும் கொண்டு செல்லவேண்டும்- அல்லது நாடகம் எடுபடாது' என்ற எண்ணம் நடிகர்கள் மத்தியில் எழுந்தபடியால், திருச்சி நிகழ்ச்சியைத் தவிர ஏனைய இடத்து நிகழ்ச்சிகளை ரத்துச் செய்யவேண்டியதாயிற்று.

எமது அடுத்த பிரச்சினை பயணம்:

கப்பல் வழியாக அன்னை வேளாங்கண்ணியிடம் திருயாத்திரை சென்று திரும்ப அரசிடம் அனுமதி கோரி இருந்தோம். யாழ் மேயர் துரையப்பாவும் எமது கோரிக்கையை சிபாரிசு செய்திருந்தார். அரசு எமக்கு உத்தரவுதர மறுத்துவிட்டது. எனவே விமான மூலம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நாம் குறிப்பிட்ட நாளுக்குப் பயணத்தை மேற்கொள்ள முடியாத அவல நிலையில் திருச்சி தேவர் மண்டபத்தில் ஏப்ரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாந் திகதி நடைபெற இருந்த நாடகம், 20-ந் திகதி வரைக்கும் ஒத்திப் போடப்பட்டது. பின்னும் குறிப்பிட்ட திகதியில் எல்லோரும் ஒன்றுகப் போகமுடியாத சூழ்நிலையில் மே மாசம் வரைக்கும் மீண்டும் எமது பயணத்தைப் பிற்போட்டோம்.

மே மாதம் ஆரம்பித்த தொடக்கத்தில், இறுதி நிலைத் தேர்வு எழுதுவதற்காக மீண்டும் மதுரைக்கு நான் செல்ல வேண்டியிருந்தது. தேர்வு எழுதி முடித்துவிட்டு, திருச்சிக்கு வந்து நடிகருடைய வரவை ஆவலுடனும், ஐயத்துடனும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்! அவர்களுடைய பயணத்தில் தடை ஏதும் ஏற்படலாம் என எண்ணி, மீண்டும் நிகழ்ச்சித் தேதியை ஒத்திவைத்தேன். இப்படி நாங்கள் அடிக்கடி ஒத்தி வைத்தது, எமது முதலாவது நாடக ஒப்பந்தத்தையும், பண வசூலையும் மிகவும் பாதிக்கத் தொடங்கியது. அதுவே ஒரு தலைவலியாகவும் மாறியது.

மே மாதம் 18-ம் நாள் ஈழத்திலிருந்து பாரதம் வரும் முதலாவது (அமைச்சர்) நாடக மன்றக் குழுவினர் தமிழக மண்ணில் காலடி எடுத்து வைத்தனர். நானும், திருச்சி நிகழ்ச்சி பொறுப்பாளர் திரு. சேவியரும் விமான நிலையத்தில் வரவேற்கக் காத்து நின்றோம். 'ஸ்ரம்ஸ்' இல் கஸ்டம் அதிகம் இருக்கவில்லை. கலைஞரீகளுக்கென ஒரு தனிப்பட்ட கவுரவம் கொடுத்து திருச்சி தமிழ் இலக்கியக் கழகத்தின் மறைதிரு. மைக்கல் தந்தை எமக்கு ஆகவேண்டிய வசதிகளைச் செய்து தந்தார். அன்றிரவு பாலக்கரை முருகன் கோவிலில் திரு. சீர்காழி கோவிந்தராஜனின் கச்சேரி கேட்பதற்கு ஒருவரும் தவறுமல் ஓடிப் போனார்கள்.

எமது நாடக மேடையேற்ற நாள் அன்று திருச்சிக்கு மீண்டும் வந்தோம். 'நாம் அடுத்தடுத்து நாடகத்தைப் பிற்போட்டதனால், பண வசூல் ரொம்பவும் பாதிக்கப்பட்டு விட்டது' என்று திரு. சேவியர் மனம் வருந்திக் கொண்டிருந்தார். அதனால், 'எமக்கு ஒலியும் ஒளியும் போதுமானது. செட்டிங்ஸ் தேவையில்லை. நாமே பார்த்துக் கொள்ளுவோம்' என்று சொல்லிவிட்டோம்.

பயணக் களைப்பால் நடிகர்கள் நன்கு தூங்கிவிட்டார்கள். மூன்று மணிக்கே முக ஒப்பனை ஆரம்பமாகியது. செட்டிங்ஸ் தயாரிப்பதில் மற்றவர்கள் ஈடுபட்டார்கள். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். இந்தப் பாதகமான சூழ்நிலையை நமக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் தான் நமது திறமையெல்லாம் தங்கியுள்ளது' என்று உற்சாகம் ஊட்டிக் கொண்டிருந்தேன். ஒரு சில மணித்துளிகளில் நாற்காலிகளும் மேசைகளும் தட்டிகளும் மேடையை அலங்கரிக்கத் தொடங்கின.

எமக்குத் தரப்பட்ட அலங்கார ஆடைகள் பொருத்தம் இல்லாத மணி உடுப்புக்களாக இருந்தன. 'நம்ம மக்களுக்கு இப்படி உடுப்புத்தான் பிடிக்கும்' என்று சமாதானமும் சொல்லப்பட்டது. தமது கொஸ்ரியூம்ஸ் சரியில்லையே என்று அதிருப்தியடைந்திருந்த எனது நடிகர்களுக்கு ஆறுதல் சொன்னதிலேயே போதும் போதும் என்றாகிவிட்டது. ஆனால் முக ஒப்பனை மிகவும் பாராட்டக் கூடியதாக அமைந்திருந்தது.

இன்னும் ஒரு மணி நேரத்தில் எமது நிகழ்ச்சி, சாயந்தரம் நாலு மணிதொடக்கம் இருண்டிருந்த மேகத்திலிருந்து துளிகள் சிறிது சிறிதாக விழ ஆரம்பித்தன. மின்னலின் வெட்டு அதிர்ச்சியையும், இடியின் ஓசை நடுக்கத்தையும் தந்தது. நாடகம் பார்க்க மக்கள் வந்துகொண்டிருந்தனர். ஆனால் ஒரேயடியாகக் கொட்டு கொட்டென்று கொட்டத் தொடங்கியது. மேடையிலும் ஒழுக்கு! மண்டபத்தின் அடித்தளத்தில் ஒரு அடி வெள்ளம். நல்ல வேளையாக, பார்வையாளர்கள் வெள்ளத்துக்கு ஒதுங்கி மேலே சென்றார்கள். மழையின் வேகம் ஓய ஒருமணி நேரம் ஆகியது. நாடகத்திற்கு தலைமை தாங்க வந்திருந்த திருச்சி ஆயர் எம் முடைய நிலையைப் பார்க்க உள்ளே வந்தார். எப்படியும் நிகழ்ச்சியை நடாத்தி முடிப்பதென்று தீர்மானித்து விட்டோம்.

நேரம் பி. ப. 7-45 ஆகியது. பார்வையாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வந்துகொண்டிருந்தனர். எட்டு மணிக்குப் பத்து நிமிடங்கள் இருந்தன. நாடகம் ஆரம்பமாகியது.

'களங்கம்' என்ற தலைப்பில் 'பலிக்களம்', 'களங்கம்' என்ற இரு நாடகங்களையும் இணைத்து 1-45 மணி நீடிக்கும் நிகழ்ச்சியாக்கியிருந்தேன்!

'களங்கம்' ஆரம்பமாகியதும், ரசிகர்கள் மத்தியில் அமைதி நிலவத் தொடங்கியது. யேசுவைப் பிடிக்கச் சதித்திட்டம், பூங்காவனம், யூத தலைவர்கள் முன் யேசு, பிலாத்து மரணத்தீர்வை அளித்தல் ஆகிய காட்சிகள் நிரையாக கவர்ச்சியாக வந்து கொண்டிருந்தன. எனது நடிகர்களும், ஏதோ ஒரு புது உற்சாகம் பெற்றவர்கள் போல், இதுதான் நடிப்பு என்று சொல்லாமல் சொல்வது போல் திறம்பட இயங்கிக் கொண்டிருந்தனர். இடைவேளை இல்லாத ஒரு நிகழ்ச்சி! பலிக்களப் பிலாத்துவின் காட்சியுடன் களங்கத்தின் முதலாவது காட்சியைப் பொருத்தும் நேரத்தில் இடைவெளி தெரியப் போகின்றதே என்று எண்ணி, ஏங்கிக் கொண்டிருந்த போது, குருநகர் துரையின் கைவண்ணத்தில் ஒளி விளையாடியது. இசையமைப்பாளர் எம். யே. தாஸ் பாடிக்கொண்டிருந்த பாடலில் மக்கள் சொக்கி இருந்தனர். பலிக்களம் வேறு, களங்கம் வேறு என்று தெரியாது, நாடகம் ஒடிக்கொண்டிருந்தது. கிறீஸ்துவின் இறப்பிற்கு யார் காரணம் என்பதைக் கண்டு பிடிக்க, இரு ஆய்வாளரும் ஒரு நடுவரும் கிறீஸ்துவின் மரணத்துடன் தொடர்புள்ள முக்கிய பேர்வழிகளைத் தேடி விசாரித்து விளங்கி, யார் குற்றவாளி என்று தீர்ப்பளிப்பது தான் களங்கம். எமது மன்றத்தால் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்ட இந்நாடகம், அங்கு வந்திருந்த பார்வையாளரிடம் பரபரப்பை ஏற்படுத்தியது. பாராட்டையும் பெற்றது. புதுமையைப் புகுத்துவதற்கு யாழ்ப்பாணத் தமிழர்தான் என்ற புகழையும் தட்டியது. நாடகம் முடியுமுன் திருச்சி ஆயர் அவர்கள், மேடையிலே எமது நடிகர்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டிப் பேசுகையில், 'இவர்கள் சாமானிய நடிகர்கள் அல்ல. கைதேர்ந்த நடிகக் கலைஞர் என்றார். நாடகம் முடிந்ததும் ஒரு நண்பர் ஓடி வந்து, 'எந்தப் பெரிய சினிமா நடிகன் வந்து இந்தக் ஹாலில் நாடகம் போட்டாலும், விசில் அடிச்சான் குஞ்சுகளின் தொல்லை சொல்லமுடியாது. இன்று மட்டும் விதிவிலக்கு — சினிமா போல இருந்தது' என்றார். ஒளிக் கருவிகளை தந்துதவியவரும், 'இன்றைக்குத்தான் எனது லேற் இப்படியாகப் பயன்படுத்தப்பட்டது' என்று வாய் விட்டுக் கூறினர்.

எல்லாம் முடிய பத்தும் மணிக்கு பத்து நிமிடங்கள் இருந்தன. பஸ் எடுத்து தமிழ் இலக்கியக் கழகத்துக்குப் போக நேரம் சரியாக இருந்தது.

அடுத்தடுத்த நாட்களில், வேளாங்கண்ணி, மதுரை, பெங்களூர், மைசூர் (பிருந்தாவனம்) முதலிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டபின் ஈழத்துக் கலையை பாரதத்திலும் ஓரளவில் எம்மால் முடிந்த வரையில், எடுத்துக் காட்டியவர்கள் என்ற பெருமையுடன் தாயகம் திரும்பினேம்.

பிரசவம்

பாலமுனை பாறூக்

இன்னும் நாங்கள்—

விடை காண முனையாத
வினாக் குறிகளாய்.....
எதிர் காலத்தை எண்ணாத
நிகழ் காலங்களாய்.....

வாழ்ந்து கொண்டிருப் பதால்

பிரசவிக்க முடியாத
கர்ப் பிணிகளாய்.....

வருந்திக் கொண்டிருக் கிறோம்!

வினாக் குறிகள்
விடை காண முனையும் போது.. .....
நிகழ் காலங்கள்
எதிர் காலத்தை எண்ணும் போது.....
நிச்சயம் இங்கும் பிரசவம்
நிகழும்.....

பிறப்பது.....

பொதுமை விரும்பும்
'புதுயுகக் குழந்தை!'

மலையக இலக்கியக் கடிதம்

பி. மகாலிங்கம்

முற்றிலும் மாறுபட்டதொரு சூழ்நிலையில் மலையகத்தில் ஒரு புதிய விழிப்புணர்ச்சி தோன்ற ஆரம்பித்துள்ளது. இவ்வளவு காலமும் மன்றங்களினதும் தொழிற் சங்கத் தலைவர்களினதும் கூக்குரலுக்கும் ஜே போட்டு வந்ததொரு கூட்டம் தன் நிலையை உணர்ந்து தம் சுயசிந்தனை ஆற்றலுடன் வாழ முற்பட்டுள்ளதையும் காணக்கூடியதாகவுள்ளது. இந்தச் சுயசிந்தனைத் தெளிவு பெற்றவர்களிடையே நாட்டுப்பற்றும் ஓங்கியுள்ளது, வியர்வைப் புரட்சியும் தோன்ற ஆரம்பித்துள்ளது. இதற்கு மதிப்பளிக்குமாப் போல நாவலப்பிட்டி கதிரேசன் குமாரமகா வித்தியாலய அதிபராயிருந்து தற்போது புசல்லாவை சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் சென்றுள்ள அதிபர் திரு, எஸ். வி. ஆறுமுகம் வியர்வைப் புரட்சிபற்றி மிகத்தெளிவாக ஒரு கூட்டத்தில் விளக்கியுள்ளதோடு கலை இலக்கிய ஆர்வத்தோடு இளைஞர்கள் செயல்பட வேண்டியதையும் வெறும் பொழுது போக்கு இலக்கிய ரசனைக்குமட்டும் அடிமையாகாமல் காலத்தோடு ஓட்டிய சாகா இலக்கியம் படைக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது இன்றைய விழிப்புமிகு மலையகத்திற்கு சொல்லவேண்டிய சந்தர்ப்பத்தில் கூறப்பட்ட சிறந்ததொரு கருத்தாகும். மலையக மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள ஈழத்துச் சஞ்சிகை வாசிப்பை கட்டுப்படுத்துவது போல ஒரு சில ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளது வருந்தத்தக்கதாகவும் உள்ளது. எனினும் ஆர்வம் மிக்க இளம் மாணவர்கள் தமது வாராந்தர இலக்கியக் கூட்டங்களிலெல்லாம் ஈழத்து நூல்கள் பற்றி சர்ச்சை புரியவும் ஆரம்பித்துள்ளனர். நாவலப்பிட்டி 'சலரு இலவன்' கலாச்சாரக்குழுவினர் போலந்து திரைப்பட விழாவொன்றினை நடத்தினர். போலந்து ஸ்தானிகராலயத்தின் கலாசார அதிகாரி திரு. சிசில் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். சென்ற இதழ் மல்லிகையில் திரு. கே. எஸ். சிவகுமாரன் விமர்சித்திருந்த 'சண்டையின் பின்னர் தேசக் காட்சியும்' 'சிப்டிங் சேன்ட்' ஆகிய இருபடங்களும் திரையிடப்பட்டன. தலைநகர் வாசிகளுக்கு மட்டும் என இதுவரைகாலமும் இருந்து வந்த படவிழாக்கள் நாவலப்பிட்டி போன்ற பகுதியில் திரையிட்ட 'சலரு இலவன்' குழுவினர் பாராட்டுக்குரியவர்கள் தான். அடுத்து இக்குழுவினர் தமிழ்க்கலைஞர்களான திருவாளர்கள் டொமினிக் ஜீவா, சில்லையூர் செல்வராசன், கைலாசபதிஆகியோரையும்திரு சரத்சந்ர, திரு. மார்டின் விக்கிரமசிங்க, திரு. மடவளை ரத்னாயக்கா ஆகிய சிங்களக் கலைஞர்களையும் அழைத்து 'செமினார்' ஒன்றை நடத்தவும் உத்தேசித்துள்ளனர். இம்முயற்சியால் மலையக இலக்கியம் மேலும் நிச்சயம் உயரலாம். மலையகத்தின் புதிய விழிப்புணர்வால் தமது பெயர் கெட்டுவிடுமோ எனும் பொறுமை நோக்கில் ஒரு சில புல்லுருவிகளும் தமது செயலைக் காட்டத் தொடங்கித்தான் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலுற்றுன் ஓர் இளைஞன்

ம. பார்வதிநாதசிவம்

ஆசிரியர் சின்னப்பர் தம்மை நாடி
ஐந்தாறு வேலையிலா வீணர் ஓடி
'ஆசிரிய திலகமே! நின்றன் மைந்தன்
அஞ்சுகதின் நெஞ்சகத் தைக் கவர்ந்தான் ஐய
பேசுகிறுன் மாலையெலாம் அவளினேடே
பெரும் பாலும் ஒழுங்கையில்தான் வாழுகின்றுன்
கூசுமிது கேட்பதற்கே உனக்காளுலும்
கூறுமல் இருந்திடுதல் நமக்கும் ஆ மோ?'

என்றவர்கள் உரைத்தார்கள் இந்தச் சேதி
எதிர் வீட்டார் கேட்டார்கள் அச்சங் கொண்டே
அன்றுடனே இரண்டுமுழம் உயரம் கூட்டி
அழகாக வேலியினை அடைத்திட்டார்கள்
ஒன்றல்ல ஐந்துமுறை காதல் செய்த
உத்தமியர் ஆசிரியர் மகளைக் கண்டே
நன்றல்ல இவன் செய்கை என்றே கூறி
நடந் தோடிப் படலையினைப் பூட்டினுர்கள்.

சின்னப்பர் தம்மகளைச் சினந்து பார்த்தே
'நீ தனம் வாங்கும் ஆசை கெடுத்தாய்' என்றுர்
பொன்னப்பர் 'இவன் எனது மகனே ஆனுல்
பொல்லாலே தலைநொறுக்கி இருப்பேன்' என்றுர்
'என்னப்பா பேரர்தமைக் காணும் ஆசை
எனக்கிப்போ தில்லை' யெனத் தாயும் சொன்னுள்
சின்னப்பர் பெற்றெடுத்த காதல் மன்னன்,
சிலந்தி வலைப் பூச்சியெனத் திகைக்கலானுன்.

ஆதரவாய் இருந்திட்ட ஒருவர் தாமும்
அவ்வேளை ஒடிவந்தே அவனைப் பார்த்துக்
காத லுக்குத் தம்முடைய எதிர்ப்பைக் காட்டிக்
கண்டனச் சொல்மழை பொழிந்தார் ஒருநாள் முற்றும்
பாதகர்கள் பலர் சேர்ந்தே இந்தச் சேதி
பரப்பு வதிற் பேரின்பம் காணலுற்றுர்
காதலித்தல் குற்ற மென இவற்றைக் கண்டே
கடவுளும் தம்முடியுதனை மாற்றிக்கொண்டார்.

விண்மீன்களுக்கு திரும்பி ஏகுதல்

ஏ. ஜே. கனகரெட்ணு

ஏனைய கோள்களில் உயிரினங்கள் உள்ளனவா? இதுபற்றி திட்டவட்டமாக எதுவும் இதுவரை நிறுவப்படாவிடினும் பல விண்வெளி ஆராய்ச்சியாளர் 'ஆம்' எனத்தான் விடை பகருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, இன்னெரு விஷயமும் சிலர் மனதைக் கவர்கின்றது. அறிவுபடைத்த உயிரினங்கள் வேறு கோள்களில் இருக்குமேயாயின், அவை எப்பொழுதாவது - வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் - இப்பூவுலகுக்கு வருகை தந்திருக்கக்கூடுமா?

எரிக் டானிக்கன் எழுதியுள்ள 'விண்மீன்களுக்கு திரும்பி ஏகுதல்' இப்பிரச்சினையை அலசுகிறது. இந்நூலிற்கு உபதலைப்பு 'நடந்திருக்கமுடியாதவைக்குச் சான்றுகள்' என்பதாகும்.

விண்மீன்களுக்கு திரும்பி ஏகுதல்? அப்படியென்றுல் நாம் விண்மீன்களிலிருந்து இங்கு வந்தவர்களா?

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் விண்மீன்களிலிருந்து அறிவுபடைத்த உயிரினங்கள் இவ்வுலகிற்கு வருகை தந்தனர் என்பதே டானிக்கனின் வாதம். இவர்கள்தான் பின்பு சமயங்களால் 'தெய்வங்கள்' எனப்பட்டனர் என அவர் கருதுகின்றுர்.

எடுத்த எடுப்பிலே இது வெறும் பைத்தியக்காரத்தனமான கருத்தாக எமக்குப் படலாம். ஆனுல் இன்று பல விஞ்ஞானிகள் இக்கருத்துக்கு ஆதரவாயுள்ளனர் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எடுத்துக்காட்டாக, ஐன்ஸ்டைன் இக்கருத்தை ஆதரிப்பதாகச் சொன்னதாகப் பேராசிரியர் ஹப்குட் கூறியிருப்பதை டானிக்கன் குறிப்பிடுகிறுர். மாஸ்கோவைச் சேர்ந்த பேராசிரியர் ஷ்லொவ்ஸ்கி, அமெரிக்க விண்வெளி உயிரியலாளர் கார்ல் சகான் போன்றோரும் இக்கருத்தை ஆதரிக்கின்றனர். 'வேறு கோளில் வசிக்கும் இனம் இவ்வுலகிற்கு வருகை தந்திருக்கக்கூடியது வெகு சாத்தியம் என்றே நான் கருதுகிறேன்' என ரொக்கெட்டின் தந்தை, பேராசிரியர் ஹர்மன் ஒபேர்த் டானிக்கனிடம் கூறியிருக்கிறுர்.

புதுக்கருத்துக்கள் தோன்றும்போது அவை இகழப்படுவது இயல்பே. ஆனுல் காலப்போக்கில் அவை எண்பிக்கப்பட்டதும் வேறு வழியின்றி அவை ஏற்கப்படத்தான் செய்கின்றன. இதனுல் எல்லாப் புதுக் கருத்துக்களும் ஏற்புடைத்து என்பதல்ல இதன் பொருள். 1924-இல் வெளியிடப்பட்ட 'விண்வெளிக்கு ரொக்கெட்டுகள்' என்ற நூலினை (பேராசிரியர் ஒபேர்த் இயற்றியது) விமர்சித்த புகழ்பெற்ற சஞ்சிகை 'இயற்கை' பின்வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு கூறிற்று: 'வீண்வெளிக்கு ரொக்கட்டுகளை அனுப்பும் திட்டம் மனிதகுலம் அழிவதற்குச் சற்று முன்பாகவே செயற்படுத்தப்படுவது சாத்தியமாகவிருக்கலாம்.' இன்றைய கண்கொண்டு பார்க்கும்போது எவ்வளவு வேடிக்கையாக இக்கூற்று எமக்குப் படுகின்றது.

ஏன், 1940களில் கூட முதல் ரொக்கட்டுகள் பூமியின் தரையிலிருந்து கிளம்பி நூற்றுக்கணக்கான மையில்கள் பறந்தபின்பும் கூட, மனிதர் வீண்வெளிப் பிரயாணம் செய்வது சாத்தியமில்லை - எடையின்மையின் தாக்குதலை தொடர்ந்து பல நாட்களுக்கு யாக்கையினால் தாங்க முடியாததால் - என பல மருத்துவர் வலியுறுத்தினர். இதெற்கெல்லாம் ஆங்கிலப் பழமொழிதான் சமாதானம் கூறுகின்றது: 'இறுதியாக நகைப்பவன்தான் மிகச் சிறப்பாக நகைப்பான்' ஆம், இன்று மனிதன் வீண்மதியில் கால் பதித்த பின்பு, இம் மருத்துவர்களை நோக்கி நாம் இறுதி நகைப்பை உதிர்க்கலாம்.

எனவே டானிக்கன் கூறும் கருத்துக்களை அடியோடு ஒதுக்காமலி, அவற்றில் ஏதாவது இருக்கலாம் என்ற திறந்த மனதோடு அவர் தரும் 'சான்றுகளை' சற்றுப் பார்ப்போம்.

அடெனின், சைடொசின், குவானின், தையமின் ஆகிய நான்கு அடிப்படைகளுமே உயிர்க்கு திறவுகோல் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இத்திறவுகோல் பிரபஞ்சம் முழுவதிற்கும் பொருந்துமாயின், பிரபஞ்சத்தில் கோடானு கோடி உயிர்கள் பெருக்கமுற்றிருக்க வேண்டும் என ஊகிக்க இடமுண்டு.

1961-இல் மேற்கு வெர்ஜினியாவில் நடைபெற்ற ஒரு இரகசிய மகாநாட்டில் கூடிய 11 விஞ்ஞானிகள் பால்மண்டலத்தில் மட்டும் 5 கோடி நாகரிகங்கள் வரை இருக்க வேண்டும் என்று கணித வாய்ப்பாடு மூலம் முடிவுக்கு வந்தனர். பிரபஞ்சத்தில் 13,000 கோடி நாகரிகங்கள் இருக்கலாம் என அமெரிக்க விஞ்ஞானி ரொஜர் மக்கொவன் கணித்துள்ளார். வான் கோளங்களின் ஆய்வியலின் புதிய கண்டுபிடிப்புக்களே இவரின் கணிப்பீட்டிற்கு ஆதாரம்.

இந்த முடிவுகளெல்லாம் எமது புராணங்களைத்தான் நினைவூட்டுகின்றன. 'மண்டனக் காயிர கோடி அண்டங்களுள வாகும்' என கந்தபுராணத்தில் சுக்கிராச்சாரியார் சூரபன்மனுக்கு பல்வேறு அண்டங்களைப் பற்றி விளக்குகையில் கூறியிருப்பதை இங்கு எடுத்துக் காட்டுவது பொருத்தமாயிருக்கும்.

கதிரவன் அண்டத்திற்குள் வீண்வெளிப் பயணம் இன்று சாத்தியமாகிவிட்ட போதிலும் கதிரவன் அண்டத்திற்கப்பால், அதாவது வீண்மீன்களுக்கிடையிலே பயணம் செய்வது சாத்தியமில்லை. ஏனென்றால் அவற்றிற்கிடையேயுள்ள வெளி பிரமாண்டமானது என சிலர் வாதிடுகின்றனர். எதிர்காலத்திலும் இது சாத்தியமில்லாததினால் முற்காலத்தில் எமக்குத் தெரியாத அறிவுபடைத்த உயிரினங்கள் இப்பிரமாண்டமான வெளிகளைக் கடந்து எமது உலகிற்கு வருகை தந்திருக்க முடியாதென அவர்கள் மேலும் மேலும் வலியுறுத்துகின்றனர். இதற்கு டானிக்கன் பதில் என்ன?

எமக்கு மிகவும் அண்மையிலுள்ள நிலைபெயரா வீண்மீன் அல்பா சென்ரவுரி. அதனை அடைவதற்கு 4·3 ஒளி ஆண்டுகள் அதாவது எமது கணக்கின்படி எண்பது ஆண்டுகளாகும். இன்றைய சராசரி ஆயுள் எழுபது ஆண்டுகளாகும். வீண்வெளி வீரர்களுக்குப் பயிற்சியளிப்பது மிகவும் சிக்கல் வாய்ந்ததாகும். அதி வீவேகிகூட இருபது வயது நிரம்பமுன்பு வீண்வெளி வீரராகப் பயிற்றப்பட முடியாது. அறுபது வயதிற்கு மேற்பட்டவரை வீண்வெளிப் பயணத்திற்கு அனுப்பமாட்டார்கள். எனவே சராசரி ஆகக்கூடியது நாற்பது ஆண்டுகள்தான் ஒருவர் வீண்வெளி வீரராக இயங்கமுடியும். ஆனால் எமக்கு மிகவும் அண்மையிலுள்ள நிலைபெயரா வீண்மீனுக்குச் செல்வதற்கு எண்பது ஆண்டுகள் ஆகுமே.

ஆனால் எதிர்காலத் திட்டங்களை வகுக்கும்போது, மரபுவழி வந்த சிந்தனைப் போக்குகளை நாம் அகற்ற வேண்டும் என்கிறார் டானிக்கன். எதிர்காலத்தில், வீண்வெளி வீரர்களுக்கு குளிரூட்டி உடம்பை விறைக்கச் செய்து குறிப்பிட்ட நேரத்தில் அவர்களை மீண்டும் இயங்கச் செய்ய நவீன விஞ்ஞானம் வழிவகைகளை ஆராய்ந்து வருகிறது. எனவே எதிர்காலத்தில் மனிதன் வீண்மீன்களுக்குச் செல்வது சாத்தியப்படக்கூடும் என டானிக்கன் சுட்டிக்காட்டுகிறார். மேலும் 'சைபெர்னெடிக்ஸ்' சின் படி (இது 'கப்பல் இயக்குநர்' எனப் பொருள்படும் கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது; விலங்குகளினதும் மின்சாரக் கருவிகளினதும் அறிவிப்பு முறைமை பற்றி ஆராயும் துறையாக விருப்பதனால், இப்பதத்தை 'அறிவிப்பு முறைமை இயல்' என மொழிபெயர்க்கலாம்), எதிர்காலத்தில் 'மின்னியக்கக் கருவிகள் மனித உடம்பிலிருந்து பிரிக்கப்பட்ட மூளையினால் இயக்கப்படும். இது சாத்தியம் என ஜெர்மன் பௌதிகவியலாளர் பிரான்கே கூறுகிறார். பிறவாத பிள்ளையின் மூளையை - மனஞ் சார்ந்த செயற்பாங்குகள் என்ற சுமை அதற்கு இல்லாததனால் - இவ்வாறு நிரல்படுத்தப் படுவதற்கு பொருத்தமானது என அவர் கருதுகிறார். சாதாரண மூளைகளுக்கிருக்கும் உணர்வோ உணர்ச்சிகளோ இதற்கு இருக்காதென்றும், வீண்வெளிப் பயணத்திற்கு வேண்டிய தகவல்களையும் செய்திகளையும் இதற்கு ஊட்டி இதனை எம்முலகின் தூதராக்கலாம் என மேலும் பிரான்கே கூறுகின்றார். எதிர்காலத்தில் இத்தகைய மூளைகள் இயக்கும் ஆளில்லா விண்கலங்கள் வீண்வெளியில் ரோந்து சுற்றி அவைமூலம் எமக்கு ஏனைய கோள்களிலுள்ள அறிவுபடைத்த உயிரினங்களுடன் தொடர்பு ஏற்படுத்த முடியும் என அவர் கருதுகிறார்.

கால - நேரத்தைப் பற்றிய எமது கருத்துக்கள் நிலவுலகத்தைச் சார்ந்தவை என்பதையும் டானிக்கன் நினைவூட்டுகிறார். வீண்வெளிப் பயணத்துக்கு இவை பொருந்தா என அவர் வாதிடுகிறார். ஒளியின் வேகத்திற்கு சற்று குறைவான வேகத்தில் பயணம் செய்யும் வீண்வெளி வீரர்க்கு கால - நேரம் 'ஊர்ந்து செல்வது' போல் படும் ஆனால் உலகிலோ கால-நேரம் 'தலைதெறிக்க' ஓடுவதாக எமக்குப் படும். இதனை கால - நேர விரிவடைதல் என்பர் விஞ்ஞானிகள். இது எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண அனுபவத்திலேயே கண்கூடு. எமது மனநிலையைப் பொறுத்து, 10 நிமிடங்கள் 1 மணித்தியாலமாகவும், 1 மணித்தியாலம் 10 நிமிடங்களாகவும் எமக்குப் படலாம். இது எமது மன நிலையைப் பொறுத்தது. ஆனால் விண்வெளிப்பயணத்தின் காலநேரத்தை கணிதவாய்ப்பாடுகள் மூலம் நுட்பமாகக் கணிக்கலாம். வருங்காலச் சந்ததியினர் கால-நேர எல்லைகளை மீறுவர், விண்வெளி வீரரின் சாதாரண ஆயுள் காலத்திலேயே பிரபஞ்ச வெளியைக் கடக்கக்கூடிய வேகத்தில் விண்கலங்கள் பறக்கக்கூடியதாயிருக்கும் என டானிக்கன் கருதுகிறார். இது எப்படி முடியும் எனச் சிலர் வினவலாம். ஒளியின் வேகம் ஒரு வினாடிக்கு 186,000 மைல்களாகும். ஒளியின் வேகமே வேகத்தின் உச்ச எல்லை என ஐன்ஸ்டைன் எண்பித்திருப்பதால், இது சாத்தியமில்லை என அவர்கள் சுட்டிக் காட்டலாம்.

எதிர்கால விண்கலங்கள் இப்பொழுது போன்று, எரிபொருளின் சக்தியால் செலுத்தப்படும் எனக் கருதவேண்டியதில்லை என டானிக்கன் விளக்குகிறார். எதிர் சடப்பொருளால் செலுத்தப்படும் விண்கலத்தை மாஸ்கோவைச் சேர்ந்த பேராசிரியர் ஸ்டான்யுகோவிச் உருவாக்க முனைகிறார். செந்தழலாக எரிகிற வாயுக்களைப் பயன்படுத்தாது ஒளி வெளிப்பாட்டினால் இயங்கும் 'பறக்கும் விளக்கை' இவர் உருவாக்க முயல்கிறார்.

இது அதிவேகமாகச் செல்லக்கூடியது. இப்பரிசோதனையைப் பற்றி பேராசிரியர் போர்ஜியர் பின்வருமாறு கூறுகின்றார்: 'இப் பறக்கும் விளக்குகளில் பயணம் செய்பவர்க்கு எல்லாம் வழக்கம்போலத்தான் இருக்கும். பூமியில் போன்றுதான் விண்கலத்தினுள்ளும் ஈர்ப்பு ஆற்றல் இருக்கும். கால நேரம் சாதாரணமாக கழிவது போன்றுதான் அவர்களுக்குப் படும். ஆயினும் ஒரு சில ஆண்டுகளில் மிகத் தொலைவிலுள்ள விண்மீன்களை அவர்கள் சென்றடைவர். பூமியிலிருந்து 75,000 ஒளி ஆண்டுகளுக்கப்பாலுள்ள பால் மண்டலத்தின் மையத்தை அவர்கள் 21 ஆண்டுகளில் (அவர்களது நேரப்படி) சென்றடைவர். பூமியிலிருந்து 2,250,000 ஒளி ஆண்டுகளுக்கப்பாலுள்ள அன்றோமேடா நெபியுலாவை 28 ஆண்டுகளில் சென்றடைவர்.' இவை யாவும் வெறும் கற்பனையல்ல, கணித வாய்ப்பாடுகள் மூலம் எண்பிக்கப்படக்கூடியவை என பேர்ஜியர் வற்புறுத்துகிறார். இத்தகைய ஒரு கணிப்பீட்டின் படி, பறக்கும் விளக்கில் பயணம் செய்பவர்களுக்கு 65 ஆண்டுகள் கழிந்திருக்கும். ஆனால் புவியில் 45,000 இலட்சம் ஆண்டுகள் கழிந்திருக்கும்! இது எமக்கு புராணங்களையே நினைவு படுத்துகின்றது. பிரம்மாவிற்கு ஒருநாள் எமக்கு 4,320,000,000 ஆண்டுகள்.

ஐன்ஸ்டைனின் சார்புக் கொள்கைப்படி, வேக அதிகரிப்புக்கேற்ப பருப் பொருளின் பொருண்மையும் அதிகரிக்கும். பொருண்மைக்கு எதிரிணையானவை 'ரக்கியோன்ஸ்' எனப் பேராசிரியர் வைன்பேர்க் கருதுகிறார். இக் கூறுகள் எல்லையற்ற விசையுடையனவென்றும் ஆனால் அவற்றின் விசை ஒளியின் வேகத்திற்கு அல்லது அதற்குச் சற்று கீழ் குறைக்கப்பட்டதும் அவை அற்றுப்போகின்றன என்கிறார் வைன்பேர்க். ஒளியை விட 'ரக்கியோன்ஸ்' நூறு கோடி மடங்கு வேகமுடையன என்பது இப் பேராசிரியரின் துணிபு.

கணித முறைப்படி எண்பிக்கப்பட்ட போதிலும், இன்னும் பேராசிரியர் வைன்பேர்க்கின் கொள்கை நடைமுறையில் எண்பிக்கப்படவில்லை. ஐன்ஸ்டைனின் கொள்கையும் நடைமுறையில் எண்பிக்கப்பட முன்பு பல ஆண்டுகளாக கணித வாய்ப்பாடாகத்தான் இருந்தது என்பதை நாம் நினைவுகூர்தல் நன்று.

'ரக்கியோன்ஸ்' 'அகப்பட்டால்' அல்லது அவற்றைச் செயற்கையாக உருவாக்க முடியுமாயின் அவற்றைக் கொண்டு விண்கலங்களை இயக்கலாமென்றும், இத்தகைய கலங்களின் வேகத்தை கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியாதென்றும் டானிக்கன் கருதுகின்றார்.

மேற் கூறியவற்றிலிருந்து எதிர்காலத்தில் விண்மீன்களுக்குப் பயணம் செய்வது சாத்தியம் என்பதைத்தான் டானிக்கன் ஓரளவு நிறுவியுள்ளார். ஆனால் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வேறு கோள்களிலிருந்து அறிவுபடைத்த உயிரினங்கள் இவ்வுலகிற்கு வருகை தந்தனர் என்பதை நிலைநாட்டவில்லை என்பதைச் சிலர் சுட்டிக் காட்டலாம். ஆம், இன்றைய அறிவு நிலையில் அவரது கருத்து எண்பிக்கப்படாத ஒரு ஊகம்தான். மனிதனே படைப்பின் உச்சம் என்ற எண்ணமே இவ்வுலகத்தை ஏற்பதற்குத் தடையாயிருக்கின்றது என டானிக்கன் சுட்டிக் காட்டுகிறார். இத் 'தலைக்கனம்' கைவிடப்பட்டாலொழிய உண்மையை அறிவுபடைத்த உயிரினங்கள் நாம் அறிய முடியாது என்கிறார் அவர்.

'தெய்வங்களின் இரதங்கள்' என்ற தலைப்பில் டானிக்கன் முதல் எழுதிய நூலில் வேறு கோள்களிலிருந்து பூமிக்கு வந்த அறிவுபடைத்த உயிரினங்களே மனிதனைப் படைத்தன என வாதிட்டுள்ளார். இந்நூலிலும் அதே வாதத்தினைத்தான் எடுத்துரைக்கின்றார். மனித வரலாற்றில் அறிவாற்றல் சடுதியாகத் தோன்றியுள்ளமையை அவதானிக்க முடியும் என்றும் இவ்வறிவாற்றல் தோன்றியமைக்கு வேறு கோள்களிலிருந்து வந்தவர்களே காரணர்களாக இருந்திருக்க வேண்டும் என்றும் அவர் ஊகிக்கின்றார். 'பல்வேறு மனித குழுக்களுக்கிடையே நடைபெற்ற உய்யப் பிணக்கம் மக்களிடையே இன்று காணப்படும் உயர்ந்த மன ஆற்றல்களை உண்டுபண்ணியிருக்க முடியாது. வேறு ஏதோ காரணி இருந்திருக்க வேண்டும். அது பரிணும வளர்ச்சிக் கோட்பாட்டாளரின் கவனத்தில் படவில்லை' என்று லோறன் ஐசிலி கூறியிருப்பதை டானிக்கன் தனக்குச் சாதகமாக மேற்கோள் காட்டுகின்றார். இந்த 'வேறு ஏதோ' காரணி வேறு கோள்களிலிருந்து வந்த அறிவுபடைத்த உயிரினங்கள்தான் என டானிக்கன் கூறுகின்றார். இன்றைய அறிவு நிலையில் இது முடிந்த முடிவல்ல, ஓர் ஊகந்தான்.

நினைவுகள் அணுத்திரள்மங்களில் சேகரித்து வைக்கப்படுகின்றன என்பதை விஞ்ஞானம் இன்று நிறுவியுள்ளது. டானிக்கனின் கருத்துப்படி வேறு கோள்களிலிருந்து வந்த அறிவுபடைத்த உயிரினங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குக் கற்பித்துப் போனவை இவ்வணுத்திரண்மங்களில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன: இவை காலப்போக்கில் எம்மால் மீட்கப்படுகின்றன: அச்சுக்கலையும், கடிகாரக்கலையும், காரும், ஆகாய விமானமும் ஏறத்தாழ ஒரு காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டவை அல்லது உருவாக்கப்பட்டவை என்பது தற்செயல் நிகழ்வன்று என டானிக்கன் கருதுகின்றார். இதேபோன்று இவ்வுலகிற்கு அறிவுபடைத்த உயிரினங்கள் வருகை தந்திருக்கலாம் என்ற கருத்து பல்வேறு போர்களால் பல்வேறு நூல்களிலே எடுத்துரைக்கப்படுவதும் தற்செயல் நிகழ்வல்ல என்று அவர் கூறுகின்றார். இவையாவும் எமது அணுத்திரண்மங்களிலே சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் பண்டைய நினைவுகள் திட்டமிட்டபடி காலக்கிரமத்தில் மீட்கப்படுவதன் விளைவு என்றே கொள்ளவேண்டும் என்கிறார் அவர். ஒவ்வொரு உயிரினத்தின் வளர்ச்சியும், இறப்பும் அதன் நியூகிலியசிலே நிரல்படுத்தப்பட்டிருப்பது போல இந்நினைவுகளும் எமது அணுத்திரண்மங்களில் நிரல்படுத்தப்பட்டிருப்பதனாலேதான் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உலகத்தை ஆட்டிப்படைக்கும் கருத்துக்களும், கண்டுபிடிப்புக்களும், புதிய ஆக்கங்களும் உருவாகின்றன என்று அவர் கருதுகின்றார்.

டானிக்கன் புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்தும், இலக்கியங்களிலிருந்தும் தனது கருத்துக்கு அரண் செய்யும் சான்றுகளைத் தர முனைகிறார்.

1938-இல் சினுவிற்கும் தீபேத்துக்குமிடையே உள்ள மலைப்பகுதியிலே சில குகைகளுள் வரிசை வரிசையான புதைகுழிகளை சீன புதைபொருள் அறிஞர் சீ பியு தெயி கண்டுபிடித்தார். மிக நொய்மையான அமைப்பும் பெரிய தலையோடுகளுமுடைய எலும்புக் கூடுகள் அப்புதைகுழிகளுள் காணப்பட்டன. குகைச் சுவர்களில் வட்டவடிவமான தலைக்கவசங்களையுடைய உருவங்கள் வரையப்பட்டிருந்தன. விண்மீன்களும், ஞாயிறும், விண்மதியும் சுவர்களில் வரையப்பட்டிருந்தன: இவை பயறு போன்ற அளவிலான புள்ளிகளால் தொடுக்கப்பட்டிருந்தன. நீண்ட நேரம் இசைக்கும் இசைத்தட்டுகள் போன்ற கருங்கல்லாலான 716 தட்டுகளும் கண்டெடுக்கப்பட்டன. இக் கல் தட்டுகளுக்கு நடுவில் துவாரம் இருந்தது. நடுவிலிருந்து தட்டுக்களின் விளிம்பிற்கு சுருள்வட்டமாக செதுக்கப்பட்ட எழுத்து இரட்டை வரித்தடமாகச் சென்றது. 1962-இல் தான் பேராசிரியர் உம் நூயி இச் செதுக்கப்பட்ட எழுத்தின் சில பகுதிகளின் பொருளை விளக்கினார். கல்தட்டுகள் சொன்ன கதை மயிர்க்கூச்செறியும் ஒன்றாய் இருந்ததனால், ஆராய்ச்சிக் கழகம் அதனை வெளியிட வேண்டாம் எனத் தடைசெய்தது. ஆனால் பேராசிரியர் நூயி விடாக்கண்டர். தொடர்ந்தும் தன் ஆராய்ச்சியினை நடாத்தினார். இக் கல்தட்டுகளில் அதிகோபால்ட்டும் வேறு உலோக வகைகளும் இருப்பதாகவும், அவற்றின் அதிர்வு அதிகமாக இருப்பதனால் எப்போதோ ஒரு காலத்தில் அவை அதிக மின்வலித் தாக்குதலுக்கு உட்பட்டிருக்க வேண்டுமென்றும் துணியப்பட்டன. பேராசிரியர் நூயின் கருத்தை நான்கு விஞ்ஞானிகள் ஆதரித்தனர். 1963 இல் அவர் தனது முடிவுகளை, கழகத்தின் ஐயுறவுகளையும் பொருட்படுத்தாது, வெளியிட்டார். கல்தட்டுக்கள் சொல்லும் கதை இதோ:

12,000 ஆண்டுகளுக்கு முன்பு தமது இனத்தவரைச் சேர்ந்த குழுவொன்று, விமானக் கோளாறு காரணமாக இக் கோளத் தொகுதியின் மூன்றாவது கோளின் தரையில் வீழ்ந்தது. இவ்விமானத்தில் வந்தவர்கள் அம்மலைப் பகுதியிலே வாழ்ந்தவர்களுடன் நட்புறவு கொள்ள முனைந்தபோதிலும், அம்மலைவாசிகள் அவர்களை வேட்டையாடிக் கொன்றனர். இக்கதை இவ்வாறுதான் முடிந்தது: 'ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் சூரியன் படும்வரை குகைகளில் ஒளிந்து கொண்டனர். பின்பு அடையாளத்தை நம்பி மற்றவர்கள் இம்முறை சமாதான நோக்குடன்தான் வந்திருக்கின்றனர் என்பதை அவர்கள் உணர்ந்தனர்'

இம்மலைப்பகுதியிலே வழங்கும் கர்ண பரம்பரைக் கதைகளின்படி, மேகங்களிலிருந்து இறங்கிய நீண்டொடுங்கிய மஞ்சள் நிறத்தினர், மலைவாசிகளான துரோப்பர்களால் கொல்லப்பட்டனர்.

பெரும்பான்மையான புதைபொருள் ஆராய்ச்சியாளரும், மானிடவியலாளரும் இத்தகைய தகவல்களைப் பொருட்படுத்தாதற்குக் காரணம், அவ்வாறு செய்யின் தமது கருத்துக்கள் பெரும்பாலானவற்றைக் கைவிட வேண்டி ஏற்படும் என்பதே எனக் குற்றஞ் சுமத்துகிறார் டானிக்கன். ஒன்றில் மௌனஞ் சாதிக்கின்றனர் அல்லது ஏளனமாக இவற்றைத் தட்டிக் கழிக்கின்றனர் என அவர் மேலும் கூறுகின்றார். இதனால் உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு தடை ஏற்படுகிறது.

இன்றைய விண்வெளி வீரர்களின் உடைகளை ஒத்த உடைகளை அணிந்திருக்கும் உருவங்கள் பல இடங்களிலே ஓவியங்களாக வரையப்பட்டிருப்பதையும், பல ஓவியங்களிலே பறக்கும் உருவங்கள் வரையப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டும் டானிக்கன் இவற்றின் புகைப்படங்களையும் தனது நூலிலே தருகின்றார். இப்படங்களை நோக்கும்போது உண்மையில் இவ்வுருவங்களுக்கும் இன்றைய விண்வெளி வீரர்க்கும் தோற்ற அளவில் நெருங்கிய ஒற்றுமை இருக்கின்றதை நாம் அவதானிக்கக் கூடியதாய் இருக்கின்றது. இவை வெறும் கற்பனையில் எழுந்த உருவங்களல்ல, உண்மைப் பிரதிகளே இவை என்ற டானிக்கனின் வாதங்களில் ஓரளவு உண்மையிருக்கக் கூடும் எனப் படுகிறது எனக்கு.

ஈஸ்டர் தீவிலுள்ள பிரமாண்டமான சிலைகள், நக்சா சமவெளித் தரையிலுள்ள ஓவியங்கள் — இவை போன்றவற்றிற்குப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் இதுவரை அளித்துள்ள விளக்கங்கள் திருப்தியற்றவையென்றும், அவை வேறு கோள்களிலிருந்து வந்தவர்களின் 'கைவரிசை' யாக இருக்கலாம் என்றும் டானிக்கன் கருதுகிறார். விரிவஞ்சி அவற்றை மேலும் இங்கு விளக்காது விட்டுவிடுகிறேன்.

புராணங்களிலிருந்தும், பண்டைய இலக்கியங்களிலிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் டானிக்கன் தனக்குச் சாதகமானவற்றை மேற்கோள் காட்டுகின்றார். இவையாவற்றையும் ஈண்டு குறிப்பிட முடியாது; பண்டைய இந்திய இலக்கியங்களை அவர் மேற்கோள் காட்டி, அவற்றில் குறிப்பிடப்படும் விமானங்களும், ஆயுதங்களும் உண்மையைத் தான் சுட்டுகின்றன என்கிறார். இவற்றை புனைந்துரைகளாகவோ 'தெய்வங்'களுக்கிடையே நடைபெற்றதாகக் கூறப்படும் போர்களை வெறும் உவமைகளாகவோ கொள்ளலாகாது என அவர் வற்புறுத்துகிறார். புராணங்களிலும் இதிகாசங்களிலும் வரும் வர்ணனைகள் உண்மையை அப்படியே விளம்புகின்றன என்பதே அவரது கட்சி.

இடமின்மையால், டானிக்கன் விரிவாக ஆராயும் பகுதிகளை நான் மேலோட்டமாகத் தான் இக்கட்டுரையில் தொட முடிந்திருக்கின்றது. சிலவற்றை குறிப்பிடாது விட்டுவிட்டேன். டானிக்கன் நிறுவ விழையும் கருத்துக்களை இன்று வேறு பலரும் நூல்களிலே எடுத்துரைத்திருக்கின்றனர். சில விஞ்ஞானிகளின் ஆதரவும் இவர்களுக்கு ஓரளவு இருக்கின்றது.

இந்நூலிலே, 'நடைபெற்றிருக்க முடியாதவை' நடைபெற்றிருக்கக்கூடும் என்பதற்கு சான்றுகள் தர டானிக்கன் தலைப்பட்டிருக்கிறார். இவை ஆதாரபூர்வமாக நிறுவப்பட்டுள்ள சான்றுகளாகக் காட்சியளிக்காவிடினும் அவற்றில் சில ஓரளவு நம்பத்தகுந்த ஊகங்களாகவே எனக்குப் படுகின்றன. இத்துறையிலே மேலும் விஞ்ஞானிகள் புலன் செலுத்தி திறந்த மனத்துடன் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என டானிக்கன் வற்புறுத்துகிறார். அவ்வாறு நடைபெறின் காலப்போக்கில் இவரது கருத்துக்கள் வலுப்பெறலாம் அல்லது வலுவிழக்கலாம். பொறுத்திருந்து பார்ப்போமே! ★

இலக்கியத்தின் நோக்கம் என்ன? மனிதன் தன்னைத்தானே உணர்ந்து கொள்ளவும், தன்பாலுள்ள நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்ளவும் உதவுதல்; உண்மை காணும் முயற்சியில் அவனுக்கு ஆதரவளித்தல்; மக்களிடத்தில் நல்லதைக் கண்டு பிடிக்கவும், தீயதை அகற்றவும் துணை புரிதல்; மக்கள் இதயத்தில் வெட்கம், சீற்றம், வீரம் ஆகியவற்றைத் தூண்டி விடுதல்; மக்கள் உயரிய இலட்சியங்களுக்குத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டு வலிமை பெறவும், அழகு என்னும் விழுமிய உணர்வால் தமது வாழ்வைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவும் உதவுதல் ஆகியவையாகும்.

—கார்க்கி

'பேமதோ ஜாயதி சோக்கோ'

பற்றின் வருவது துன்பம்

எஸ். எம். ஜே. பைஸ் தீன்

'பற்றின் வருவது துன்பம்' எனப் பொருள்படும் 'பேமதோ ஜாயதி சோக்கோ' என்ற சிங்கள நாவலைப் பற்றிய குறிப்புக்களே இவை. பௌத்த தம்மபதக் கருத்தான இதே தலைப்புடன், பௌத்த ஜாதகக் கதை ஒன்றைக் கருவாகக் கொண்டு, பேராசிரியர் சரத்சந்திர தயாரித்த நாடகமொன்றும் சமீபத்தில் தான் மீள அரங்கேற்றம் செய்யப்பட்டது. எனவே, இத்தொடர் வாசகர்களுக்கு முன்பே ஓரளவு அறிமுகமாகியிருக்கலாம்.

''இந்து முஸ்லிம் கலவரம் சம்பந்தமாக சமூகப் பிரக்ஞையுடன் இத்தியாவிலே வெளிவந்த இன்குலாப் போன்ற நாவல்களின் கெம்பீரத்தையோ சுதந்திரப்போராட்டத்தின் புரட்சிகீதத்தை இயம்புகின்ற பாரதியோன்ற நாவல்களின் வேகத்தையோ, 'வால்காவிலிருந்து கங்கை வரை'யுள்ள சமூகப்பார்வையையோ இன்னும் நாம் அடைவதற்கு வெகு தூரத்தில் நிற்கிறோம். சிங்கள இலக்கியத்தையும் தான் இதில் குறிப்பிடுகின்றேன். அப்படி அவர்கள் எழுதிய வகுப்புவாதத்தை வெறுக்கும் சமூகப் பிரக்ஞையுள்ள ஒரு நல்ல நாவலைக் கூறுங்கள்' என்று ஈராண்டுகளுக்கு முன் எனது நண்பரொருவர் என்னிடம் கேட்டிருந்தார். அப்போது அவருக்குப் பதிலளிக்கும் அளவுக்கு எனக்குச் சிங்கள இலக்கியத்தில் பரிச்சயம் இருக்கவில்லை. எனினும், சமீபத்தில் இந்நாவலை வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது அவரது வினாவுக்கு விடையளிக்கலாம் என்று கருதினேன்.

'முதன் முதலில் எனக்கு லாவணி எதிர்ப்பட்டது பாடசாலைக்குப் பின்புறத்திலுள்ள புற்றரைப் பாதை வழியாக வரும் போதுதான்' என்ற வரியுடன் நாவல் ஆரம்பிக்கிறது. எனவே பாடசாலை மாணவ—மாணவியர் இருவரது முதிராவினங் கற்பனைக் காதற் கதை ஒன்றே தொடர விரும்புவதாக எண்ணுகின்றோம். ஆனால், திஸ்ஸ லாவணி ஆகிய இருவரது சாதனும் முதிராமல் இடைநடுவே முறிந்துவிடுகிறது. வாழ்வின் பொறுப்பைச் சுமக்கும் அளவு திஸ்ஸவுக்கு வயது போதாது. அவன் மாணவ நிலையில் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையிற் தேறிக் கற்று, மணிதனாகிய பின் காதல் வாழ்விலீடுபடவேண்டும்' என்று தனது சகோதரி கூறும் புத்திமதியைத் திஸ்ஸ இயல்பாக ஏற்றுக் கொள்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாநாயகனது காதல் முறிவுடன் கதைத் திருப்பத்துக்காகவும், அவனைத் தமிழ்ச் சூழலுடன் தொடர்புபடுத்துவதற்காகவும் ஆசிரியர் எடுத்தாளுங் களமாற்றம் குறிப்பிடத்தக்கது. கொழும்பிலிருந்து காலிக்கு அருகிலுள்ள பத்தேகம பகுதிக்குக் கதைக்களம் மாறுகிறது. இது தாழ்நிலத் தேயிலை விளையும் தோட்டப் பிரதேசமாகும். தமிழர்கள் வாழும் தேயிலைத் தோட்டப் பகுதியை நாடி, ஹட்டன், நுவரெலியா போன்ற இடங்களுக்கு வலிந்து இட்டுச் செல்லாது, சிங்களச் சுற்றுடலுடன் இணைந்த ஒரு பகுதியே தெரியப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

இத் தேயிலைத் தோட்டத்தில் பிரதான எழுதுவினைஞரான மகாதேவனது குடும்பத்துடன் திஸ்ஸவுக்கு உறவுண்டாகிறது. தனியான அவன் அவரது வீட்டிலேயே தங்கி, உணவுமருந்துகிறான். மகாதேவனது மனைவி ஒரு சிங்களப் பெண். தென்மாகாணத்தைப் பொறுத்தவரையது ஒரு பரவலான நிகழ்ச்சியாகும். ஈஸ்வரியும், ரவியும் அவர்களது பிள்ளைகள். திஸ்ஸவுக்கு ஈஸ்வரியில் ஈடுபாடுண்டாகிறது. அவன் அவளையே வாழ்க்கைத் துணையாக ஏற்கக் கூடும் என்ற யூகத்துக்கும் இடமளிக்கப்படுகிறது. இது இரு சமூகங்களுக்குமிடையிலும் உறவுப்பாலத்துக்குக் குறிகாட்டியாகலாம். இன ஒருமைப்பாட்டை நோக்கமாகக் கொண்ட இத்தகைய நாவல்களில் இதனை வலிந்து புகுத்தும் ஒரு பண்பாகவும் கொள்ளலாம். எனினும் கதைப் போக்கின் வளர்ச்சி இந்நிகழ்ச்சியை மிகவும் இயல்பானதாகவே காட்டி நிற்கிறது.

இந்நாவல் தமிழர் விரோத மானதென நிறுவ முயல்வோருக்கு ஆதாரமாக ஒரு சிறந்த பகுதி உண்டு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றித் திஸ்ஸ பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

'சிங்களக் கூலிக்காரர்கள் என்னருகே வருவது எப்படியிருந்த போதிலும், தமிழ்க்கூலிக் காரர்கள் வருவதை நான் அருவருக்கிறேன். அளர்களது உடலிலிருந்து வெளிவரும் துர்க்கந்தத்தைச் சகிக்க முடியாது. எனினும் அவர்கள் என்னருகாக நெருங்கி வருவர். ஒருவரிடமிருந்து கள்ளு நாற்றம், இன்னொருத்தரிடம் அழுக்கு நாற்றம். ஒருவராதல் மயிர் தரித்திருக்கவில்லை. என்னுள் ஏற்படும் வெறுப்பு மென்மேலும் அதிகரிக்கும். சம்பளங் கொடுத்து முடியுந்தன்னும் நான் வெகுவாக அமைதியிழந்து காணப்பட்டேன்.

நான் விரைந்து சென்று முகம், கை, கால் கழுவிக் கொண்டேன். எனினும் சற்றைக்கொரு தரம் கள்ளுக்குடித்த தமிழரிடமிருந்து துர்க்கந்தம் வந்து எனது நாசிக்குள் புகுவது போற் தோன்றும்.

ஆனால் நாம் இப்பகுதியை இதனைத் தொடர்ந்து வரும் பகுதியுடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும்.

'நான் இந்தமாதிரி நினைப்பது எவ்வளவு தவறுனது? அவர்களும் மனிதரல்லவோ? மனிதர்களாலேயே மனிதர்கள் அருவருக்கப்படுவது பொருந்துமா? அவர்கள் எமது நாட்டுக்கு வந்து எமது மனிதர்களுடைய தொழில்களைப் பறித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் பால் துவேஷமோ வெறுப்போ உண்டாவதையிட்டு நான் அதிசயப்படமாட்டேன்'

இதன் மூலம், தமிழரைப் பற்றிச் சிறு வயது முதலே சிங்களவருள்ளத்தில் ஏற்படுத்தப்படும் உணர்வுக்கும், சுயமாகச் சிந்தித்துப் பகுத்தறியுமாற்றலுள்ள சிங்களவரது மனநிலைக்கும் உள்ள வேறுபாட்டை நன்கறியலாம். இத்தகைய நச்சு உணர்வுகள் ஊட்டப்பெறக் காரணகர்த்தர் யார்? என்கிற வினவும் ஈண்டெழுகிறது. தமிழர்களை அவர்களது உடலிலிருந்து வீசும் மணத்தைக் கொண்டே இனங்காணும் சக்திமிக்க சிங்களவர் உள்ளனர்' என்று மனோதத்துவவியல் நூலொன்றின் ஆசிரியரொருவர் குறிப்பிட்டிருந்தார். இத்தகைய விஷமத்தனமான மோப்பசக்தியின் அடிப்படை எமக்குப் புரியாத போதிலும், பகுத்தறிவாற்றலுள்ள சிங்கள மக்களது மனோபாவம் இதற்கு மாறுபட்டது என்பதற்கு மேற்குறித்த பகுதி உதாரணமாகும்.

1958-இல் சிங்கள தமிழ் இனக்கலவர நிகழ்ச்சிகளைக் கதையில் இணைத்துச் செல்லும் சந்தர்ப்பங்களில் இத்தகைய கலவரங்களுக்கான அடிப்படை நன்கு விளக்கப்படுகிறது. இனக்கலவரம் பற்றிய திஸ்ஸ ஈஸ்வரி உரையாடலில் திஸ்ஸ கூறுகிறான்.

'எம்மிடம் மனிதத்தன்மை இருக்குமாகில் இது போன்ற பிரச்சினை தோன்றாது. எனக்கு இருக்கும் வேதனை ஈஸ்வரிக்கும் இருந்தால் நான் ஈஸ்வரியை நோவிப்பதெப்படி? என்னை ஒருவன் நோவித்தால் காயமுண்டு பண்ணினால் வேதனையுண்டாகிறது அல்லவா? அப்படியாகில் இன்னொருத்தருக்கு காயமுண்டு பண்ண என்னால் முடியுமா? எனக்குக் காயமுண்டாகும்போது நோவதுபோல அடுத்தமனிதருக்கும் நோகும் தானே? எம்மிருவருக்கும் உள்ளது பொதுவேதனையொன்று. இதை மறுக்கவியலுமா?'

திஸ்ஸ தலைவர்களைப்பற்றி, 'இக்கலவரத்தை உண்டுபண்ணும் தலைமை மனிதர்கள் எவருக்கும் சிங்களமும் தெரியாது, தமிழும் தெரியாது. அவர்களுக்கு ஆங்கிலம் மட்டுமே தெரியும். சிங்களவரும் தமிழரும் மொழிக்காக அடிபுடிபடும்போது நடப்பது ஆங்கிலத்தில் கருமமாற்றப்படுவதே. இதை இத்தலைவர்கள் அனைவரும் அறிவர். சிங்களத்திற் செயலாற்றப்பட்டால் இப்போதுள்ள தலைவர்கள் தள்ளப்பட்டு விடுவர். தமிழ்மொழிக்கு இடங்கிடைத்தால் இப்போதுள்ள தமிழ்த் தலைவர்களுக்கு இடம் இல்லை. இடம் கிடைப்பது சாதாரண மனிதர்களுக்கே' என்கிறான்.

சிங்கள தமிழ்க்கலவரம் பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையிலான கலவரமா என்பதைப் பின்வரும் பகுதி விளக்குகிறது. பாதகம் புரிவோர் இம்மதத்தை அனுஷ்டிப்பவர்களல்லர். பொய்காரர்; சமயத்தைப் பேணுவதாக வேஷம்போடும் பொய்யர். மொழியைப் பாதுகாக்கவென்று அப்பாவிப் பெண்ணொருத்தியையோ குழந்தையொன்றையோ கொல்ல பௌத்த மதத்தவனுக்கு உரிமையில்லை. ஒன்றுமறியாத பிள்ளையைக் கொன்று நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதெப்படி? வீட்டுக்குள் இருக்கும் அப்பாவித் தமிழ்ப் பெண்ணைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்வதால் இப்பிரச்சினையைத் தீர்க்க இயலுமா?

1958 கலவரத்தின் மூலவர்கள் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றனர். வகுப்புவாதப் பீத்தர்கள் மனிதர்களைத் தூண்டிவிடும் வகையில் பேசினர்கள். அதன் விளைவு புறத்தே இருந்த ரஸ்தியாதுக்காரருக்கும், வழிப்பறிக் கொள்ளைக்காரருக்கும் வழி திறந்து விடப்பட்டவைதாம்.'

சிங்களவர் தமிழர்பால் வெறுப்புக் கொள்ளத் தமிழ் அதிகாரிகள் சிலரது போக்கும் காரணமென விளக்கும் திஸ்ஸ 'அரசாங்கக் கந்தோர்களில் சிங்களவர்களது தேவை நிறைவேறுவதில்லை என்று கூறக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டுதான். இது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஏற்படுவதல்ல. என்றாலும் தமிழ்த் தலைவர்களும் அதிகாரிகளும் செய்வதற்கு சாதாரண தமிழ் மக்கள் பழியா? அம்மனிதர்களை கொன்று பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? நாம்மனிதர்கள் என்ற முறையில் யோசனை செய்து பார்த்து ஏதாவது வகை செய்ய வேண்டும்' என்று கூறுகிறான்.

தமிழர் தங்கள் மொழியை நேசிப்பது நாம் அவர்கள்பால் வெறுப்பைக் காட்ட ஏதுவாகுமா? அவர்கள் தமது ஊர்ப் பிரதேசத்தை முன்னேற்றுவது பிழையா?'

இவ்வாறு தமிழரது உரிமை நியாயமாக்கப்படுவதுபோல, சிங்களப் போலீஸ் இன்ஸ்பெக்டர் வாயிலாக உண்மையான சிங்களவரது பண்பு விளக்கப்படுகிறது. 'நல்ல சிங்கள மனிதர்கள் என்றும் எவருக்கும் கஷ்டம் ஏற்படுத்த மாட்டார்கள். இப்படிச் செய்வோர் அனைவரும் கள்ளர்கள், காவாலிகளே!'

கலவரத்தின் விளைவுகளைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, சிங்களவர் பாதிக்கப்பட்ட வகையையும் ஆசிரியர் கூறுகின்றார். வாசுதேவ சமாகமத்தின் வெளி ஒன்று வாசுதேவ என்ற பெயர் தமிழ்ப் பெயர் போலத் தோன்றுவதாற் தகர்க்கப்பட்டமை இத்தகு நிகழ்ச்சிகளில் ஒன்று.

திஸ்ஸவின் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியும் கதைச் சுவையின் பொருட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது. கலவரகாரர் லாவனீயின் கணவரைத் தமிழரென்று எண்ணி அநியாயமாகக் கொன்று விடுகின்றனர்.

திஸ்ஸவின் காதல், தேயிலைத் தோட்ட வாழ்க்கை, மகாதேவன் குடும்பத்துடன் தொடர்புகள் என இயல்பாக வளர்ந்து சென்ற கதை கலவரத்தைத் தொடர்ந்து வாழ்வை அப்படியே எதிர் கொள்வதாக அமைய வில்லை. அதுவரை நடந்த நிகழ்ச்சிகளுக்கு ஒரு தத்துவ விளக்கம் கொடுக்க முயல்கிறது. நாவலின் அடிப்படைக் குறைபாடே இது தான். 'யாரையுமோ யாதையுமோ விரும்பாவிடில் துன்பத்துக்கிடமில்லை. இப்போது மட்டக்களப்பிலுள்ள மகாதேவனுக்கோ அவரது நிலையையொத்த தன்மையுள்ள மற்றும் தமிழர்களுக்கோ சிங்களவருக்கோ இவ் உண்மை தெரியுமாகில் எவ்வளவு நல்லது? மகாதேவனும் அவரது மனைவியும் மட்டக்களப்பில் சிறைப்பட்டுள்ளனர். ஈஸ்வரியும் ரவியும் பெற்றோருக்கு ஏதும் துன்பம் நேர்ந்திடுமோ என்ற பயத்தோடு உள்ளனர். இதற் கெல்லாம் காரணம் பற்று அன்றே?'

முடிவு பற்றிய குறைபாடுகள் தவிர்க்கப்பட்டிருந்தால் பிரேம்நாத் மெல்வினின் இந்த நாவல் இன்னும் சிறப்பானதாக அமைந்திருக்கும்.

ஊரோடு உத்தியோகம்

நெல்லை க. பேரன்

'ஓ தம்பி..... என்ன இந்தப்பக்கம்? கச்சேரிக்கோ.....? இல்லையப்பா அவர் இப்ப யாழ்ப்பாணத்திற்கு மாறிவிட்டார்' 'என்னப்பா இஞ்சை யுள்ளவனெல்லாம் கொழும்பு கொழும்பெண்டு கத்துறாங்கள். நீர் என்னடாவென்றால் அங்கிருந்து இஞ்சை ஓடிவாறீர்..... இப்ப என்ன அவசரம் உனக்கு? வயசுபோன காலத்திலை பேரப் பின்னையளுக்குக்கிட்ட வந்திருக்கலாமே.....'

பலவிதமான குரல்கள் நெல்லியடிச் சந்தியில் உள்ள பஸ் ஸ்ராண்டில் என்னை வரவேற்கின்றன. 'போக்குவரத்திலை நாங்கள் படுகிற கஷ்டங்களை நீரும் அனுபவித்துப்பாரும்' என்று இன்னொரு குரல். எல்லோரும் கச்சேரி உத்தியோகத்தர்கள்தான். ஒரு சிலரே டவுனில் படிப்பிக்கும் ஆசிரியர்கள். கடைகளில் வேலைபார்க்கும் சிலரும் காலையில் வரும் கச்சேரி பஸ்ஸிற்காகக் காத்து நிற்கின்றார்கள்.

எனக்கு வெள்ளவத்தைப் புகையிரத நிலையத்தில் பாணந்துறையிலிருந்து கரையோரப் புகைவண்டிக்காகக் காவல் நிற்பது ஞாபகத்திற்கு வருகிறது.

'சே என்ன இந்த பஸ்..... கொழும்பெண்டால் ஐஞ்சு நிமிஷத்திற்கொரு பஸ். .....ம் கொழும்பு கொழும்புதான்' என்று பக்கத்தில் நின்றவருடன் சலித்துக் கொள்வதனால் நான் இவ்வளவு காலமும் கொழும்பில் இருந்துவிட்டு இப்போது மாற்றலாகி வந்துள்ளேன் என்பதைச் சொல்லாமல் சொல்லி வைத்தேன். அவரும் அந்த உண்மையைப் பலமான தலைய சைத்தலினால் ஒப்புக் கொண்டார்.

காலை ஏழுமணி பதினைந்து நிமிடமளவில் பலத்த உறுமலோடு மின்னல் வேகத்தில் பஸ் வந்து நிற்கிறது. கச்சேரி எக்ஸ்பிரஸ். பருத்தித்துறையில் இருந்து வந்த எவரும் இறங்குவதாகத் தெரியவில்லை. பனங்கிழங்கு அடுக்கியதுபோல ஆட்களை அடுக்கிக்கொண்டு அந்த பஸ் வந்து நின்றது. இரண்டொரு பெண்களும்சனவெக்கையில் அவிந்து கொண்டிருந்தார்கள். கொண்டக்டர் நெல்லியடியில் மேலும் கிழங்குகளை அடுக்கினார். அவர்தான் என்ன செய்வார்; பாவம். எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தர்களையும் நேரத்திற்குக் கச்சேரிக்குக் கொண்டு போய் விட்டுவிடவேண்டும் என்பதுதான் அவருடையஎண்ணம். அந்த மூச்சிற்கு ஈடுகொடுக்க நான் தயாராயில்லை. அதனால் அடுத்த பஸ் வரட்டும் என்ற நினைப்போடு நின்றுவிடுகிறேன். எனக்குத் துணையாக இரண்டொரு காற்சட்டை போட்ட வர்கள் நின்றார்கள். ஆனால் சிறிது நேரத்தில் அவர்கள் கச்சேரி உத்தியோகத்தர்கள் இல்லை என்பதையும் கடைக்குச் சாமான் வாங்கப் போகிறார் கள் என்பதையும் அறிந்து 'கச்சேரி பஸ்ஸைத் தப்பவிட்ட' என் மடமையை நொந்து கொள்கிறேன். நான் கச்சேரி பஸ்சுக்குப் புதிசல்லவா.

சரி, இனிமேல் கச்சேரிக்குப் போகும் அடுத்த மார்க்கம் என்ன என ஆராய்கின்றேன். பருத்தித்துறையில் இருந்து தட்டிவான் ஒன்று வேகமாக வருகிறது. இருண்டுபோன மனதில் என்னையறியாமலேயே ஒரு துள்ளல்.

'யாழ்ப்பாணம் ஏறு' பாய்ந்து முன்வரிசையில் இடம் பிடிக்கின்றேன். என்னுடைய அவசரத்திற்கு வான் புறப்பட்ட பாடாயில்லை. அது முன்னுக்கும் பின்னுக்குமாய் அசைகிறது. ஆட்களைச் சேர்ப்பதற்கு அதுவும் ஒரு உத்தியாம். எனக்கு நல்லூர் மஞ்சத் திருவிழாவில் சுவாமியை வைத்து ஊஞ்சல் ஆட்டுவது ஞாபகத்திற்கு வருகிறது. பிறகு நெல்லியடிச் சந்தையில் இருந்து தேங்காய்ச்சாக்குகள், வாழைக் குலைகள் என்று வானின் பின் தட்டிலும் கூரையிலும் இடம் பிடிக்கின்றன. இரண்டொரு குறுக்குக்கட்டிய கிழவிகளும் எனக்குப் பக்கத்தில் ஏறி இருந்துகொண்டு ஆசுவாசமாக வாய் குதப்பி வெற்றிலை போடுகின்றார்கள். சாவகச்சேரி சந்தை முறைபற்றியும் கொடிகாமத்து தேங்காய் விலைபற்றியும் செத்தல் மிளகாய் தட்டுப்பாடு பற்றியும் அவர்கள் விளாசித் தள்ளுகிறார்கள். இடையில் ஒரு மனுஷி வந்து ஏறவே அவர்கள் என்னை, 'எப்பன் அரக்கி இருமேலை' என்று ஆணை பிறப்பித்துவிட்டு அந்த இடைவெளியில் தங்கள் சகபாடிக்கு இடம் பிடித்துக் கொடுக்கிறார்கள்.

எல்லா ஆசனங்களும் நிரம்பிய பின்னர் வான்சாரதி வந்து ஏறிக்கொள்கிறார். வான் மெதுவாக நகர்கிறது. போகப் போக அதன் வேகமும் அதிகரிக்கிறது. நவிண்டில் நாவலர் மடம். குஞ்சர்கடைச் சந்தி ஆகிய இடங்களிலும் ஆட்கள் ஏறுகிறார்கள். வான் இப்போது வயல்களைத்தாண்டி வல்லை வெளியில் சென்றுகொண்டிருந்தது.

ஒ வென்ற அந்தப் பரந்த வெளியில் புதிதாகச் சில கட்டிடங்களையும் கடைகளையும் கண்டேன். அவ்விடத்தை வான் சமீபித்த போதுதான் அது வல்லை கூட்டுறவு ஆஸ்பத்திரி என உணர்ந்தேன். விர் விர் என்று வீசியடித்த காற்று என் தலைமயிரைக் குழப்பியடித்து என்னை ஒரு 'ஹிப்பி' யாக்கி விட்டது.

சுமார் ஒன்பது மணியளவில் வான் கள்ளியங்காட்டுச் சந்தையடியில் நிற்பாட்டப்பட்டுச் சாமான்களை இறக்கினார்கள். எனது கந்தோர் ஆரம்பித்து ஒரு மணித்தியாலமாகி விட்டது. முதல் நாளே எனக்கு இப்படியெரு கதியா ஏற்பட வேண்டும்? இதற்குத்தானா இவ்வளவு கஷ்டப்பட்டு மாற்றம் கேட்டு ஓடிவந்தேன்? -ஊம்' என்று பெருமூச்சுடன் பேசாமல் அமர்ந்திருக்கிறேன்.

இந்த வான் 'கச்சேரிக்குப் போகாது என்று கொண்டக்டர் அறிவிப்புக் கொடுத்ததும் எனக்கு நெஞ்சு பகீரென்றது. உள்ளே இருந்த சில அனுபவ சாலிகளின் ஆலோசனையைக் கேட்டு முத்திரைச் சந்தையடியில் இறங்கிவிடுகிறேன். 'பொடி நடை' யில் கச்சேரிக்குப் போகிறேன். சுமார் ஒன்பதரை மணியளவில் கச்சேரிக்குள் நுழைந்து எனது பென்சன் பகுதியைத் தேடிப்பிடித்து ஒரு அசட்டுச் சிரிப்புடன் நுழைகிறேன். சில தெரிந்த முகங்களும் பல தெரியாத முகங்களும் என்னைச் சிரிப்போடு வரவேற்கின்றன. நான் ஒருமாதிரிச் சமாளித்துவிடுகின்றேன்.

இப்போது நான் தட்டி வானில் போவது கிடையாது. ஒழுங்காக கச்சேரி பஸ்சில் கால்கடுக்க நின்று போகிறேன். எனக்குத் துணையாகப் பலபேர் நிற்கிறார்கள். எங்கள் எல்லோருக்கும் 'வெளவால் டிக்கற் காரர்கள்' என்று பட்டம். ஏனென்றால் பஸ்சின் உள்ளே எங்கள் தலைகளுக்கு மேலே 'எலியோடி' போல உள்ள கம்பியைப் பிடித்துக் கொண்டு நாங்கள் தொங்கிக்கொண்டே செல்வதால் இந்த 'வெளவால்' டிக்கட் பொருத்தமாயிற்று.

நெருக்கம் என்றாலும் பஸ் பிரயாணத்தில் ஒரு வசதியும் இருக்கிறது. அதுதான் சம்பா ஷனை வசதி. சுமார் ஒருமணி நேரத்திற்கு எம். ஜி. ஆர். கருணாநிதி பிரச்சனை முதற் கொண்டு வியட்னாம் பிரச்சனை வரைக்கும் நாலைந்து பேர் சேர்ந்து ஒரு அலசல் அலசி விடுவோம். இடையிடையே சங்கீதகாரன் வெத்திலை போடுவது போன்று நாங்களும் சி. ரி. பி. யைத் திட்டாமல் விடுவதில்லை.

நான் கச்சேரிக்கு அதுவும் பென்சன் பகுதிக்கு மாற்றலாகி வந்ததை ஊரில் அதிலும் குறிப்பாக சில ஆசிரியர்கள் எப்படியோ மோப்பம் பிடித்து விட்டார்கள். இதனால் எனக்கு வெளிவேலைகள் அதிகரித்தன. இல்லை, முடியாது, கஷ்டம் என்ற வார்த்தைப் பிரயோகங்களே என் வாயில் இடம்பெறுது. இதனால் நாளாந்தம் அவர்கள் தருகிற கிழிந்துபோன பழைய பென்சன் கடதாசிகளையெல்லாம் எனது சட்டைப் பையில் திணித்துக் கொள்வது வழக்கமாகி விட்டது. நான் பென்சன் பகுதியில்தான் வேலை பார்க்கிறேன் என்றாலும் பிறப்பு, இறப்புப் பதிவுக் கந்தோர், வெடிமருந்துப் பெர்மிற்றுக் கந்தோர், காணிக்கந்தோர், உறுதிக்கந்தோர் என்று எல்லாவற்றிற்கும் நான் ஏகப் பிரதிநிதியாக்கப்பட்டேன்; இதனால் சில நகைச்சுவையான நண்பர்கள் எனக்கு அரசாங்க அதிபர் என்ற கௌரவப் பட்டத்தைச் சூட்டி அழைக்க ஆரம்பித்தார்கள்.

முன்னெல்லாம் கொழும்பிலிருந்து ஊருக்கு வந்தால் வீட்டில் தினசரி காலையில் முட்டைக் கோப்பி கிடைக்கும். காண்பவர்கள் வலு அக்கறையோடு குசலம் விசாரிப்பார்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புப் புதினங்களை அரசியல் பிரச்சினைகளையும் நண்பர்கள் ஆவலோடு கேட்பார்கள். அப்போதெல்லாம் அவர்களோடு கதைப்பதென்றால் எனக்குப் புழுகம். இப்போ என்னைக் காண்பவர்கள் ஒரு புன்முறுவலோடு போய்விடுகிறார்கள். சிலபேர் அதுவும் முறுவலிப்பதில்லை. 'அவன் இப்ப ஊரோட வந்திட்டான்' என்று கவனிக்காமல் விடுகிறார்கள் போலும். அடிக்கடி காண்பவரைக் குசலம் விசாரிப்பதும் அவசியமில்லைத்தானே!

ஊரோடு வந்ததுதான் தாமதம் என்னை அமத்திப் பிடித்துத் திருமணமும் செய்து வைத்துவிட்டார்கள். நான் இப்போது மனைவியின் சீதனத் தறையில் மிளகாய் பயிரிட்டுக் கொண்டிருக்கிறேன். கச்சேரியால் வந்தவுடன் நானும் மனைவியுமாக சேர்ந்து மிளகாய்த் தோட்டத்தில் புல்லுப் பிடுங்குதல், உரம் போடுதல், தண்ணிவார்ப்பது போன்ற பல வேலைகளையும் செய்வோம். எனது ஊர் வருகைக்காகக் கனபேர் போலக் குறிபார்த்திருந்தவர்கள் இப்போது என்னைத் துரத்தி வலைபோட்டுத் திருமணம் செய்து வைத்தபிறகு அவர்களது பிரச்சினை முடிந்து விட்டது.

என்னுடைய மனைவிக்கும் கவலைகள் இல்லாமல் இல்லை. அதாவது கொழும்பில் நூற்றைம்பது ரூபாய் வாடகை கொடுத்து ஒரு கார்க் கராஜ்ஜில் தனிக்குடித்தனம் நடத்தாமல் போனதும், தெஹிவலை மிருகக்காட்சிக்கும், வெள்ளவத்தை பீச்சுக்கும் அடிக்கடி உலாவப் போகாமையும் என்னைக் கந்தோருக்குப் போகவிட்டுப் போட்டு பக்கத்து குடித்தனக் காரப் பெண்களுடன் சதா சலசலத்துக்கொண்டிருக்க முடியாமற் போனமையும் ஐஸ் போட்ட மீனில் கறிவைக்காமையும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஒசிக் கணநிகழ்ச் சிகளைப் பாராமையும் அவளுடைய தலையாய கவலைகளாகும்.

'அது நான் உம்மை ஆடி வேலுக்கு கூட்டிக்கொண்டு போறனப்பா..... அங்கை ஆசியம்மாவையோட தங்கலாம்..... நான் முத்தி இருந்த கவிகத்தும. ரோட்டிலை தங்கலாம்.....' என்று நான் அடிக்கடி மனைவியைச் சமாதானப் படுத்துவதுண்டு.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் மனைவியையும் கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணத்தில் 'அவளுக்கென்றோர் மனம்' படம் பார்க்கப் போனேன். அதன் பிறகு யாழ். பொதுசன நூலகத்தையும், கோட்டை மைதான வெளியையும், சுப்பிரமணியம் பூங்காவையும் பார்க்கச் சென்றோம். அவளுக்கு அவற்றில் மனம் சென்றதாகத் தெரியவில்லை. கப்பிரமணியம் பூங்காவைக் கண்டதும் 'கொழும்பிலை இதையிடப் பெரிய தோட்டமே.....' என்று திரும்பிக் கேட்டா.

'இன்னும் நாலு வருஷத்திலை அங்கைதானே போய் இருக்கப்போறம்! என்று சமாதானப்படுத்திக் கூட்டிச் சென்றேன்.

ஊரிலை ஒருநாள் படம் பார்க்கப் போயிருந்தேன். அப்போது நான் திருமணம் முடிக்கவில்லை. இரண்டாம் வகுப்புக் கதிரைக்குத்தான் டிக்கட் வாங்கினேன். கொழும்பில் இந்தக் கதிரைகளைக் கலரிக்குக் கூடப் போடமாட்டார்கள்' ஒரே மூட்டைக்கடி. கலரியில் இருந்துகொண்டு விசிலடித்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் படம் முடியுமுன்னரேயே எல்லோரும் எழுந்து நின்று கூத்துப் பார்த்த கணக்கில் பார்த்தார்கள். தாங்களும் ஒழுங்காகப் பார்க்காமல் மற்றவர்களையும் பார்க்க விடாமல் சே..... எவ்வளவு அநாகரிகமாக நடந்து கொள்கிறார்கள். சுத்தக் காட்டு மிராண்டித்தனம் என்று கருதிக் கொள்கிறேன். இதன்பிறகு மனைவியையும் அழைத்துக் கொண்டு படம் பார்க்கப்போக எனக்கு மனமே வருவதில்லை.

ஒரு ஞாயிற்றுக் கிழமை தகப்பனுருடன் தோட்டத்தில் உதவி செய்துவிட்டுக் களைப்பொடு வந்துகொண்டிருக்கிறேன். சந்தியில் இருந்து ஒரு ஒழுங்கையைத் தாண்டித்தான் என் வீட்டிற்கு வரவேண்டும். தன்னுடைய வீட்டுக் காணியைச் சுற்றிவரக் கதியால்கள் போட்டு வேலியடைத்துகொண்டிருந்த மனுஷி ஒன்று (ஒருவகையில் எனக்கும் உறவுதான்) என்னைப் பலமாகப் பிடித்துக் கொண்டது. 'தம்பி இரண்டு கதியால் போட்டுத்தாடா. நான் குனிய நிமிர மாட்டன்' என்ற கெஞ்சல் வார்த்தைகளோடு, 'அவனெல்லவா பிள்ளை என்ன சொன்னாலும் மறுக்காமல் செய்வான்' என்ற புகழ் உரைகளோடும் என்னை மடக்கி வீட்ட சந்தோஷத்தோடும் மனுஷி சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை என்னை வைத்து வேலை வாங்கினா. கதியால் கிடங்குகளைத் தோண்டியதிலும் வேலிக்கு உரம்போட்டதிலும் என் கைகள் சோர்ந்து விழுந்துவிட்டன. கொழும்பிலிருந்து வந்ததிற்கு இதுவும் வேணும் இன்னமும் வேண்டும் என்று நொந்துகொண்டே ஆத்திரம் தீருமட்டும் அலவாங்கால் இடித்தேன்.

நீண்ட கொக்கைத் தடியை எடுத்துக் கொண்டுவந்து ஆட்டுக்குக் குழை வெட்டித் தரும்படி கேட்பவர்களும், யாழ்ப்பாணக் கடைகளில் சாமான் வாங்கித் தரும்படி கேட்பவர்களும், ஆஸ்பத்திரிக்குச் சாப்பாடு கொண்டுபோகக் கேட்பவர்களும், எனது கச்சேரி வாழ்க்கையில் உதவிகேட்பவர்களுக்கும் குறைவில்லை. இத்தனைக்கும் நான் முகம் கொடுக்காவிட்டால் ஒவ்வொருவரிடமிருந்தும், இவரென்ன ஆள் சரியில்லை! பெரிய விலை வைக்கிறார்' என்ற குறைகளைத்தான் கேட்கவேண்டி வரும்.

அன்றைக்குக் கொழும்பிலிருந்து லீவில் வந்து நின்ற பழைய சகாக்களில் ஒருவரைச் சந்தித்தேன். அவர் என்னைக் கண்டவுடனேயே உனக்கென்ன மச்சான் ஊரோட உத்தியோகம் இஞ்சைபாரன் நாங்கள் படுகிற பாட்டை! முந்திச் சாப்பாட்டுக் கடையளிலை மிளகு தண்ணி எண்டாலும் காட்டினாங்கள். இப்ப அதுகூட இல்லை. மிளகாயை நீனைச்சுப்போட்டுச் சாப்பிடவேண்டியதுதான்.

'நானும் முந்தி முந்தி உப்பிடித்தான் மச்சான்,

என்னைப்பற்றிப் பெரிதாக நினைத்துக்கொண்டுபோகும் நண்பனுக்காக நான் இரங்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட ஆயுளுக்கான போராட்டம்

சமகால மனிதனது சராசரி ஆயுள் திறன் 90 என்று கண்டு பிடித்துள்ளனர்; அதாவது உயிரியல் ரீதியாக, அவனது திட்டமிட்ட வயது அதுவே. எனினும் பலர் அதனை எட்டுவதில்லை. இயற்கையால் அளிக்கப்பட்டுள்ள இந்த ஆண்டுகளை மனிதன் எட்ட முடியாததற்கு என்ன காரணங்கள் என்று கண்டுபிடிப்பதே முதுமையில் ஆய்வின் நோக்கங்களில் ஒன்றாகும். சாதாரணமாக, மக்கள் 90 ஆண்டுகாலம் வாழ்வதைத் தடை செய்வது எது?

முதியவர்களின் ஆரோக்கியம் பெரும்பாலும் அவர்கள் வாழ்ந்து வரும் காலத்தைப் பொறுத்தது. விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றம், நமது சகாப்தத்தின் பிரதான குணவிசேஷங்களுள் ஒன்றாகும். மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதற்கு வகை செய்வதன் மூலம், நீடித்த ஆயுளுக்குச் சாதகமான நிலைகளை அது தோற்றுவிக்கிறது. எனினும் மனித உடலில் அது பாதிப்புக்களையும் ஏற்படுத்தத்தான் செய்கிறது. நகர வாழ்வு, வாழ்வின் துரிதகதி, பெரும் நகரங்களில் மக்கள் குவிந்திருத்தல், இயற்கையிலிருந்தும் மனிதன் தனிமைப்பட்டிருத்தல் ஆகிய அனைத்துமே, அவன் விரைவில் முதுமையுறுவதற்குக் காரணங்களாகும். பல்வேறு செய்திகளையும் மனிதன் கிரஹிக்க வேண்டியிருப்பதால் அவனது செயல்திறன் பெரிதும் சிக்கலடைவதோடு, அவனது நரம்பு மண்டலம் பெரும் தகைவுக்குள்ளாகிறது. அத்தகைய புதிய தகைவுகளுக்கேற்ப, வாலிப உடல் அனுசரித்துக் கொள்கிறதென்றாலும், முதுமையின்போது அத்தகைய அனுசரணம் பலவீனமடைந்து விடுகிறது.

முதுமையில் என்பது வைத்தியத்தில் ஒரு விசேஷ தனித்துறையாக இருந்தபோதும், ஒவ்வொரு மருத்துவரும் இத்துறையில் பல ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றார். வைத்திய சிகிச்சை பெறும் மக்களில் மூன்றில் இருபங்கினர் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள். அவர்களுக்கு ஏற்படும் நோய்களின் தன்மையோ, இளைஞர்களுக்கு ஏற்படுவதினின்றும் முற்றிலும் மாறுபட்டது. எனவே அவற்றைப்பற்றி விசேஷமாக ஆராய வேண்டியுள்ளது.

சோவியத் யூனியனில் பல ஆஸ்பத்திரிகளில் முதுமையியில் பிரிவுகள் உள்ளன; என்றாலும் அவை போதுமான அளவிற்கு இல்லை. வைத்தியக் கல்லூரிகளில் தனியே முதுமையில் துறைகள் நிறுவப்படுகின்றன.

சோவியத் முதுமையாளர்களது ஆராய்ச்சிகளின் பயனாக சில முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

பொதுவாக 40 விருந்து 60 க்குள்ளாகத்தான் இளமுதுமை ஆரம்பமாகிறது. அப்போது உடலில் ஏற்படக் கூடிய பல பாதகமான மாற்றங்களைத் தடுப்பதற்கு நாம் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முதுமையுறும் ஒரு உடலில் ஜீவாதாரக் கிரியைகளை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்கவும் சோவியத் விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். 'ஆண்டி ஆக்ஸிடண்ட்ஸ்' என்ற சில விஷேசப் பொருள்கள் பிராணிகளின் மீது பரிசோதிக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக, அப்பிராணிகளின் ஆயுட்காலம் 15-20 சதவிகிதம் நீடித்துள்ளது. இன்றும் பல்வேறு இரசாயனப் பொருள்கள் தற்போது பரிசோதனையில் இருந்து வருகின்றன.

முதியவர்களுக்கான உணவு, தூக்கம், ஓய்வு, இயக்கம் எவ்வாறிருக்க வேண்டும் என்ற கறாரான அட்டவணையும், சோவியத் விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். நடுத்தர வயதுடையவர்களுடன் ஒப்பிடும்போது, முதியவர்கள் அதிகக் கலோரி உணவுப்பொருள்களை (கொழுப்பு சர்க்கரை) சராசரி மூன்றிலொரு பங்கு குறைக்க வேண்டும். செயலூக்கமுள்ள வகையில் அவர்கள் தங்கள் வாழ்க்கை முறைமையை அமைத்துக் கொள்ள வேண்டும். கடினமற்ற உடற்பயிற்சியில் அவர்கள் முறையாக ஈடுபட வேண்டும். மிகச் சிறந்த உடற்பயிற்சி நடத்தலே; இது நரம்பு மண்டலத்தைச் சிறந்த நிலையில் வைத்திருக்க உதவுகிறது. புகைபிடித்தல், மது ஆகியவற்றை அவர்கள் அறவே விட்டுவிடுதல் நல்லது; இல்லையெனினும் அவற்றை மிதமாகப் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் அப்பொருள்கள் இருதயத்தையும், இரத்தக் குழல்களையும் பாதித்து முதுமையடையும் போக்கினைத் துரிதப்படுத்துகின்றது.

மனிதனது வாழ்நாள் முழுமையிலும், முதுமையுறும் போக்கு எவ்வாறு படிப்படியாக ஏற்பட்டு வருகிறது என்பதைக் கண்டுபிடிப்பதே முதுமையியல் ஆய்வின் நோக்கமாகும். அதனை நாம் கண்டுபிடித்து விட்டால், அதன் போக்கை மாற்றவும், வழிகளை நாம் கண்டுபிடித்து விடலாம்.

நுளம்புகள்

விஷக் காய்ச்சல்
வேதனையில்
நான் துடிக்க
ஜீவக் குருதியை
உறிஞ்சிச் சுகித்த
கொள்ளிக் கால்கள்
என்னை—
குத்திக் குதறும்!

கீழ் சாதி

பச்சைப் புல் நாங்கள்
வாடி வதங்கி...
வாழ்விழந்து துடிக்கின்றோம்
எங்களை—
பிடுங்கி எறியாதீர்!

பி. எம். அப்துல் ஸத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக. செந்திநாதன்

மட்டக்களப்பு

வசந்தன் கவித் திரட்டு

'மானிடப் பெண்கள் வளரு மொரு காதலினுல்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந் தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்றெடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
.....
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றெழிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்'

என்று மகாகவி பாரதியாரின் குயில் கூறுகிறது.

ஆம். உள்ளத்தில் எழும் உணர்ச்சியை இலக்கணப் புலவர்களும் பாடுகிறார்கள். வேலையின் பளு தெரியாமல் இருப்பதற்காகப் பல தொழில் செய்யும் தொழிலாளர்களும் பாடுகிறார்கள். பண்னெடுங் காலமாகப் பாமர மக்களால் பாடப்பட்டு வருவதும், யாப்பு மரபோ, இலக்கண மரபோ அற்றதுமான -இந்தப்பாட்டுக்கு நாட்டுப் பாடல்களுக்கு உயிர்-உணர்ச்சி உண்டு. வாய்முறைப் பாட்டாக, அச்சேறாமல் இருக்கும் இந்த நாட்டுப் பாடல்களைக் கேட்கும்போது இவற்றிற்கு நெஞ்சை அள்ளும் சக்தி இருக்கத்தான் செய்கிறது என்பதை உடனே உணருகிறோம்.

ஏற்றப் பாட்டும் மற்றைய பாடல்களும் ஏறக்குறையக் கிராமங்களில் இருந்து மறைந்து வருகின்றன. சிற்சில கிராமங்களிலே எஞ்சியிருப்பது வசந்தன் பாட்டு ஒன்றேதான். உண்மையில் இந்த வசந்தன் அடித்தலையும் அதற்கேற்ற பாடல்களையும் கேட்கும்போது, பக்தி, உவகை, நகை, வீரம் முதலிய சுவைகள் பிறப்பதைக் காணலாம்.

அறுபது வருடங்களுக்கு முன், தமிழ்நாட்டிலே முக்கூடற் பள்ளுப் பாடலொன்றைப் பாடிக் கோலாட்டம் அடித்த காட்சியொன்றை இரசிகமணி டி. கே. சி. அவர்கள் பின்வருமாறு வர்ணித்துள்ளார்.

'கோலாட்டம் என்றால் பெஞ்சுக்குச்சி, முருங்கைக்குச்சி கொண்டு எங்கே முறிந்துபோகுமோ என்று பயந்து பொத்திப் பொத்தி அடிக்கிற வியாபாரம் அல்ல. பக்கத்து மலையிலிருந்து வந்த நாங்கு, கோங்கு, தேக்கு முதலிய வைரம்பாய்ந்த மரங்களினுல்ச் செய்த கனத்த கம்புதான் கோல். கணீர், கணீர் என்று அடிவிழும். சத்தம் இரண்டு தெருவுக்குக் கேட்கும். முற்றத்தில் நின்றுதான் கோலாட்டம். கால்மிதிக்கிற தாளத்தில் தரை புழுதிக் காடாய்ப் போய்விடும்.

ஆற்று வெள்ளம் நாலு வர
ஆற்று வெள்ளம் நாலு வர
ஆற்று வெள்ளம் நாலு வர

என்று மூன்று தடவை அடியை நிரவல் செய்துவிட்டுப் பிறகு எதுகையோடு

'தோற்றுதே குறி'

என்று வேகம் விழும்போது பார்ப்பவர் எல்லோருடைய உள்ளமும் பாட்டிலும் ஆட்டத்திலும் கலந்து கொள்ளும். அதில் ஒரு பரவச உணர்ச்சி தான். ஐம்பது வருஷமாய் எனக்கு மறக்க முடியவில்லை.

இங்கே இரசிகமணி டி. கே. சி. வர்ணித்திருப்பது கோலாட்டம்தான் என்றாலும் யாழ்ப்பாணப் பகுதியில் - வசந்தன் அடித்தல்தான். இங்கே கோலாட்டத்திற்கும் வசந்தன் அடித்தலுக்கும் சிறிது வித்தியாசம் உண்டு.

வாய்முறைப் பாடலாக வந்து கொண்டிருந்த இந்த நாட்டுப்பாடல்களைச் சேகரித்து அச்சிடும் முயற்சி சென்ற முப்பது வருடகாலமாக தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நாட்டுப் பாடல்களுக்காக அவற்றைத் தேடித் தொகுக்கும் முயற்சியில் தன்னை அர்ப்பணித்த - தேவேந்திர சத்தியார்த்தி என்பவர் தமிழ்நாட்டிலும் கால்வைத்த பின்னர்தான் எங்கும் ஒரு புத்துணர்ச்சி தோன்றியது. ஈழத்தில் இந்தப் புத்துணர்ச்சியால் உந்தப்பட்டு முதல் முதல் கால்வைத்தவர் பிரம்மஶ்ரீ கி. சதாசிவ ஐயரவர்கள்தான்.

ஐயரவர்கள் பாடசாலைப் பரிசோதகராக அக்காலத்தில் கடமையாற்றியவர். ஐயரவர்கள் ஒரு பாடசாலைக்குப் பரிசோதகராக வருகிறார் என்றால் பாடசாலை கிடுகிடுக்கும். ஆசிரியர்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டுத் தாமே ஓர் இலக்கண விடயத்தையோ இலக்கியப் பாடலையோ ஒருவகுப்பில் படிப்பித்துப்பார்ப்பார். மாணவர்களைக் கேள்விமேல் கேள்வி கேட்டுத் துளைத்துவிடுவார். அவர் பேருழைப்பாளி. தம் உத்தியோகப் பெருமையோடு நின்றுவிடாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைத் தமிழ்ச்சங்கம்போன்று யாழ்ப்பாணத்தில் ஆரிய திராவிடபாஷபிவிருத்திச் சங்கத்தை ஸ்தாபித்துப் பல பண்டிதர்களையும் பாலபண்டிதர்களையும் இந்நாட்டுக்குத் தந்தவர். சுன்னாகத்தில் தம் பொறுப்பிலேயே ஒரு பிராசீன பாடசாலையை நிறுவி, தகுந்த வித்துவான்களை அமர்த்தி வடமொழியையும் தமிழையும் வளர்த்தவர். கரவை வேலன்கோவை, ஐங்குறு நூறு என்னும் நூல்களைப் பதிப்பித்தவர். தேவி தோத்திர மஞ்சரி, இருது சங்கார காவியம் என்ற நூல்களைக் கவிதையிலே ஆக்கியவர் கலாநிதி என்ற அருமையான சஞ்சிகையை தமது இறுதிக் காலத்திலே வெளியிட்டவர். அப்படிப்பட்ட பேருழைப்பாளராகிய ஐயரவர்கள் தமது இடைவிடா முயற்சியினூடே அச்சில் ஏறாமல் இருந்த வசந்தன் கவிதைகளைத் தொகுத்து முதன் முதலில் வெளியிடத் துணிந்தமை பாராட்டுக்குரிய தொன்றாகும்.

மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு என்ற இந்த நாட்டுப் பாடல் நூல் 1940-ஆம் ஆண்டு வெளிவந்தது. இற்றைக்கு முப்பத்து மூன்று வருடங்களுக்கு முன் இப்படியான ஒரு நூலை ஐயரவர்கள் வெளியிடத் துணிந்ததே ஆச்சரியம்! ஐயரவர்கள் மட்டக்களப்புப் பகுதியில் பாடசாலைப் பரிசோதகராக இருந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி மட்டக்களப்புத் தெற்கு தமிழாசிரியர் சங்கத்தின் துணையோடு இந்த நூலை வெளியிட்டார்.

ஆங்கிலத்திலும் தமிழிலுமாக நாற்பது பக்கங்கள் கொண்ட முகவுரையுடன் சேர்ந்து நூற்றைம்பது பக்கங் கொண்ட இந்த நூல் ஒருரூபா விலைக்கு விற்கப்பட்டது. ஈழகேசரி பொன்னையா அவர்கள் தமது திருமகள் அழுத்தத்தில் விடயத்துக்கேற்ற சிறப்போடு அதை அச்சிட்டுள்ள பெருமையை இப்போது பார்த்தாலும் மகிழ்ச்சியாகவே இருக்கிறது. இன்னும் மகிழ்ச்சிக்குரிய விடயம், ஐயரவர்களது அடக்கம். ஒரு சிறு நூலை வெளியிட்டுவிட்டு ஆஹா, ஊகூ என்று ஆர்ப்பாட்டம் போடும் காலத்திலே 'மட்டக்களப்பு மக்களது வாழ்க்கையில் பெரும் மகிழ்ச்சிக்கும் கொண்டாட்டத்திற்கும் ஏதுவாய் முன்பு விளங்கியிருந்த இந்தப் பாடல்கள் கால வேறுபாடு காரணமாகக் கைவிடப்பட்டு ஒழிந்து மறைந்து போகாவண்ணம் இவற்றைக் காப்பாற்றி வைத்தல் வேண்டும் என்னும் ஆசையே என்னிலும் வல்லுநராற் செயற்பாலதாய இவ்வேலையில் என்னை ஈடுபடுத்தியது என்பதைப் பணிவோடு விண்ணப்பித்துக் கொள்கிறேன்' என்று ஐயரவர்கள் எழுதியுள்ளார்கள்.

இந்தப் பாடல்களை எல்லாம் 1. கட்டியம் 2. தோத்திரம் 3. சரித்திரம் 4. தொழில் 5. வேடிக்கை 6. விளையாட்டு என்னும் ஆறு பிரிவுகளாக வகுத்து சரித்திரம் சம்பந்தமான குறிப்புக்களையும் இல பாடல்களுக்கு விளக்கத்தையும் நல்லதோர் முகவுரையாக ஐயரவர்கள் எழுதியுள்ளார்கள்.

எல்லாம் சரி. நூலில்என்ன இருக்கிறது, என்கிறீர்களா?

இராசசிங்கன், நரேந்திரசிங்கன் என்ற அரசர்களைப் பற்றி வசந்தன் கவியில் பெயர் தெரியாத நாட்டுப் புலவர்கள் பாடுகிறார்கள். கதிரமலைப் பள்ளுப் போன்ற பள்ளுப் பிரபந்தங்களிலே வரும் 'பள்ளத்தி பள்ளன் எங்கேடி போயிட்டான்' என்ற வரிகளைப் போன்ற வரிகள் இந்த வசந்தன் கவிதைகளிலும் வருகின்றன. ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து பார்க்கலாம்.

கண்ணகித் தேவியைப் பற்றியும் மாதவி மடத்தையைப் பற்றியும் நாட்டுப் பாடல் ஆசிரியர்களின் மதிப்பீடு என்ன? என்பதை அறிய இந்த நூல் உதவுகிறது. எத்தனை சந்தங்களில் விதம் விதமாகப் பாடல் களைப் பாடியிருக்கிறார்கள் என்பதை அவதானித்துத் தமது கவிதா விலாசத்தைப் பெருக்கிக் கொள்ளக் கவிஞர்களுக்குப் பயன்படும்.

இலக்கிய இரசிகர்களுக்கும் இருக்கின்றன சில கவிதைகள்.

இதோ ஒரு துளி:-

வெருகல் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சித்தி, வேலாயுதர் என்னும் முருகக் கடவுளின் மேல் பாடப்பட்டது இக்கவி. ஒரு பெண், தோழிக்குத் தான் வெருகலிற் கண்ட அதிசயங்களைச் சிலேடை நயம் தோன்றக் கூறுகிறாள்.

சீர்புகழும் தென்வெருகற் சேயிழையே செய்தியைக்கேள்
பார்புகழும் புலிமீதிற் பசுவிருக்கக் கண்டேனே.
கோதைசெறிதென்வெருகற் கோதையேயோர்செய்தியைகேள்
காதலித்துச் செம்பருந்தோர் சுருமானே எடுத்ததடி
மானனைய வள்ளிபங்கன் வாழ்நகரில் மங்கையேகேள்
ஆனைதனைப் பூனைதின்ற அதிசயத்தைக் கண்டேனே.
திதியென வேநடிக்கும் தென்வெருகல் மங்கையேகேள்
அத்திதனை அத்திதின்ற அதிசயத்தைக் கண்டேனே.

மூன்றாவேலைப் பாடல்கள் தான் இவை. ஆனால் இவற்றின் உள்பொருள் நயத்தை அறிந்து கொண்டால் நாட்டார் பாடல்களாகிய இந்த வசந்தன் கவிதைகளிலும் புலவர்கள் எப்படியெல்லாம் தம் கைவண்ணத்தைக் காட்டியிருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றும்.

இறுதியாக, மட்டக்களப்பு வசந்தன் கவித் திரட்டு என்ற நூலினை அறிந்த பலர் என்னிடமே அதைப்பற்றி வினவினார்கள்,

நூலை இப்பொழுது பெறுவதே அருமையிலும் அருமையாகிவிட்டது. கிழக்கிலங்கை முதுசொத்து அந்தநூல். தமிழைப் போற்றுகிறோம்- தமிழ்த் தொண்டு செய்தோரைப் போற்றுகிறோம்- என்றெல்லாம் பேசுபவர்கள் இதை இரண்டாம்பதிப் பாகக் கொண்டுவருதல் நல்லது.

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த சதாசிவ ஐயரது ஞாபகமாக இதை யார் செய்யப் போகிறார்கள்?

வெளிநாடுகளில் இருந்து இந்நாட்டுக்கு வரும் தமிழ் அபிமானிகளுக்கு இந்த நாட்டின் சொத்தாக- சிறப்பான முதுசொத்தாக- இருப்பனவற்றுள் இப்படியான நாட்டுப் பாடல்களும் முக்கியமானவை. அவற்றுள் வசந்தன் கவிகள் ஈழநாட்டுக்கே சிறப்பானவை. இதை மனதிலிருத்தி ஆவன செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்களின் கேள்வி

அன்பு ஜவகர்ஷா

எங்கள் மரத்துப் பூக்களே
ஏன் பறிக்கின்றீர்?
நாங்கள் செய்த தவறுதான் என்ன?
உள்ளத்தில் அழகில்லாத
உங்களது இல்லங்களே
நாங்கள் ஏன் அலங்கரிக்க வேண்டும்?
அயலவனின் மணமே வேண்டாத
நீங்கள் எம் சுகந்தத்தை
ஏன் நுகர வேண்டும்?
உங்களது குறைபாடுகளே
ஆண்டவன் சந்நிதியில்
எங்களைக் கொண்டு தூவி
ஏன் மறைக்கின்றீர்கள்?
'நாங்கள் தான் நட்டோம்
பாத்தி கோலித் தண்ணீர் விட்டோம்
அதனால் அது எங்கள் உடைமை'
என்ற சொத்துரிமை வாதமா?
உங்கள் குலத்துக்கே உரித்தானவர்களின்
அன்றுட உணவைப் பறித்த நீங்கள்
எங்கள் மரத்துப் பூக்களே
ஏன் பறிக்கின்றீர்?
எங்களிடம் எதிர்பார்க்கும் நன்றிக் கடனே
உங்களில் உரியவர்களுக்குக்
கொடுத்துவிட்டு வாருங்கள்
அப்போது நாங்கள்
வாயே திறக்க மாட்டோம்!
அதுவரைக்கும் கேட்போம்:
எங்கள் மரத்துப் பூக்களே
ஏன் பறிக்கின்றீர்?



ஈழத்துப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின்

பொருள் முதல்வாத ஆய்வு முன்னோடி

எம். சிறீபதி

'இக்கட்டுரையை எதிர்த்து யாழ்ப்பாணத்திலுள்ள சில பெரியமனிதர்களும் சமய சம்பந்த முடைய சங்கங்களைச் சேர்ந்த வர்களும் காரசாரமாகக் கண்டித்துக் கடிதம் எழுதினர். தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் தமிழின் கலாசாரத்திற்கே கேடுவிளைவிக்கும் வகையில் தமிழிற்கு மானபங்கம் விளைவிக்கலாமா என்ற தோரணையே பெரும்பாலும் அக்கடிதங்களின் அடிநாதமாக ஒலித்தன.

இந்த கண்டனச் சார்பாகக் கொண்டு பேராசிரியர் பதவியில் இருந்து அவரை விலக்கி விடமுடியும் என எண்ணி எத்தனித்தவர்களும் உளர். இதிலிருந்தே அக்கடிதக் கண்டனங்களின் சாரம் புலப்படும்.'

இது 'முருக வணக்கம்' என்ற கட்டுரையை பேராசிரியர் கணபதிப்பிள்ளை கூற அதனைப் பிரதி செய்த மாணவன் ஆ. வேலுப்பிள்ளை எனக்கு அண்மையில், அக்கட்டுரைக்கு இருந்த எதிர்ப்பினை, வாய்மொழியாகக் கூறியவற்றின் சுருக்கமாகும்.

1960- ல் வெளியாகிய 'முருக வணக்கம்' என்ற கட்டுரையின் முக்கியத்துவத்தையும் அதற்கூடாக பேராசிரியரின் பண்புகளையும் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தென் கிழக்காகிய நாடுகளில் தமிழ் படிப்பிக்கப்படும்; தமிழை ஆராயும் பல்கலைக்கழகங்களில்; பெருமளவிற்கு முன்னணியில்நிற்பவை இரு பல்கலைக் கழகங்களாகும். கேரள, இலங்கைப் பல்கலைக்கழகங்களே அவை

நமது பல்கலைக்கழக வரலாற்றில் 65- ஆம் ஆண்டுவரையும பெறுமானம் மிக்கவராக விளங்கியவர் பேராசிரியர் கணபதிப் பிள்ளை.

இத்தகைய கட்டுரையை எழுத பக்கத்துணையாக இருந்த பண்புகள் என்ன?

'தாம் படித்தவற்றை மேனாட்டு முறைப்படி மாணவனுக்கு தமது கூர்ந்த அறிவால் ஆராய்ந்து சொல்லிக் கொடுப்பதில் வல்லவர் விபுலானந்தர்'

'அழக சுந்தர தேசிகர் தமிழை மட்டும் கற்றுத் தேறிய பண்டிதரைப் போல் அல்லர். அவரைப் போல் ஆழ்ந்த தமிழ் அறிவோடு விரிந்த நோக்குடைய இன்னொருவரைக் காண்டல் எளிதன்று. இஃது அவர் ஆங்கிலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியினாலும், பல தேசங்களை யுஞ் சுற்றிப் பார்த்து அங்குள்ள வர்களோடு ஊடாடியதனாலும் வந்த பயன்.'

பேராசிரியர் கணபதிப் பிள்ளை விபுலானந்தரிடமும் அழகசுந்தர தேசிகரிடமும் எதனைக் கண்டு கூறினரோ அது அவரிடம் நிறைய இருந்தது. எதனையும் ஆதாரத்தோடு பேசவேண்டும் என்ற சிந்தனையும் தெரியாததைத் தெரியாது என்று ஒத்துக்கொள்வதில் எவ்வித வெட்கமும் இல்லை என்று எண்ணும் மனப் பாங்கும் அவரை பலதுறைகளிலும் ஈடுபாடு கொள்ளச் செய்தன.

இத்தகைய ஆதார- காரண காரியத்துடன் ஆராயும் விஞ்ஞான நோக்கே தமிழை தனித்து இலக்கியம் என்ற வரையறைக்குள் வைத்துப் 'பனங்காய் பிளையாமல்' விரிவாகப் பார்க்க வழி வகுத்தது. இதன் பயனுகத்தான் அண்ணுமலை பல்கலைக்கழகத்திலும் பார்க்க பரந்த ஒரு பாடத்திட்டத்தை நாலாம் தசாப்த ஆரம்பத்திலேயே இலங்கைப் பல்கலைக் கழகத்துக்குரியதாகத் தீட்டினர்.

இலக்கிய வரலாற்றை வரலாற்று ஓட்டத்தில் படிப்பிக்க, படிக்க முயன்றவர் ஈழத்து இலக்கிய வரலாறு பற்றியும் எழுத முன்வந்தார்.

'பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாய்நாட்டிற்கூட தமிழ் குனிந்து நின்று அல்லலுற்றுக் கிடந்தகாலை ஈழ நாட்டு தமிழ்ச் சேய்களான நாவலர், தாமோதரம்பிள்ளை முதலிய பெரியோர்கள் தமிழ்ப் பணியில் முனைந்து நின்று தமிழை வளர்த்தார்கள்' என இரண்டரைத் தசாப்தங்களுக்கு ஈழம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறுமானம் மிக்க தோற்றப்பாடுகளைக் கொண்டிருந்தது என இனங் காட்டினர்.

இத்தகைய நோக்கங்கள் அளித்த பலத்தினாலேதான் 'தமிழை, மொழியமைப்பாக' இலக்கியக் கோவையாக, நாகரிக முறையாக விளக்க முடிந்தது. இத்தகைய விளக்க முறையினாலேதான் மரபு வழி வந்த அறிஞர்கள் தமிழை சைவமாகமாத்திரமே கண்டு கயிற்றரவுப் பட்டு நின்ற காலத்திலே அதற்கு எதிராக சமயத்திலிருந்து தமிழைப் பிரித்துப் பரந்த முறையிலே நோக்கினர்.

சமயத்திலிருந்து தமிழைப் பிரித்துப் பார்த்ததன் விளைவே 'முருக வணக்கம்' என்ற கட்டுரையாகும். இது தோன்றியதற்கான அவரது பண்புகளை மேலே கூறியவாறு அமைந்தது போல, ஈழத்து அரசியல் நிலையும் சாதகமாக இருந்ததா என்பதும் நோக்கப்பட வேண்டியதாகும்.

தமிழகத்துப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாக இருந்தவர்களில் சிலர் மேனாட்டுக் கல்வியைப் படித்தவர்கள். மேனாட்டு நாகரிகங்கள் ஆராயப்படும் 'முறையியலை' நன்கு தெரிந்தவர்கள். ஆனால் தமிழ் நாட்டு அரசியலும் சூழலும் அவர்களைக் குறிப்பாக தமிழை, தமிழாகச் சமயமாக தமிழின் தொன்மையைக் காப்பாற்றும் ஆராய்ச்சி முறையாகவே பார்க்கத் தூண்டியது. அவர்களது நிலை இவ்வாறு அமைய ஈழத்தில் பெரும்பான்மை இனத்தவர் தமிழின் தொன்மையை மட்டுமோ அல்லது அதன் புதுமையையோ அடித்து

கூறுவதில் அக்கறையில்லாதவர்கள். எனவே இங்கு அமைந்த அரசியல் சூழல் உண்மையான மேனாட்டு முறையியலை அடிப்படையாகக் கொண்டு தமிழை ஆராய முட்டுக்கட்டையாக அமையவில்லை. இந்நிலையை 1956 ஆம் ஆண்டில் நடந்த அரசியற் செயற்பாடுகள் மேலும் ஊக்குவித்தன. இந்த அரசியல் செயல்பாடுகள் பற்றி அலைகளுக்கு அப்பால் இருந்து டாக்டர் கூறியதன் சுருக்கம் பின்வருமாறு;

ஜனநாயக சுதந்திர வளர்ச்சிக்கான போராட்டத்திலே இலங்கையில் 1956 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க மாற்றத்தை எட்டிய காலமாக உள்ளது. பிரிட்டிஷ் கப்பல் தளங்களைத் திருப்பிப் பெறுவதிலும், அந்நிய நிறுவனங்களை தேசிய மயமாக்குவதிலும் 1956 ஆம் ஆண்டு தேர்தல்களில் வெற்றியீட்டிய ஜனநாயக சக்திகள் பெரும் அக்கறை காட்டின. இந்த நிலைகள் பொதுப்பட முன்னேற்றமான அரசியல் சிந்தனையாளருக்குச் சாதகமாக அமைந்தன.

இவ்வாறு சுதேசியப் பற்றும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை வேட்கையும் மேலோங்கிய காலமாக இக்காலப்பகுதி அமைந்தது.

,எத்தனையோ தமிழர் ஆங்கிலத்தில் பிறந்து ஆங்கிலத்தில் வளர்ந்து ஆங்கிலத்தில் கல்வி பயின்று ஆங்கிலத்தில் மணம் முடித்து ஆங்கிலத்தில் வாழ்க்கை நடாத்தி ஆங்கிலத்தில் இறந்து போகின்றார்'

இந்த வாசகங்களில் அவரது சுதேசிய உள்ளம் மனம் நொந்து வெதும்பிய தன்மையை அறிய முடிகிறது. அந்த உணர்ச்சிக்கு வியாக்கியானம் அனுவசியம். அவர் வாசகங்களே அதற்கு உரைகல்.

இந்த தேசிய விழிப்புணர்ச்சியின் பின்னணியில், அவரிடம் வரலாற்றுப்பொருள் முதல்வாத நோக்கு காணப்பட்டது அதிசயிக்கத்தக்கது அல்ல. இந்நோக்கின் அறுவடையே 'முருக வணக்கம்' என்ற கட்டுரை.

அவரது தனிப்பட்ட நோக்கும், காலத்தின் போக்குமே அவரது படைப்புக்களின் உந்து சக்திகளின் ஒரு தெறிப்பே 'முருக வணக்கம்'.

இந்த 'முருக வணக்கம்' தான் ஈழத்து பல்கலைக்கழக மட்டத்தில் முதன் முதலாக தமிழ்த் துறையினரால் செய்யப்பட்ட முதலாவது வரலாற்றுப் பொருள் முதல்வாத நோக்குடைய படைப்பு. இதனைப் பின்னணியாகக் கொண்டே ஈழத்து பல்கலைக்கழக தமிழ்த்துறையில் வரலாற்றுப் பொருள் முதல்வாத நோக்குடைய படைப்புக்கள் வெளி வந்தன. இது வரலாற்றுச் செய்தி.

வரலாற்றுரீதியான ஒப்பியல் சான்றுகள், புதைபொருள் ஆராய்ச்சிச் சான்றுகள், மொழியியல் சான்றுகள், இலக்கியச் சான்றுகள் ஆகியவற்றை பயன்படுத்தி ஆய்வு செய்யும் முறையியலை அடிப்படையாகக் கொண்டே 'முருக வணக்கம்' என்ற கட்டுரை எழுதப்பட்டது. இவ்வாறு பல தரவுகளைப் பயன்படுத்துகின்ற ஆய்வுமுறை இவரிடம் காணப்பட்டாலும் ஆராய்ச்சிக் கருத்துக்களை தரும் தன்மை காணப்பட்டது போல, அதிலிருந்து ஒரு முடிவினை வற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறுத்தும் தன்மை அவரிடம் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

எனினும் இக்கட்டுரையில் காணப்பட்ட பொருள் முதல் வாத நோக்கினாலேயே இது முக்கிய கணிப்பினைப் பெறுகின்றது. அந்நோக்கின் தன்மை அறிவதற்கு இங்கு ஒரு 'பதம்' பார்ப்போம்.

'முருகனின் இரு மனைவியருக்கும். கருத்து முதல்வாத அடிப்படையில் சமய விளக்கத்தினை அளிப்பார்கள் ஆன்மீக வாதிகள். ஆனால் இவர் சுமேரியாவிலும், தமிழ்நாட்டில் ஆங்கிலேயர் காலம் வரையிலும், வழக்கில் இருந்ததான, கடவுளருக்குச் சீதனம் கொடுத்து ஒரு மனித இளைஞனுக்கு மணம் முடிப்பது போல இளங் கன்னியரை முடித்துக் கொடுக்கும் வழக்கத்தினை சான்றாகக்கொண்டு தன் விளக்கத்தினை அளிக்கிறார். இவ் விளக்கத்தால் 'அரசனொருவன் மாளிகையில் பட்டத்தரசியும் அவன் வைப்பாட்டியரும் இருப்பது போலவே கோயிலில் முதன் மனைவியும் மற்றும் பெண்களும் இருந்தனர். எனவே வள்ளியும் அக்கால வழக்கப்படி முருகனுக்கு மணம் முடித்துக் கொடுத்ததாகப் பாவிக்கப்பட்டு கோயிலில் விடப்பட்ட வேட்டுவக் கன்னிகையே என்று நாம் கருத இடம் உண்டு.'

இவ்வாறு வள்ளியின் மனைவித் தன்மைக்கு விளக்கம் அளித்ததுபோலவே பக்த சிரோமணிகளால் எடுத்துக் கூறப்படும் மீராபாய் கதைக்கு அவர் அளித்த விளக்கம்:

'உண்மையில் மீராபாய் தான் முடிக்க வேண்டுமென்று காதல் கொண்டு நெட்டுயிர்த்தது கிருஷ்ணனையன்று; அக்காலத்துச் சிறந்த அரசனுய் விளங்கிய முகலாய அரசனையே. முகலாயனை மணப்பதை இந்துக்களாகிய பெற்றோர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தினாலேயே அவ்வாறு சித்தப் பிரமை கொண்டாள். அவள் கண்ணுக்குக் கண்டதெல்லாம் அப்பராயிற்று' (நந்தனார் சோதியில் கலந்தது எல்லாம் சுத்தப் பொய். அவனைப் பிராமணர்கள் நெருப்பில் இட்டுக் கொளுத்தியிருக்க வேண்டும் என்று நந்தனார் பற்றிக்கூறும் போது கூறுவாராம்.)

இத்தகைய புதுமை துலக்குவதும், உலகியல் அநுபவத்துடன் ஒத்துப்போவதும் ஆகிய கருத்துக்களைக் கூறியதினாலேயே தான் அக்கட்டுரைக்கு மரபு வழிவரும் கண்மூடி கட்டுப்பெட்டிகளால் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. ★

சகலவிதமான

சித்திர, விளம்பர வேலைகளுக்கு

சித்திர நிலையம்

ஓவியர். இரா. ஸ்ரீபதி

690, ஆஸ்பத்திரி வீதி யாழ்நகர்.

ஒரு கதையின் முடிவு எப்படியிருக்க வேண்டும்?

'நந்திமகன்'

சில வாரங்களுக்கு முன்பு இலக்கிய நண்பர்கள் சிலரைச் சந்திக்க தேர்ந்தது. அந்தச் சந்திப்பின்போது நண்பரொருவர் தாம் சமீபத்தில் வாசித்த ஒரு கதையைக் கூறினர். கேட்டவர்கள் இலக்கியதாகம் கொண்டவர்களல்லவா? ஆகவே அதனையொட்டி அச் சிறுகதையைப்பற்றி ஒரு விமரிசனமே நடந்தது. ஒரு நண்பர் கதையின் முடிவைப் பற்றி மிகவும் கண்டித்தார். வேறென்றுமில்லை. அக்கதையின் நாயகியாக வரும் இளம்பெண், ஆடவன் ஒருவனது மனிதாபிமானமற்ற செய்கைதளினால் மனமுடைந்து தற்கொலை செய்துகொள்கிறாள். அப்பெண்ணை அவ்வாறு சாகடித்ததன் மூலம், வளரும் முற்போக்கு இலக்கியத்திற்கு ஒரு இழப்பை ஆசிரியர் ஏற்படுத்திவிட்டாரென்றும், அப்பெண்ணை வாழவைத்து அதன் மூலம் வாழ்க்கையை எதிர்நோக்கும் மனோவலிமையும் வாசகர்கள்—பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் ஏற்படுத்தத் தவறிவிட்டாரென்றும் சாடினர். நசுக்கப்பட்டவர்கள், வாழ்க்கையில் கொடுமைகளுக்காளாகி விரக்தியடைந்தவர்கள் கதாபாத்திரங்களாக வரும்போது அவர்களை வாழவைக்க வேண்டிய கடமை சிருஷ்டியாளனுக்கு இருக்கவேண்டும் என்று ஒரு கருத்து இன்று மேலெழுந்து வருவதை இலக்கிய உலகில் பரிச்சயமானவர்கள் அவதானித்திருப்பார்கள். உண்மை. வரவேற்கப்பட வேண்டிய ஒரு கருத்து இது. ஆனால் இதுவே, இன்று சிலர் நினைப்பதுபோல, ஒரு கதையின் போக்கைக் கட்டுப்படுத்தும் 'விதியாக' அமைந்துவிட முடியாது. இத்தகைய கோஷங்களும் புறக்கணிப்புகளும் அந்த அளவுக்கு அமையும்போது இலக்கிய வளர்ச்சிக்கு ஊறு ஏற்பட முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதும் இக் கட்டுரையின் நோக்கங்களில் ஒன்று.

ஒருவன் தான் அனுபவித்தவற்றைப் பின்பும், பிறரும் நுகர்வதற்காகச் செய்யும் முயற்சியும் அம்முயற்சியின் விளைவுமே கலை எனில், எழுத்தாளனும் ஒரு கலைஞனாகிறான். ஆனாலும், பிற கலைஞர்களிலிருந்து ஒரு நோக்கில் எழுத்தாளன் வேறுபடுகிறான். ஆம். இங்கே மிக முக்கியமானதொரு நோக்கம் அவனுடைய படைப்பில் இழையோடுகிறது. தனது அனுபவங்களைப் பங்கு கொள்ளும் அதே நேரத்தில் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவுகளையும் தனிமனித சமூகப் பாதிப்புகளையும் ஆராய்வதனூல், வாழ்க்கை உயர்வடைவதற்கான சில வழிகளையும் 'படிப்பினை'களையும் சுட்டிக் காட்டி சமுதாய உயர்வுக்கு வழிசமைக்கிறான். வெறும் பொழுதுபோக்கு அம்சமாகத் தனது படைப்புகள் இருப்பதை எந்தவொரு சிறந்த படைப்பாளியும் விரும்புவதில்லை. ஏனெனில் ஒவ்வொரு 'உண்மையான' படைப்பாளியும் தனது படையல் அமரத்துவம் பெறுவதையே விரும்புகிறான்.

சமுதாய — தனிமனித உணர்ச்சிப் போராட்டங்கள் ஏற்படுத்தும் பின்னணியில், அங்கே நடைபெறும் நியாய அநியாயங்களைச் சுட்டிக்காட்டி வாசகனின் மனதில் நியாயத்தின் தேவைகளை, சமூகக் கொடுமைகளை எதிர்க்கும் தார்மீக பலத்தை — தனிமனித அனுதாபங்களை ஏற்படுத்தும் முறையில், ஒவ்வொரு சுயமாகச் சிந்திக்கும் எழுத்தாளனும் வேறுபடுகிறான். இந்த முறையையொட்டியே அவன் உருவாக்கிய பாத்திரங்களின் வாழ்க்கையும் அமைகிறது. ஆகவே ஒரு கதையின் முடிவு எழுத்தாளனின் உரிமையாகிறது எழுத்தாளன் ஒரு கலைஞன். கலை என்பது அனுபவம்; அது கட்டுப்பாட்டுக்கு அடங்குவதில்லை; இயற்கையே அதனுடைய அடிநாதம். இதையே அல்பேர்ட் கெமு என்ற அறிஞனும் 'உண்மை என்பதையும் தனிமனிதனின் சுதந்திரம் என்பதையும் தவிர எந்தவித அடிப்படைகளுமே இலக்கிய ஆசிரியனுக்கு வேண்டுவதில்லை' எனத் தன்னுடைய பாணியில் கூறியிருக்கிறான். இந்த இடத்தில் நமக்கு இன்னொரு சந்தேகம் பிறக்கலாம். ஒவ்வொரு எழுத்தாளனும் ஏன் ஒரு குறிப்பிட்ட முடிவை நோக்கித் தன் பாத்திரங்களை அழைத்துச் செல்ல வேண்டும்? ஒவ்வொரு எழுத்தாளனுக்கும், உண்மையாகவும் கட்டாயமாகவும் பதில் சொல்லவேண்டிய அவசியம் இங்கேதான் எழுகிறது. ஏனெனில், தகுந்த காரணங்காட்ட முடியாத எதுவுமே ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒரு நீலையை, வெகுவேகமாக வளர்ந்துவரும் விஞ்ஞான ரீதியான அறிவு வளர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறது.

'மகிழ்ச்சியான முடிவுதான் வாசகர்களுக்கு விருப்பம் (மெலோ டிரமா) அதனால் அவ்வாறு எழுதுகிறேன்' என்றோ, 'நிறைவேறாத ஒன்றுக்குத்தான் அனுதாபம் உண்டு. மதிப்பு வரும்' என்றோ, 'வாழ்வே மாயை. இதில் என்ன இருக்கிறது? ஏதோ எழுதுகிறேன்' என்றோ, 'இயற்கை நிகழ்ச்சிகளின்படி பாத்திரங்களைச் சஞ்சரிக்க விட்டிருக்கிறேன்' என்றோதான் அநேகமாகப் பதில் கிடைக்கும். இத்தகைய பதில்களைச் சொல்பவர்களால் திடமான—சமுதாய உயர்வுக்கான நோக்கங்களை எப்படிச் சிந்திக்கத் தெரிந்த வாசகன் மனதில் புகுத்தமுடியும்? இந்த நிலையிலேதான், எழுத்தாளனே நோக்கி அவனது அடிப்படை உரிமைகளையே பாதிக்கக்கூடிய கோஷங்கள் எழுப்பப்படுகின்றன. பதில் சொல்ல வேண்டிய உரிமை எழுத்தாள வர்க்கத்தைச் சார்ந்ததாகிறது. அவ்வாறெனில், ஒரு எழுத்தாளன் தனது பாத்திரங்களுக்குரிய முடிவை குறிப்பிட்ட ஒரு முறையில் அமைப்பதற்கு ஏதாவது தர்க்காதீயான உண்மைக்குப் புறம்பில்லாத காரணங்களைச் சொல்லமுடியுமா? ஆம். முடியும்.

ஒரு எழுத்தாளனின் நோக்கம் தனது படைப்பின் மூலம் சில தாக்கங்களை வாசகன்மீது ஏற்படுத்துவது என நாம் முன்பு கண்டோம். ஒருவகையில் பார்க்கப் போனால் இதை ஒரு மனோதத்துவ யுகம் என்று சொல்லலாம். செய்த ஒரு தவற்றிற்காக ஒரு குழந்தையை நாம் இரண்டுவிதமாகத் தண்டிக்க முடியும். ஒன்று, நேரடியான-உடல் ரீதியான தண்டனை. மற்றது, இத்தகையவொரு தண்டனையையும் அதனாலேற்படும் துன்பத்தையும் காட்டுவது. முதலாவது வழி, பயத்தினால் திருத்துவது. இரண்டாவதுவழியில், தனக்கும் இவ்வாறு நடக்கும் என்ற பயத்தையும் துன்பத்தையும் மனதில் அனுபவிக்கச் செய்வது. இங்கே மன உணர்ச்சிகள் பங்கு பெறுகின்றன. சிந்தனை ஏற்படுகிறது. ஏற்படும் பலனும் நீண்ட நாள் நிலைத்து நிற்கிறது. கிட்டத்தட்ட இதைப்போன்றதே எழுத்தாளன் ஏற்படுத்தும் 'ஸைக்கோலஜிக்கல் வார்ஃபயர்' ஒரு கதையில் வரும் பாத்திரங்களில் முக்கியமாக இரண்டு வகையான பாத்திரங்களின் முடிவு வாசகனின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒருவகை, வாழ்க்கையில் சோதனைகளுக்கும் கொடுமைகளுக்கும் ஆளானது. மற்றவகை, இவற்றிற்குக் காரணமாயிருக்கும் பாத்திரங்கள். இதற்குக் காரணம், இத்தகைய அனுபவங்கள் வாசகனது வாழ்க்கையிலும் ஏற்படுவதே. இந்த ரீதியில் பார்க்கும்போது எழுத்தாளனுடைய நோக்கில் இருவிதமான வாசகர்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள், ஒரு சாரார், தமது உண்மையான வாழ்க்கையிலும் கெட்டவர்களாக, சமூக விரோதிகளாக அல்லது அத்தகைய மனப்பான்மை கொண்டவர்களாக வாழ்பவர்கள். இன்னொரு சாரார், நசுக்கப் பட்டு, வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் அலைப்புண்டு துன்பப்படுபவர்கள். ஒரு சமூகம் நன்முக வாழவேண்டுமானால், இந்த இரு சாராருமே நல்வாழ்க்கை வாழ வேண்டியது அவசியமாகிறது. துன்பப்படுபவர்களுக்கு மனோவலிமையை அளித்தால் மட்டும் போதாது. அவர்கள் வாழ்வதற்கான ஒரு களத்தையும் அமைத்துக் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. முன்னதிலும் பார்க்க பின்னதான களமமைக்கும் வேலை சிரமமானது. ஏனெனில் இங்கே ஒரு அம்சமாகச் சமூகக் குறைபாடுகளுக்குக் காரணமானவர்கள் — குற்றவாளிகளையல்லவா திருத்தி மனிதாபிமானமுள்ளவர்களாக மாற்ற வேண்டியிருக்கிறது. நோயை வளரவிட்டு மாற்றுவதிலும் பார்க்க வரவிடாது தடுப்பது சிறந்ததல்லவா? இத்தகைய சமூகத் தேவைகளே ஒரு எழுத்தாளனுடைய பாத்திர அமைப்பு முறைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய இயற்கை அரண்களாகப் பரிணமிக்கின்றன.

குற்றம் புரிபவர்களை அல்லது அத்தகைய மனப்பான்மையுள்ளவர்களை தனது எழுத்தின் மூலம் திருத்த வேண்டும் என்று ஒரு எழுத்தாளன் நினைக்கும் பொழுது அவனுடைய கதையில் வரும் கொடுமைக்குள்ளாகும் பாத்திரங்களை அவன் தத்ரூபமாகச் சித்தரித்துக் காட்ட வேண்டியிருக்கிறது. அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் மனப் போராட்டங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகனின் மனதில் பதியும் வண்ணம் எழுதவேண்டியிருக்கிறது. இத்தகைய மனப்போராட்டங்கள் மனிவெலிமையற்ற ஒரு வனே வாழ்க்கையின் எந்த நிலைக்குத் தள்ளமுடியும் என்று சுட்டிக் காட்டவேண்டியிருக்கிறது. இத்தகைய ஒருவனைச் சமூகக் கட்டுதிட்டங்களும் நெருக்கடிகளும் எவ்வாறு நசுக்கிவிட முடியும் என்று காட்டி, இத்தகைய சம்பிரதாயங்கள் இன்றும் நமது சமூகத்திற்குத் தேவையா என்று வினவுவதும் அவனது கடமையாகிறது. இவற்றின் மூலம் குற்றவாளியின் உள்மனத்திற்கு மறைமுகமாக எழுத்தாளன் இடித்துக் காட்டுகிறன். அவனுடைய மனத்தின் அடியிலே உறைந்து கிடக்கும் நல்ல நினைவுகள் விழித்தெழுவதற்கு படைப்பாளி துணை புரிகிறன். இத்தகைய தார்மீகப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு எழுத்தாளன் தனது கதையில் வரும் நசுக்கப்பட்ட ஒரு பாத்திரத்தைச் சாகவிடும் பொழுது அவனது செயல் நியாயமானதாக ஆகிவிடுகிறது. சில சமயங்களில் இந்நிகழ்ச்சி கதையின் உயிரோட்டத்திற்கு வலுக்கொடுப்பதாகவும் அமைந்துவிடுகிறது.

இது போலவே நசுக்கப்பட்டவர்களை - கொடுமைக்கு ஆளானவர்களை வாழவைக்க விரும்பும் ஒரு படைப்பாளி தனது பாத்திரப்படைப்பின் மூலம் வாசகன் மனதில் மனிவலிமையை ஏற்றி தார்மீக உணர்வை, போராட்ட உணர்வை, எதிர்நீச்சல் போடவேண்டும் என்ற எண்ணத்தைப் பதிய வைக்கிறன். ஆகவே இன்று சிலர் நினைப்பது போல பாத்திரங்களின் முடிவு அல்ல முக்கியம். எழுத்தாளனின் நோக்கமே முக்கியம்.

தனிமனித சமுதாயக் கொள்கைகளும் கோட்பாடுகளும் காலதேச வர்த்தமானத்திற்குட்பட்டவை. தனிமனிதனுக்கும் அவன் வாழ்ந்த காலத்துச் சமுதாயத்திற்கும் இடையில் ஏற்பட்ட தாக்கங்களின் விளைவாக எழுந்தவை. ஆகவே இத்தகைய தனிமனித, சமுதாயக் கொள்கைகளும் கோட்பாடுகளும் வேற்று கலாசார நாகரிக பொருளாதார அமைப்பைக் கொண்ட சமுதாயத்தில் நுழையும்போது அவை சில மாற்றங்களுக்கு ஆளாகவேண்டிய அவசியத்திற்கு ஆளாகின்றன. அல்லது நிராகரிக்கப் படுகின்றன. நமது சமூகச் சீரமைப்பிற்காக இத்தகைய கொள்கைகளையும் கோட்பாடுகளையும், நமது சமூக அமைப்பையும் மக்களின் பாரம்பரியங்களையும் கருத்திற் கொள்ளாது, நூற்றுக்கு நூறு அப்படியே பின்பற்றும்பொழுது நம்மால் நமது சமூகத்திற்கு நன்மை கிடைக்காது போய்விடுகிறது. மாறாக, ஒரு தனிமனிதனின் அடிமைகளாக மட்டுமே வாழ முற்படுகிறோம். தர்க்க வாதங்களுக்கு அப்பாற்பட்ட இத்தகைய தனிமனித வழிபாடுகள், அரசியல் பொருளாதார நெருக்கடியிடையே சிக்குண்டு சென்றவழி செல்லும் மனிதர்கள் பரந்துபட்ட அடிப்படையில் காய்தல் உவத்தல் இன்றிச் சிந்திக்கப் பழகாமை இவையே தவறான கருத்துப் பரவல்களுக்குக் காரணமாகின்றன. நாமோ, கண்ணை மூடிக் கொண்டு எதிர்வழியில் நடந்து கொண்டிருக்கிறோம். அதாவது பின்னேக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்! ★

நாகரீக உலகின் புதிய பாணி
அது -'ஓரியண்ட'லின் தனிப் பாணி

ஓரியண்டல் சலூன்,
182, முதலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11

நவநாகரீக சிகையலங்காரத்திற்கு நனிசிறந்த இடம்

ORIENTAL SALOON
182, First Cross Street,
COLOMBO - 11

★ ★ ★

நல்லெண்ணெய்
மிகச்சுத்தமான
யாழ்ப்பாணம், நல்லெண்ணெய்
மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mallikai *Registered as a Newspaper in Sri Lanka*
AUGUST 1973 9TH ANNIVERSARY NUMBER

அலுமினிய, வெண்கலப் பாத்திரங்கள்
இல்லங்களை மாளிகைகளாக்குகின்றன

தொலைபேசி : 7048

குடும்பப் பெண்கள் எப்பொழுதும்
"யாழ் மார்க்" என்றுதான்
கேட்டு வாங்குகிறார்கள்.

காரணம் :

- "யாழ் மார்க்" மிகச் சிறந்த ரகம்
- "யாழ் மார்க்" நீண்ட காலம் பாவிப்பது
- "யாழ் மார்க்" சிக்கன வாழ்வுக்குச் சிறந்தது

யாழ்மார்க் பாத்திரங்கள்

தயாரிப்பாளர் :-

யாழ் மெற்றல் இன்டஸ்ட்ரீஸ்

250 – 254, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

★

தொலைபேசி : **26150**

கொழும்புக் கிளை :

63, பாங்ஸால் வீதி,
கொழும்பு 11.

234A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும் வெளியிடுபவருமான சபாரத்தினம் அவர்களால் மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும்—அட்டை வ. மா. கூட்டுறவு அச்சக நூற்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org